# பூச்சியப் படுகொலைகள்






மார்ச் March 13 - March 19, 2011 பக்கங்கள் - 28 25.00

சுடர்ஒளி

THE SUDAROLI வார மலர்





# இலங்கை ஆசியாவின் அதிசயமாகுமா?

## ஆளைக் கொல்லும் அழகு

# பூச்சியப் படுகொலை



2006.08.14. நான் மறக்க நினைக்கும் நாள். மாவிலாறு வறண்டு வெடித்துக் கிடந்த காலப்பகுதி. விவசாயிகள் நெற்பயிர்களின் உயிர்களுக்காக உயிர்ப்பிச்சை கேட்டு உண்ணாவிரதத்தைத் தொடங்கியிருந்தார்கள். குளம் தன் கதவுகளை இறுக்கி மூடிக்கொண்டது. அதன் மடைதிறப்பு வேள்விக்காக ரவைகளைச் சாப்பிட்டு வளர்ந்தவர்கள் ஏ.கே.-47களைச் கையில் எடுத்திருந்தனர். வயல்கள் சூனியப் பலகைகளைத் தம் கழுத்தில் மாட்டிக் கொண்டு மிதிவெடிகளைப் பயிரிடுவதற்காக தயார் செய்யப்பட்டன.

வடக்கு - கிழக்கின் எல்லாப் பகுதிகளிலும் யுத்தம் பற்றிய கிசுகிசுக்கள் வேகமாகப் பரவின. மப்பும் மந்தாரமுமான ஒரு காலநிலை பெரும் இரத்த வெள்ளம் ஒன்றுக்கான வானிலை அறிவிப்பை பிரபல்ய்யப்படுத்தியது. ''மூன்று நாட்களில் யாழ்ப்பாணத்தைப் பிடிப்போம்'' என்ற உணர்ச்சி வாக்கு பட்டிதொட்டியெல்லாம் எழுதி ஒட்டப்பட்டிருந்தது.

நான் அப்போது ஒரு சர்வதேச அரசசார்பற்ற நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். முல்லைத்தீவு நகர்க் கரையோரம் தொடக்கம் நாயாறு வரைக்குமான கரையோர மணற்பரப்பில் அமைக் கப்பட்டிருந்த சுனாமி இடைத்தங்கல் முகாம்களில் உள்ள சிறுவர்களுடன் சந்தோஷமாய்ப் பொழுதைக் கழிப்பதே எனக்குத் தரப்பட்டிருந்த வேலை. முல்லைத்தீவின் வண்ணார்க்குளத்திலிருந்த ஒரு முகாமின் குழப்படிக் குழந்தைகளும் என் பொழுதுகளைப் பகிர்ந்து கொள்வார்கள். குழந்தைகளைப் போலவே தான் அவர்களின் அப்பா அம்மாக்களும். கதையிலும் சிரிப்பிலும் அன்பொழுகும். ஒரு சட்டிக்குள் நிரம்பச் சோறும், உப்பு மற்றும் அரைத்த மிளகாய் மட்டும் சேர்த்த மீன் குழம்பும் பல வேளைகள் என் வயிற்றைப் பூரணமாக்கியுள்ளன.

ஒரு நாள் மாலை நான்கு மணி; மணல் சூடு குறையத் தொடங்கிக் கொண்டிருந்தது. அன்றைய தினம் விடிந்ததில் இருந்து 'வண்டு' (ஆளற்ற வேவு விமானத்திற்கு இடப்பட்டிருந்த சிறப்பு பெயர் அது. 'கிபீர்' அடிக்கத் தொடங்க முன்னர் கட்டாயம் இது சுற்றும்.) சுற்றிக் கொண்டிருந்தது. குழப்படிகளுடன் மணற்பரப்புக்குள் குதித்தேன். ''.... குலை குலையாய் முந்திரிக்காய்... நரிய நரிய சுத்திவா....'' களைகட்டியது. பெற்றோர்களும் சிரித்துக் கைதட்டி ஆரவாரித்தனர். ஒரே சத்தமாயிருந்தது. திடீரென பேரிரைச்சல் ஒன்று வானைக் கிழித்துக் கொண்டு புகுந்தது. பிள்ளைகளும் பெரியவர்களும் பயப்பீதியுடன் தத்தம் குடிசைகளுக்கும், பதுங்கு குழிகளுக்கும் ஓடினர். எனக்கு அவர்களை விடப் பயம். வற்றாப்பளை நில வெளியை வானில் இருந்து விழுந்த குண்டுகள் பிளந்தன. நான் இருந்த இடத்திலிருந்து மூன்று கிலோமீற்றர் கூட வராது. நான் நினைத்தேன், எனக்குப் பக்கத்தில் விழுந்து வெடித்தது என்று. அந்தக் கணத்தில் நான் என்ன செய்தேன் என்று எனக்கே தெரியாது. விழுந்தேன். படுத்தேன். ஓடினேன். கண்டசியாய் ஒரு தரப்பாலும் தகரமும் கலந்து உருவான வீட்டோரம் குந்தியபடி கண்களை மூடிக்கொண்டு காதுகளைப் பொத்திக் கொண்டு 'கடவுளே...... கடவுளே' என்று உளறினேன்.

''அண்ணா படுங்கோ.... குப்புறப் படுங்கோ.... காலை அரையடி தூரத்தில அகட்டி நிலத்தோட ஒட்டுங்கோ, காதை நெஞ்சோட சேர்த்துப் பொத்துங்கோ'' எங்கிருந்தோ ஒரு பெண்ணின் கட்டைக்குரல் எனக்கு விமானத் தாக்குதலில் இருந்து தப்புவதற்கான பயிற்சி வழங்கிக் கொண்டிருந்தது. இரண்டு கிபீர்களும் நான்கு தடவைகள் அடித்துப் போன பின்பு எழும்பி மணலைத் தட்டிக் கொண்டு நிமிர்ந்து பார்த்தேன். கண்ணாடிக்கு முன் நின்று தலைவாரிக் கொண்டிருந்தவள் கண்ணாடியைப் பார்த்துக் கொண்டு ''சின்னாக்களோட விளையாடுறாக்கள் இப்படியா பயப்பிடுறது?'' வெட்கம் என்னைத் தலைகுனிய வைத்தது. சிரிப்பில் மறைக்க முயன்று தோற்றேன். வாகனத்தில் ஏறி ஓடிச் சேர்ந்து விட்டேன். பிறகு அந்த முகாமுக்குப் போவதென்றால் வெட்கமாய் இருக்கும். போயே ஆக வேண்டும். ஏனெனில் சம்பளம். புதிய திட்டங்களுடன் சிறுவர்களின் களத்தில் குதித்தேன். அவள் வீட்டுக்குள் இருந்து எட்டிப் பார்த்தால் குழம்பிப் போய்விடுவேன். கொஞ்ச நாட்களில் அவளும் எங்கள் கூட்டணியில் இணைந்து கொண்டாள். திவ்வியா, முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியின் விஞ்ஞானப் பிரிவில் 2006 ஆம் ஆண்டுக்கான கெட்டிக்கார மாணவியாம். அவள் விபரம் சொன்னாள். அதிகமான அளவில் புதிய சிந்தனைகளாலும் துறுதுறு செயல்களாலும் நிரம்பப் பெற்றவள் தான் நான் பார்த்த திவ்வியா. விரைவாக மோட்டார் சைக்கிள் ஓட்டுவதில் அவளுக்கு அலாதி பிரியம். நல்ல நண்பர்களானோம். அந்தச் சமூகத்தில் ஆண்- பெண் உறவென்பது சந்தேகத்திற்கு இடமற்றது. ''நான் டொக்ரராய் வர வேணும், அதற்கான எல்லாத் தகமைகளும் எனக்கு இருக்வேணும். இது தான் அண்ணா என்ரை இலட்சியம்'' ஒரு நாள் சிறுவர்களிடம் இலட்சியம் பற்றிக் கேட்ட போது சொன்னாள். இந்த எண்ணத்தை அவளின் எல்லாச் செயல்களிலும் கண்டிருக்கிறேன். பரதம் இவளிடம் இருந்து புது ரசங்களைக் கற்றுக் கொண்டிருக்கும். மகா கெட்டிக்காரி இந்த முகாமிலிருந்த மூன்று மாதக் குழந்தைக்கும் திவ்வியா நல்ல நண்பி. என்னிடம் இருந்து அவள் எதிர்பார்த்தது நிறையப் புத்தகங்களை மட்டும் தான். பரிசளித்திருக்கிறேன்.

நம் நட்புக் காலம் இளவேனில் பொழுதுகளை அனுபவித்துக் கொண்டிருந்த போது வன்னிக்குள் யுத்தக்காற்று வேகமாக வீசத் தொடங்கியது. ஏ9 மூடப்படப் போவதாக செய்திகள் பரவுகின்றன. இளையவர்கள் காணமல் போவது பற்றிய தகவல்கள் என் அம்மாவை என்னை வன்னியை விட்டு வெளியேற்றும் பணிக்குத் தள்ளியது. உயர் கல்வியைத் தொடர்வதற்காக அங்கிருந்து புறப்பட்டேன். அந்தக் கடைசி நாள் என்னால் மறக்க முடியாதவை. பயணம் சொல்வதற்காக திவ்வியாவின் வீட்டுக்குப் போனேன். வித்தியானந்தாவில் தமிழ்த் தினப் போட்டி நடக்குதாம். அதுக்குப் போயிட்டாள். அவளது அம்மா சூடான தேநீரோடு விடை தந்தாள்.

வித்தியானந்தாக் கல்லூரியில் முன்னிருந்த சரஸ்வதி சிலைக்கும், தேமா மரத்துக்கும் இடையில் எனது கடைசிச் சந்திப்பு நிகழ்ந்தது. நல்ல சிவப்பு நிற ரீசேட்டுடன், கையில் தலைக் கவசத்தை வைத்திருந்தபடியே என்னோடு பேசத் தொடங்கினாள். வார்த்தைகள் குறைப்பிரசவமாகின. எனக்கும் தான். அவள் எல்லா உணர்வுகளையும் மூடி மறைத்த போது கண்ணீர் வெடித்துச் சிதறியது. கதையைத் திசை மாற்றினாள். ''எங்களுக்கு அடுத்த கிழமை ஒரு வகுப்பிருக்கு போக வேணும். எல்லாப் பள்ளிக் கூடப்பிள்ளைகளும் வருவினம். நான் முல்லைத்தீவில் இருந்து உங்களுக்குக் கோல் எடுப்பன். கடிதம் போடுவேன் .....'' ஏதேதோ புசத்தினாள். என் மனமும் கண்களும் விம்மி வெடித்தன. நான்கைந்து பாடசாலைப்பிள்ளைகள் எம்மைப் பார்த்துக் கொண்டிருந்தனர். நான் விடைபெற்றுக் கொண்டேன். பாடசாலைப் படலையடியில் வந்து திரும்பிப் பார்த்தேன். மறையும் வரை பார்த்துக் கொண்டேயிருந்தாள். நான் கடைசியாக மறைந்தபோது அவளையே அறியாமல் கையசைத்தாள் என் அம்மா போல். இந்த உறவுக்கு என்ன பெயர்? இப்போதும் சொல்லத் தெரியவில்லை. மறுநாள் வன்னியை விட்டுப் புறப்பட்டேன்.

படிப்பைத் தொடங்கியிருந்தேன். நான் வந்ததும் ஏ9 பூட்டிக் கொண்டது. 14.08.2006 செஞ்சோலைக்கு கிபீர் அடித்து 60 மேற்பட்ட பிள்ளைகள் மரணித்த செய்திப்படங்களுடன் பரவியது. அன்றைய இரவு திவ்வியாவும் சிதறிப் போனாள் என்ற தகவல் நண்பன் ஊடாக எனக்குக் கிட்டியது. என் அறையைக் கண்ணீர் கழுவியது. அவள் கையெழுத்திட்ட நினைவுக்குறிப்புகளைத் திறந்து பார்த்தேன். திவ்வியா அழகாய்ச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

என் நினைவேடுகளில் காலாவதியாகிக் கிடப்பவைகளைப் பத்திரிகையொன்றுடன் பகிர்ந்து கொண்டிருக்கும் இக்காலப் பகுதியில் வெளியான செய்தி ஒன்று திவ்வியாவின் நினைவைத் துளிர்விடச் செய்தது. ''முள்ளிவாய்க்காலில் குண்டு பொழிந்த 'கிபீர்' விமானங்கள் வெடித்துச் சிதறின.'' கட்டாயம் இவை திவ்வியாவின் உயிர் குடித்தவையாகத் தானிருக்கும். ✱

ஜெரா

"…. அனேகமாக இச் சிறுமிகள் தங்கள் பெற்றோரிடம் இரண்டாயிரம் ரூபாவை வாங்கி இருக்கிறார்கள். உள்ளாடைகள் உட்பட அனைத்தையுமே புதிதாக வாங்கி இருக்கிறார்கள். பேனாக்களைத் தவிர அவர்கள் எடுத்துச் சென்ற அனைத்தும் புதியவை. அணிந்து சென்ற ஆடைகள் அனைத்தும் புதியவை. முகப்பூச்சு கிறீம் உட்பட அழகு சாதனப்பொருட்கள் அனைத்தும் புதியவை. அத்தகைய அப்பாவிச் சிறுமிகளுக்குத் தான் "பயங்கரவாதிகள்" என்று பெயர் சூட்டி குண்டு வீசினார்கள்…."

மு.திருநாவுக்கரசு.
10.08.2006. உதயன்




ரியூனீசியா, எகிப்து போன்ற நாடுகளில் தொடக்கி வைக்கப்பட்ட புரட்சிப் புயல் வேறு நாடுகளிலும் மிக விரைவாகப் பரவி வருகின்றது. இப்போது அது வடக்கு ஆபிரிக்காவில் மையம் கொண்டு அசைக்கமுடியாதது என நம்பப்பட்டு வந்த லிபிய ஜனாதிபதி மொகம்மர் கடாபியின் ஆசனத்தை ஆட்டங்காண வைத்துக்கொண்டிருக்கிறது.

1969ஆம் ஆண்டு இடிரிசின் மன்னர் ஆட்சியை புரட்சி ஒன்றின் மூலம் அகற்றிவிட்டு, பதவியைக் கைப்பற்றிக் கொண்டார் கடாபி. அன்றிலிருந்து இன்று வரைக்குமான 41 வருடங்கள் லிபிய நாட்டின் முடிசூடா மன்னனாக கடாபி விளங்கி வருகின்றார். ஆரம்பத்தில் கியூபா, வெனிசியூலா சார்பான ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான மூன்றாம் உலகப் போராளியாகவே கடாபி தன்னை இனங்காட்டிக் கொண்டார்.

விடுதலைக்காகப் போராடும் அனைத்து இனங்களினதும் கதாநாயகராகவே கடாபி ஒரு காலத்தில் விளங்கினார்.

இருந்த போதிலும் லிபியாவில் குவிந்து கிடக்கும் எண்ணெய் வளமும், சர்வதேச வணிகத்தில் சிக்கியதால் உருவான அதிகாரப் பசியும் கடாபியைச் சர்வாதிகாரியாக மாற்றியது. தன் சொந்த மக்களையே ஆயுத பலத்தினால் அடக்கியும், பல தரப்பட்ட மனித உரிமை மீறல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார். இதன் உச்சக்கட்ட வெளிப்பாடே 'லொக்கர் பி' விமானக் குண்டுவெடிப்புச் சம்பவம் ஆகும். இதில் 1200 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். தடைசெய்யப்பட்ட பல இயக்கங்களுக்கு ஆயுத உதவியும், தங்குமிட வசதிகளும் ஏற்படுத்திக் கொடுத்து அவ்வியக்கங்களுக்கு உற்சாகம் ஊட்டினார். இவரின் இத்தகைய நடவடிக்கைகள் மேற்குலக நாடுகளை பகைத்துக் கொள்வதில் முடிந்தது. 2004 வரை நீடித்த இம்முறுகல் நிலை குறிப்பிட்ட ஆண்டிலிருந்து கடாபியின் பணிவோடு தணிந்தது. 'லொக்கர் பி' குற்றப் பதிவும் தீர்த்து வைக்கப்பட்டது. இதனூடாக காலங்காலமாக நீடித்துவந்த ஐரோப்பிய நாடுகளின் லிபியா மீதான பொருளாதாரத் தடை நீக்கப்பட்டதுடன், தருணத்தைப் பயன்படுத்தி பல மேற்குலக நாடுகளின் எண்ணெய்க் கம்பெனிகள் லிபியாவுக்குள் உள் நுழைந்தன. பிரித்தானியாவில் இருந்து மட்டும் 150 கம்பெனிகள் எண்ணெய் அகழ்வுக்காக லிபியாவில் தளமிட்டன.

2011ஆம் ஆண்டுக்கு பின்னரான மேற்குசார் தொடக்கத்தில் உருவான புதிய அரசியல் ஒழுங்கு, நீண்டகால ஆட்சியாளர்கள் அகற்றப்படவேண்டும், ஜனநாயகம் மக்கள் மத்தியில் பரவலாக்கப்படவேண்டும் என்பன போன்ற கோஷங்களை வட ஆபிரிக்க மக்கள் மத்தியில் விதைத்துள்ளது. இதன் பிரதிபலிப்பே, தென்சூடான், துனீசியா, எகிப்து மற்றும் லிபிய நிலைமைகள். இந்தப் புதிய உலக ஒழுங்கின் மாற்றங்கள் குறிப்பாக எண்ணெய் வள நாடுகளுக்கும் அமெரிக்காவை மிரட்டும் சீனா, ஈரான் போன்ற நாடுகளுக்கும் மட்டுமே உரியதாகும்.




# தலைகளுக்கான போட்டி

லிபியாவில் பயிற்றுவிக்கப்பட்ட புரட்சியாளர்கள் வேலையின்மைக்காகவும், விலைவாசி உயர்வுக்கு எதிராகவும் கடந்த பெப்ரவரி 5ஆம் திகதியிலிருந்து போராடத்தொடங்கினர். பெப்ரவரி 15ஆம் திகதிக்குப் பின்னர் அது ஆயுதப் போராட்டமாகப் பரிணமித்தது. ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட குழந்தைகளின் கைகளில் கூட நவீன ரக சுடுகலன்கள் இருந்தன. கடாபியும், அவருக்கு ஆதரவான படையினரும் ஆயுதம் ஏந்திய மக்களுக்கு எதிரான மோசமான தாக்குதலை நடத்தினர். இதுவரையில் 2000இற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டு வீதிகளில் பிணங்களாகக் கிடக்கின்றனர். லிபிய விமானப் படையும் மோசமான குண்டுமழை பொழிந்து வருகின்றது. அதிகளவான எண்ணெய் வளம் கொண்ட லிபியாவின் கிழக்குப் பகுதி முழுவதும் போராட்டக்காரர்களின் கைகளில் சென்றுள்ளது. இருந்த போதிலும் இடங்களைக் கைப்பற்றல் என்பது இரு தரப்பினர் மத்தியிலும் இழுபறி நிலையாகவே மாறிவருகின்றது.

இவ்வளவுக்கும் மத்தியில் தமது அதிபர் பதவியைவிட்டு அசைய மறுக்கும் கடாபி நாளுக்கு நாள் தனது பிடிவாதத்தை அதிகரித்துக் கொண்டே போகின்றார். மக்கள் தனக்கு ஆதரவாகவே போரிட்டு உயிரிழப்பதாகவும், தான் எதற்காக நாட்டை விட்டும், தனது அன்பான மக்களை விட்டும் வெளியேற வேண்டும் எனவும், அல்கெய்டாவிடமிருந்தும், ஐரோப்பிய நாய்களிடமிருந்தும் நாட்டைக்காக்கத் தயாராகுமாறும், அதற்காக தனது ஆயுதக் கிடங்குகள் எப்போது வேண்டுமானாலும் திறந்துவிடப்படும் எனவும் சூழுரைக்கின்றார். மேலும் ஐரோப்பியப் படைகள் லிபியாவைத் தாக்குமானால் கடைசி லிபியப் பிரஜை இருக்கும் வரை போராடுவேன். இரத்தக் களரி லிபியாவில் ஓடும். நான் நாட்டை விட்டு ஓடப்போவதில்லை எனவும் கூறிவருகிறார். இது ஒரு வகையில் அவர் பயப்பிராந்தியில் உளறுவதாகவே எண்ணத் தோன்றுகின்றது. 'பைனான்ஸ் ரைம்ஸ்' வெளியிட்ட தகவலொன்றில், கடாபி திருட்டுத்தனமாக சீனா, இந்தியா போன்ற நாடுகளுக்கு அடிமாட்டு விலையில் லிபியாவில் மீதமிருக்கும் எண்ணெய் குதங்களை விற்றுவருவதாகத் தெரிவித்துள்ளது.



இதற்கிடையில் கடாபி பொதுமக்கள் மீது தொடரும் மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளில் இருந்து பொதுமக்களைக் காக்கும் நோக்குடன் அமெரிக்கா 'ஒப்பரேசன் ஒடிசி டண்' என்ற பெயரில் ஒரு இராணுவ நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது. இரண்டாயிரம் துருப்புக்களுடன் இரு அமெரிக்க விமானம் தாங்கிக் கப்பல்கள் லிபியாவுக்கு அண்மையில் கடலில் வலம் வருகின்றன. ஈராக் போன்று மனிதாபிமான நடவடிக்கை ஒன்றுக்குத் தயராகுமாறு ஒபாமா ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்குக் கோரிக்கை விடுத்துள்ளார். பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகள் இதற்குச் சம்மதித்துள்ளன. ஆனாலும் அரபு லீக் உட்பட ஈரான், துருக்கி போன்ற நாடுகள் அமெரிக்காவின் இத்தகைய நிலைப்பாட்டை எதிர்த்துள்ளன. வெனிசியூலா அதிபர் பேச்சுக்கான பொதி ஒன்றினை முன்வைத்துள்ளார். இதனைக் கடாபி ஏற்றுக்கொண்டபோதிலும், போராட்டக் குழுக்களும், மேற்கு நாடுகளும் கடாபி ஆட்சியிலிருந்து விலகவேண்டும் என்பதுதான் தமது ஒரே முடிவு என்பதில் உறுதியாய் இருக்கின்றன.

லிபியாவில் மேற்கு நாடுகளின் கைகளில் இருக்கும் எண்ணெய் வயல்களைப் பாதுகாத்தல், கடாபியிடம் இருக்கும் இரசாயன ஆயுதங்களைக் களைதல், லிபிய இராணுவம் சிதைவுற்றுவரும் நிலையில் வேறு எந்த இஸ்லாமிய சார்பான இயக்கங்களும் தலையெடுக்காமல் இருக்க பலமான இராணுவக் கட்டமைப்பை, புலனாய்வுக் கட்டமைப்பை உருவாக்கல் போன்றவற்றை முன்வைத்து அமெரிக்கா திடீர் இராணுவப் பாய்ச்சல் ஒன்றை மேற்கொள்ளப்போவதாகவே ஊகிக்க வேண்டியுள்ளது.

இதற்குச் சாதகமான நிலைமையே லிபியாவிலும் ஐ.நாவிலும் ஏற்பட்டு வருகிறது. போராட்டக்காரர்கள் முன்னாள் உள்துறை அமைச்சர் உட்பட அமைச்சுப் பதவிகளிலிருந்து விலகியவர்களையும் சேர்த்து 'தேசிய லிபியன் கவுன்சில்' என்ற கட்சியைத் தொடங்கியுள்ளதுடன், தாம் கைப்பற்றிய பிரதேசங்களில் இடைக்கால அரசையும் நிறுவி வருகின்றனர். ஐ.நா. தனது அனைத்து உறுப்புரிமைகளிலிருந்தும் லிபியாவை நீக்கியுள்ளதுடன் பொருளாதாரத் தடை உட்பட ஐந்து தடைகளை லிபியா மீது கொண்டுவந்துள்ளது. லிபியாவுக்கான ஐ.நா. தூதரகம் மூடப்பட்டதுடன், அந்நாட்டுக்கான நல்லெண்ணத் தூதராக இருந்த கடாபியின் மகள் ஆயிஷாவின் பதவியையும் ஐ.நா. பறித்துள்ளது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கடாபியைக் கைதுசெய்வதற்கான பிடியாணையைப் பிறப்பித்துள்ளதுடன், உலகில் ஏனைய நாடுகளின் வங்கிகளில் இருக்கும் கடாபியின் கணக்குகளை முடக்கும்படியும் சகல நாடுகளையும் கேட்டுக்கொண்டுள்ளது. இதன் முதற்கட்டமாக அமெரிக்கா தன்வசமுள்ள 1.44 லட்சம் கோடி பெறுமதியான கடாபியின் சொத்துக்களை முடக்கியுள்ளது.

தற்போதைய லிபிய நிலைமைகளை வைத்துப் பார்க்கும்போது ஈரான், இந்தியா, சீனா, இலங்கை போன்ற நாடுகள் மட்டுமே கடாபிக்கு ஆதரவாக பச்சைக்கொடி காட்டியுள்ளன. மறுபக்கம் அமெரிக்காவின் மனிதாபிமான நடவடிக்கைக்கான சாத்தியங்களும் அதிகரித்துவரும் அதேவேளையில், ஏனைய ஐரோப்பிய நாடுகளால் கடாபியின் கழுத்து நெரிக்கப்படும் நிலையே உருவாகிவருகின்றது. லிபியாவில் நிகழப்போகும் திடீர் மாற்றங்கள் இன்னொரு ஈராக்கை உருவாக்கும் அல்லது எகிப்தை உருவாக்கும். முதல் தரமான எண்ணெய் வியாபாரி ஒருவர் லிபியாவுக்கு தலைவராகப் போகிறார். அதற்கான முதற்கட்டப் பணிகளே மேற்குலக நாடுகளால் மிகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ✱

**அட்சயன்**

# நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளை முறைப்படி உள்ளெடுத்தல் அவசியம்



**கேள்வி** - இலங்கையில் எலிக்காய்ச்சல் பரவுவதாக பத்திரிகைகள் மூலம் அறிகிறோம். எலிக் காய்ச்சல் என்றால் என்ன? இது எப்படி ஏற்படுகிறது? இதனைக் குணப்படுத்த முடியாதா?

**பதில்** - எலிக்காய்ச்சல் என்பது ஸ்பைரோசீற் (Spiro chete) வகையை சார்ந்த ஒருவகை பக்ரீறியாவினால் உருவாக்கப்படும் ஒரு தொற்றுநோயாகும். இதனை லெப்ரோ ஸ்பைரோசிஸ் (LEPTOSPIROSIS) என அழைப்பர். எலிக்காய்ச்சல் பொதுவாக எலி (வளை வாழ் உயிரினங்கள்) நாய், ஆடு, செம்மறியாடு போன்றவற்றால் பரப்பப்படுகிறது. மேற்படி விலங்கினங்களை சென்றடையும் பக்ரீறியா அவற்றின் சிறுநீரகத்தை அடைந்து அங்கிருந்து சிறுநீரோடு வெளிவருகிறது. விலங்குகளின் கழிவுகள் நிலத்தை அல்லது நீரை அடைகின்றன. தொற்று ஏற்பட்ட நீரை உட்கொள்ளும் போதோ அல்லது தோற்காயங்கள் தொற்றுண்ட நீருடனோ அன்றேல் மண்ணுடனோ தொடர்புகொள்ளும்போதோ இப் பக்ரீறியாவும் மனித உடலைச் சென்றடைகின்றது. கண், மூக்கு, வாய் போன்ற உறுப்புகளில் உள்ள சீதச் சவ்வுகள் மூலமாகவும் பக்ரீறியாக்கள் தொற்றடையலாம்.

பக்ரீறியா உடலில் தொற்றியபின் 02 முதல் 21 நாட்கள் வரையான காலப்பகுதியில் நோய்க்கான அறி குறிகள் தெரிய ஆரம்பிக்கும். விலங்குகளோடு நேரடியாகத் தொடர்புள்ளவர்கள் இந்நோய் தொற்றக் கூடிய உச்சக்கட்ட அபாயமுள்ளவர்களாவர்.

இது பொதுவாக இரு அவத்தைகளை கொண்டது. (Two Phases). ஆரம்ப அவத்தையானது Flu காய்ச்சலைப் போன்ற குறிகளைக் கொண்டிருக்கும்.

தலையிடி, தசைகளில் நோவு, கண்ணில் வலி என்பன அறிகுறிகளாகும். நடுக்கத்துடனான காய்ச்சலும் இவற்றோடு சேர்ந்து கொள்ளும். கண்கள் சிவந்து நீர் வடிய ஆரம்பிக்கும். இக் குணங்குறிகள் 5-9 நாட்களில் குணமாக ஆரம்பிக்கும்.

இரண்டாவது அவத்தை, நோய் குணமாகியது போல் தோன்றிய சில நாட்களில் ஆரம்பிக்கும். மீண்டும் காய்ச்சலும் கழுத்துப் பிடிப்பும் ஆரம்பிக்கும். சில நோயாளருக்கு கண் மூளைய மற்றும் முண்ணாண் நரம்புகள் கடுமையாகப் பாதிப்படையும். (MENINGI-TIS) சிலவேளைகளில் ஈரல், நுரையீரல், சிறுநீரகங்கள் மற்றும் இதயம் போன்றவையும் பாதிக்கப்படலாம்.

ஈரல் மற்றும் சிறுநீரகங்கள் எலிக்காய்ச்சல் நோயால் பாதிப்படைந்தால் நோயாளியின் கண்கள் மஞ்சள் நிறமடையும். (JAUNDICE). இது மிக ஆபத்தான நிலையாகும்.

LEPTOSPIROSIS, குருதி, மூளைய முண்ணான் பாயம் போன்றவற்றில் பக்ரீறியாவை வளர்ப்பு செய்வதன் மூலம் (Culture) உறுதிசெய்யப்படுகிறது. ஆனால் இது கடினமான முறையென்பதால் ELISA, MAT/PCR முறை மூலமும் உறுதி செய்யப்படுகின்றது.

எலிக்காய்ச்சலுக்கு உரிய சிகிச்சையைச் சரியான நேரத்தில் பெற்றுக் கொண்டால் ஆபத்து ஏதுமின்றிக் குணமாக்கலாம். மருந்துகளுக்கு எதிர்ப்பு சக்தியுள்ள பக்ரீறியாக்கள் இந்நோயைப் பொறுத்தவரை இது வரை கண்டறியப்படவில்லை. (No resistance) பென்சிலின் மருந்துகள் மிக உபயோகமானவை. அதைவிட Doxycycline மருந்தும் மிகவும் பிரயோசனமானது.

மிகக் கடும் நோயாளர்கள், வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறவேண்டும். சிறுநீரகம், ஈரல் பாதிப்படைந்தால் DIALYSIS வழங்கவேண்டிய தேவையேற்படும். 5 முதல் 40 வீதமான நோயாளர்கள் மரணத்தைச் சந்திக்க வேண்டிவரும்.

எலிக்காய்ச்சல் வராமல் தடுப்பதற்கு தடுப்பு மருந்து (Vaccine) உண்டு. ஆனால் வருடா வருடம் எடுத்துக்கொள்ள வேண்டும். நோய் தொற்றும் ஆபத்தில் உள்ளவர்கள் அல்லது நோய் பரவும் பிரதேசத்திற்குச் செல்பவர்கள் வாரத்திற்கு ஒருமுறை 200mg Doxycycline எடுத்துக்கொள்வது நோய்த் தொற்றிலிருந்து பாதுகாப்பு அளிக்கும்.

முக்கியமாக எலிபோன்றவற்றைக் கட்டுப்படுத்துவதும் தனிநபர் சுகாதாரத்தை இறுக்கமாக கடைப்பிடிப்பதும் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளில் முக்கியமானவையாகும்.

**கேள்வி** - மருந்துக்கடைகளில் நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளை வாங்கிப் பாவிக்கக் கூடாது என எனது நண்பன் கூறுகின்றான். இது உண்மையா? ஏன்?

**பதில்** - நல்ல கேள்வி. உங்கள் நண்பர் கூறியது மிகவும் சரி. தற்காலத்தில் மற்றெல்லா மருந்துகளை விடவும் தவறாகப் பாவிக்கப்படும் (Misuse) ஒன்றாக நுண்ணுயிர் எதிர் (Antibi-otics) மருந்துகளே உள்ளன. உண்மையில் நுண்ணுயிர் எதிர் மருந்துகள் கட்டாயமாகத் தேவையற்ற சந்தர்ப்பங்களிலும் மிகச் சாதாரணமாகவே பாவிக்கப்படுகின்றன. பக்ரீறியாக்களால் உருவாகாத நோய்களுக்கும் எம்மிற் பலர் எமது எண்ணத்திற்கு ஏற்ப மருந்துக் கடைகளில் நுண்ணுயிர் எதிர் மருந்துகளை வாங்கிப் பாவிக்கிறோம். உண்மையில் நுண்ணுயிர் எதிர் மருந்துகள் எல்லாமே வைத்தியர் ஒருவரின் உரிய சிபார்சுச் சிட்டை இல்லாமல் வாங்க முடியாத மருந்துகள் தான். ஆனாலும் இந்த நடைமுறை துரதிஷ்டவசமாக பல மருந்துக் கடைகளில் பின்பற்றப்படுவதில்லை.

நுண்ணுயிர் எதிர் மருந்துகள் தவறாகப் பாவிக்கப்படுவதனால் ஏற்படும் மிக முக்கியமான எதிர்விளைவு அல்லது பாதகமான விளைவு, நோய்க் கிருமிகள் தற்போதுள்ள நுண்ணுயிர் எதிர் மருந்துக்களுக்கு எதிரான எதிர்ப்புச் சக்தியை (Resistant) பெற்றுவிடுகின்றன. எதிர்ப்புச் சக்தி கொண்ட கிருமிகளால் ஏற்படும் நோய்கள் பாவனையிலுள்ள நுண்ணுயிர் எதிர்மருந்துகளால் குணமாகாதபோது மிகச் சக்தி வாய்ந்த மருந்துகளின் தேவை அதிகரிக்கிறது. இதனால் பல விரும்பத்தகாத பக்கவிளைவுகள் ஏற்படுவதோடு பெரிய பொருள் செலவையும் சமாளிக்க வேண்டி ஏற்படுகிறது. எனவே நுண்ணுயிர் எதிர் மருந்துகளின் பாவனையை சீராக்குவதற்கு பின்வரும் விடயங்களை எப்போதும் கவனத்தில் வைத்திருங்கள்.

எந்தச் சந்தர்ப்பங்களில் நுண்ணுயிர் எதிர் மருந்துகள் தேவை என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். தயவுசெய்து நோய்வாய்ப்படும் ஒவ்வொரு முறையும் antibiotics பாவிக்க வேண்டும் என நினைக்காதீர்கள். இவை பக்ரீறியா நோய்களுக்கு ஏற்புடையதாயினும் வைரசு நோய்களுக்கு ஏற்றவை அல்ல.

நீங்கள் வைரசினால் பீடிக்கப்பட்டுள்ளபோது உங்கள் வைத்தியரிடம் Antibiotics வேண்டுமென அடம் பிடிக்காதீர்கள். மாறாக உங்களின் குணங்குறிகளை மட்டுப்படுத்தும் வழி முறைகள் பற்றி ஆலோசியுங்கள்.

வைத்தியர் குறிப்பிடும் அளவு காலம் என்பனவற்றுக்கு அமைய இந்த மருந்துகளை வைத்தியரின் சிபார்சுக்கு மாறாகக் கூட்டியோ குறைத்தோ உட்கொள்கிறோம். அத்தோடு நாட்பட வைத்துவிட்டு வைத்தியரின் ஆலோசனையின்றியும் மனம் போன போக்கில் பயன்படுத்துகின்றோம். இந்த நடவடிக்கையால் எம்மில் தொற்றியிருந்த கிருமிகள் மட்டுமல்லாமல் இன்னொருவரில் தொற்றிய கிருமியையும் Re-sistant ஆக மாற்றிவிடுகிறோம்.

வைத்தியரின் ஆலோசனை இல்லாமல் ஒருபோதும் Antibiotics எடுக்காதீர்கள். வைத்தியரால் மட்டுமே உங்கள் நோய்க்கான மிகச் சரியான நுண்ணுயிர் எதிர் மருந்தைத் தெரிவுசெய்து சிபார்சு செய்ய முடியும் என்பதை மறவாதீர்கள். கிருமிகள் பரவாமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள் தனிநபர் சுகாதாரத்தைச் சரியான வழியில் பின்பற்று வதன் மூலம் கிருமிகளின் தொற்றில் இருந்து உங்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள். கிருமிகள் உடலில் தொற்றாவிட்டால் எமக்கு Antibiotics தேவை ஏற்படாது அல்லவா?

இலவசமருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் ஜோன் பொன்னையா. நீங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரிகள்.

**இலவச மருத்துவ ஆலோசனை**

I.) சுடர்ஒளி, யாழ்.அலுவலகம்,
361,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

II.) சுடர்ஒளி,
85,ஐயந்த மல்லிமாரச்சி மாவத்தை,
கொழும்பு-14.

# மூளைக்கட்டி நோய்

மூளையில் செல்களின் அசாதாரணமான வளர்ச்சி மூளைக்கட்டி என்று கூறப்படுகிறது. இதனை முதல் நிலை மூளைக்கட்டி மற்றும் இரண்டாம் நிலை மூளைக்கட்டி என்று வகைப்படுத்தலாம். முதல் நிலை மூளைக்கட்டி புற்று அல்லாத தணிந்த நிலை (Benign) மூளைக்கட்டியாகும்.

இரண்டாம் நிலை மூளைக்கட்டி, உடலின் வேறு பகுதியில் உருவான புற்றுநோய் மூளைக்கும் பரவுதலால் ஏற்படுவதாகும்.

தணிந்த நிலை மூளைக்கட்டி மெதுவாக வளர்ச்சியடையும், அது வளரும் இடத்தைப் பொறுத்து அதனைச் சுலபமாக அகற்றிவிட முடியும். தணிந்தநிலை மூளைக்கட்டி 'சாதாரண மூளையின் பிற அமைப்புகளுக்குள் சுலபமாக நுழைந்துவிடாது. ஆனால், புற்றுநோய் மூளைக்கட்டி மிக வேகமாக வளருவதோடு அருகில் உள்ள மூளைத் திசுக்களையும் சேதப்படுத்தக் கூடியது. ஆனால் சில நபர்களுக்கு தணிந்த நிலை மூளைக்கட்டியே எமனாக மாறக் கூடிய அபாயமும் உண்டு.

மூளைக்கட்டியை அகற்றுவது எப்போதுமே மருத்துவத்துறையினருக்கு ஒரு சவாலான விடயம். 20 வயதுக்குட்பட்டோர் புற்றுநோயால் மரணமடைவதற்கு மூளைக்கட்டி ஒரு பிரதான காரணமாக இருந்து வருகிறது. ஆனால் பல வகை மூளைக்கட்டிகள் ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட சிகிச்சை முறைகளால் குணமடையச் செய்யப்பட்டிருக்கிறது என்பது உண்மை. மேலும் நவீன தொழில் நுட்பம் மூளைக்கட்டியின் தன்மையைத் துல்லியமாகக் கணிக்க உதவுகிறது.

**நோய் அறிகுறிகள்**

மூளைக்கட்டி வளரும் இடம், அதன் அளவு மற்றும் வளரும் வேகம் ஆகியவற்றைப் பொறுத்து அதன் அறிகுறிகள் அமையும். இது மூளைத்திசுவில் நேரடியாக நுழைவதால், பார்வை, இயக்கம், பேச்சு, கேட்டல், நினைவு, நடத்தை ஆகியவற்றுக்கு காரணமாகும் உள் உறுப்புகளைச் சேதமடையச் செய்யும்.

- ★ புதுவிதமான கடும் தலைவலி. காலை வேளையில் குறிப்பாக கண் விழித்தவுடன்.
- ★ விளக்க முடியாத குமட்டல் மற்றும் வாந்தி.
- ★ பார்வைக் கோளாறுகள்.
- ★ கை அல்லது காலில் மெதுவாக உணர்ச்சி மழுங்கி வருதல்.
- ★ பேசுவதில் சிரமம்.
- ★ தினசரி நடைமுறைகளில் குழப்பம்.
- ★ ஆளுமை மற்றும் நடத்தை மாற்றங்கள்.
- ★ முன்பு எப்போதும் வலிப்பு இருக்காதவர்களுக்கு வலிப்புத் தோன்றுதல்.
- ★ காதுப் பிரச்சினைகள்.
- ★ ஹோர்மோன் ஒழுங்கின்மைகள்.

# இலங்கை ஆசியாவின் அதிசயமாகுமா?



உலகின் பொருளாதார வளர்ச்சியடைந்த நாடுகளில் இரண்டாவது உலகயுத்தத்தில் பேரழிவுகளைச் சந்தித்த ஜப்பான் அதன் பின் மிக வேகமாக முன்னேறி இரண்டாவது இடத்தை வகித்து வந்தது. ஆனால் இன்று சீனா ஜப்பானைப் பின்தள்ளி விட்டு அந்த இடத்தைப்பிடித்துவிட்டது. அது மட்டுமன்றி சீனா வெகு விரைவில் முதலாவது இடத்தைப்பிடித்துவிடும் எனப் பொருளாதார நிபுணர்கள் எதிர்வு கூறி வருகின்றனர்.

ஆனால் அண்மையில் சீனாவிலிருந்து வெளிவந்த ஒரு அறிவித்தல் பலரையும் பெரும் ஆச்சரியத்துக்கு உட்படுத்தியுள்ளது. அதாவது தற்சமயம் 12 சதவீதமாக உள்ள சீனாவின் பொருளாதார வளர்ச்சி இவ்வருடத்தில் 15 வீதமாகக் கூடும் எனவும், இதனால் ஏற்படக் கூடிய எதிர்விளைவுகளைத் தடுக்க அதை 8.5 வீதமாகக் குறைக்கப் போவதாகத் தகல்கள் வெளிவந்தன. இப்படியான குறைப்புக்குக் காரணம் விலை வாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம், பணக்காரர்களுக்கும் வறியவர்களுக்குமிடையே வரு வாயில் ஏற்பட்டு வரும் இடைவெளி என்பனவற்றை ஒரு கட்டுக்குள் கொண்டு வருவதே எனக் கூறப்படுகிறது.

**மேலோட்டமாகப் பார்க்கும் போது நாடு மிக வேகமாக அபிவிருத்தி அடைந்து வருவதாகவே தோன்றும். ஆனால் சாதாரண மக்களின் வாழ்க்கை நிலைமையை உற்றுப் பார்த்தால் நிலைமை தலைகீழாக இருப்பதைப் புரிந்துகொள்ள முடியும்.**

**பொருளாதார வளர்ச்சியை மட்டுப்படுத்தும் சீனாவின் திட்டம்**

பொருளாதாரம் நலிவடையும் போது இப்படியான நெருக்கடிகள் ஏற்படுவதையே நாம் இதுவரை அறிந்துள்ளோம். ஆனால் பொருளாதார வளர்ச்சி வீதம் அதிகரிக்கும் போதும் இப்படியான பிரதிகூலங்கள் ஏற்படுகின்றன என்பதும் அதற்காகப் பொருளாதார வளர்ச்சியை மட்டுப்படுத்துவதும் வியப்பை ஏற்படுத்தும் விஷயங்கள் தான். அது மட்டுமன்றி இது காலவரை பொருளாதாரம் தொடர்பாக எமக்கு ஊட்டப்பட்டு வந்த நம்பிக்கைகளையும் கேள்விக்குள்ளாக்கி விட்டது.

சீனாவில் மாஒசேதுங்கின் இறப்பின் பின்பு ஆட்சிக்கு வந்த டெங்கியோங் சீனாவில் பிரபல துறைமுக நகரமான ஷங்காயை பல்தேசிய நிறுவனங்களின் முதலீட்டுக்கெனத் திறந்துவிட்டார். அதுவரை சுய ஆதாரப் பொருளாதார முறைமையில் இறுக்கமாக இருந்த சீனா தானும் திறந்த பொருளாதாரக் கொள்கையுடன் தன்னைப் பிணைந்துக் கொண்டது. சீனாவின் கனிவளங்கள் மலிவான விலையில் மனித உழைப்பைப் பெறும் வாய்ப்பு என்பன சீன உற்பத்திகளை உலகச் சந்தையில் மலிவான விலையில் விடும் வாய்ப்புக்களை உருவாக்கியது. இதன் எதிர்விளைவாக முதலாளித்துவத்தின் அசுரவளர்ச்சி ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்குமிடையேயான வருவாயில் பெரும் இடைவெளியை ஏற்படுத்தியது. லாபம் ஒன்றையே நோக்கமாகக் கொண்ட உற்பத்தி முறைமையின் வேகமாக யந்திரமயமாக்கல், மனித உழைப்பின் தேவையைக் குறைத்து வேலையில்லாத் திண்டாட்டத்தை உருவாக்கியது. அந்நியச் சந்தைகளின் தேவை உற்பத்திப் பொருட்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டதால், உள்ளூர் நுகர்வுப் பொருள் உற்பத்தியில் அக்கறையின்மை தோன்றியது. இதனால் விலை வாசி உயர்வு இயல்பாகவே தோன்றியது.

அதாவது நாடு ஒட்டு மொத்தத்தில் பொருளாதாரத்தில் மேம்பாடு அடைந்த போதிலும், சாதாரண மக்களின் வாழ்க்கைத்தரம் வீழ்ச்சியடைந்தது. கொம்யூன்கள் என்றழைக்கப்படும் தன்னிறைவும் கூட்டுறவு அமைப்புகள் பலவீனமடைந்ததால் மக்கள் வேலைதேடி நகரங்களை நோக்கிப் படையெடுக்கும் நிலைமையும் உருவாகியது.

ஆனால் இப்படியான நெருக்கடிகளைச் சரியாகவே கணக்கில் எடுத்துக் கொண்ட சீன ஆட்சியாளர்கள் பொரு ளாதார வளர்ச்சி வேகத்தைக் கட்டுப்படுத்தி அடுத்த கட்ட நகர்வுக்குத் தயாராகி வருகின்றனர்.

**இலங்கையின் தவறான அபிவிருத்தித் திட்டங்களும் பலாபலன்களும்**

இந்த அனுபவங்களை கணக்கில் எடுத்துக் கொண்டு தான் நாமும் இலங்கையில் ஏற்படுத்தப்பட்டு வரும் மாற்றங்கள் தொடர்பாகக் கணக்கில் எடுக்க வேண்டும்.

இலங்கையில் 30 வருடங்களாக இடம்பெற்ற போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்பு இலங்கையை மஹிந்த சிந்தனை அடிப்படையில் ஆசியாவின் ஆச்சரியமாக மாற்றப் போவதாகத் தெரிவிக்கப்பட்டது. அதே போன்று வடக்கின் வசந்தம் கிழக்கின் உதயம் என கவர்ச்சிக்கரமான கோஷங்களும் முன் வைக்கப்பட்டன. எங்கும் அபிவிருத்தி என்ற குரல்களே ஓங்கி ஒலித்தன.

**சந்திரசேகர ஆசாத்**

போரின் வெற்றியை வர்த்தகமாக்கும் தேசத்தின் மருடம் முதற்கொண்டு, எம்மை ஆடம்பரப் பொருட்களின் நுகர்வோராக மாற்றும் கைத்தொழில் கண்காட்சிகள் நடத்தப்பட்டு எம்முன் ஒரு மாய உலகம் சிருஷ்டிக்கப்படுகிறது. ஆட்சியாளர்கள் கலந்து கொள்ளும் ஒவ்வொரு பொது நிகழ்விலும் மக்கள் போரின் வெற்றிக்கு ஒத்துழைப்பு வழங்கியது போன்று தேசத்தின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அறைகூவல் விடுக்கப்படுகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் சபையில் 65வது கூட்டத் தொடரில் உரையாற்றியபோது கடந்த ஐந்து வருடங்களில் நாட்டில் தனிநபர் வருமானம் இருமடங்காக உயர்ந்து விட்டதாகவும், 2016ஆம் ஆண்டில் இது நான்கு மடங்காக உயரும் எனவும் தெரிவித்தார். அது மட்டுமன்றி இலங்கை 2015 இல் உலகின் முன்னணி 30 வர்த்தக நாடுகளில் ஒன்றாகத்திகழும் எனவும் தெரிவித்தார்.

இவற்றையெல்லாம் மேலோட்டமாப் பார்க்கும் போது நாடு மிகவேகமாக அபிவிருத்தியடைந்து வருவதாகவே தோன்றும். ஆனால் சாதாரண மக்களின் வாழ்க்கை நிலைமையை உற்றுப் பார்த்தால் நிலைமை தலைகீழாக இருப்பதைப் புரிந்து கொள்ளமுடியும்.

வாழ்க்கைச் செலவு எட்டித் தொடமுடியாத உயரத்துக்கு அதிகரித்துவிட்டது. மக்களுக்கு வருமானம் தரக்கூடிய சிறுதொழில்களுக்கான வாய்ப்புகள் அற்றுப் போய்விட்டன. அரச பணியாளர்கள் மற்றும் ஏனைய உழைக்கும் மக்களின் வருமானத்தில் போதிய உயர்வு எதுவுமில்லை.

இந்த நாட்டின் முக்கிய தேசிய உணவு உற்பத்திப் பொருட்களான அரிசி, தேங்காய், வெங்காயம், மிளகாய், முட்டை, இறைச்சி போன்றவற்றிற்கு அடிக்கடி தட்டுப்பாடு ஏற்படுவதும் உடனடியாக அவற்றை வெளிநாட்டிலிருந்து இறக்குவதுமான நிலையே நிலவுகிறது. நெல்விளையும் காலங்களில் விவசாயிகள் நெல்லை விற்க முடியாத நிலையில் குறைந்த விலையில் கொள்வனவு செய்வதும் இடம்பெற்று வருகின்றன. இந் நாட்டின் அந்நியச் செலாவணியில் கணிசமான பகுதியை ஈட்டித்தரும் தோட்டத் தொழிலாளர்களின் நிலையோ படுமோசமான வறுமைக்குள் தள்ளப்பட்டு விட்டது.

தேர்தல் காலத்தில் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படுவதாக வாக்களிப்பட்ட 2500 ரூபா சம்பள உயர்வு முதற்கொண்டு எந்த வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படவில்லை. நிறைவேற்றுவதற்கான முயற்சி எதுவும் எடுக்கப்படவில்லை.

இப்படியான நிலையில் அரச தனிநபர் வருமானம் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது: விரைவில் 4 மடங்காக அதிகரிக்கும் என்றால் என்ன அர்த்தம் இருக்க முடியும்?

ஆனால் ஜனாதிபதி கூறியது பொய் அல்ல. ஆடைத் தொழிற்சாலைகள் சுற்றுலாத் துறை, தேயிலை ஏற்று, மதி வெளிநாடுகளில் பணிபுரிபவர் களால் வரும் வருமானம் என நாட்டில் மொத்த வருமானம் அதிகரித்துள்ளது. அப்படிப் பார்க்கும் போது சராசரி தனிநபர் வருமானம் இரட்டிப்பாகி உள்ளது. ஆனால் அப்பணம் அந்நிய ஆடைத் தொழிற்சாலை உரிமையாளர்கள், சுற்றுலா விடுதி உரிமையாளர்கள், தரகர்கள் போன்ற ஒருசிலரின் கைகளுக்கே போய்விடுகிறது.

சாதாரண மக்களுக்கோ உழைப்பாளர்களுக்கோ குறைந்தபட்சக் கூலியை விட வேறு எதுவுமே கிடைப்பதில்லை. அக் குறைந்த கூலியை கூட விலைவாசி உயர்வினால் பாதிக்கப்பட்டு விடுகிறது. இதில் பன்மடங்கு வருவாயைப் பெறுபவர்கள் அந்நிய நிறுவனங்களும் உழைப்பாளிகளும் அபிவிருத்தியின் பேரால் படுமோசமாகச் சுரண்டப்படுவதே உண்மை நிலையாகும்.

(6 ஆம் பக்கம் பார்க்க...)

# சுடர் ஒளி

13, மார்ச் - 19 மார்ச், 2011

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு-14. டெலிபோன்: 0115738005

பாக்ஸ்: 0115517944 - 5

E-mail: editorial@sudaroli.com


## புலி வாலைப் பிடித்தால்...

இல்லாது ஒழிக்கப்பட்டுவிட்டது என்று இலங்கை அரசு பிரகடனப்படுத்திய விடுதலைப் புலிகள் இயக்கம், இந்தியாவின் தென் மாநிலமான தமிழ் நாட்டில் மீண்டும் உயிர் பெறுகிறது. அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்கான காரணமாக நாடாளுமன்றத்தில் பிரதமர் இதைச் சொன்னார்.

''புலிகளின் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மான் போரில் உயிரிழந்துதான் போயிருப்பார்'' என்கிறார்கள் இலங்கை இராணுவத்தினர். அதன் அர்த்தம், அவர் இறந்ததை உறுதிப்படுத்த முடியவில்லை; அதேவேளை அவர் உயிருடன் இருக்குமார் என்பதற்கு ஆதாரங்களும் இல்லை என்பதுதான்.

அதனால், பொட்டம்மானின் சகாவான புகழேந்தி தலைமையில் தமிழகத்தில் மூன்று பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன என்றும் பிரதமர் சபையில் தெரிவித்தார். அவர்கள் இலங்கையில் சிறு சிறு தாக்குதல்களை நடத்திக் குழப்பத்தை விளைவிப்பதற்கு முயற்சிப்பார்கள் என்பதும் பிரதமரின் வாதம்.

தமிழகத்தில் மட்டுமல்ல, அமெரிக்காவில் உருத்திரகுமாரன் தலைமையிலும் நோர்வேயில் நெடியவன் தலைமையிலும் புலிகள் பலம்பெற்று வருகின்றார்கள் என்பதும் நாடாளுமன்றத்தில் சொல்லப்பட்ட செய்திதான்.

இந்தச் செய்திகள் புலிகள் மீண்டும் வருவார்கள் என்று திடமாக நம்புபவர்களின் வயிற்றில் பால் வார்த்துள்ளது. மறுபுறத்தில் புலிகளைப் புறம் கூறிய அரசியல் நடத்தியோருக்கோ கிலியை ஏற்படுத்தியுள்ளது. இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட 'பெரும்பான்மை' அரசு ஏன் இப்படிக் குழப்புகிறது என்று குழம்பிப்போய் இருக்கிறது.

''புலி வாலைப் பிடித்தால் விடமுடியாது'' என்பது தமிழ் முதுமொழி. மாதா மாதம் அவசர காலச்சட்டத்தை நீடிக்கும் போதெல்லாம் இந்த முதுமொழி எவ்வளவு உண்மையானது என்பதை இலங்கை அரசு நிரூபிக்கின்றது.

மஹிந்த சகோதரர்கள் தேர்தலில் வெல்வதற்கு, புலிகளுக்கு எதிரான போர் தேவை. வாரிசுகளையும் அரசியலுக்குக் கொண்டுவந்து முடியரசை உருவாக்கி குடும்ப ராஜ்யத்தைப் பலப்படுத்த, புலிகள் மீதான வெற்றி தேவை, அந்தச் சாம்ராஜ்யத்தைப் பாதுகாப்பதற்கோ, இலங்கையைவிட்டு வேறெங்காகிலுமேனும் புலிகளின் உயிர் மூச்சுத் தேவை. இதுதான் இன்று இலங்கை அரசின் நிலைப்பாடு.

தனது அரசியல் எதிரிகளை அடக்கி ஒடுக்கி, தான் நினைத்ததை எதிர்ப்புகள் ஏதுமின்றி நடத்துவதற்கு அரசுக்கு அவசரகாலச் சட்டத்தை விட்டால் வேறு கதியில்லை. அவசரகாலச் சட்டத்தை மாதாந்தம் நீடிக்கவேண்டும் என்றால் ''கொட்டி, திரஸ்தவாதி'' என்ற சொற்கள் செத்துவிடாமல் பார்த்துக்கொள்வதைத் தவிர வேறு மார்க்கங்களும் அரசுக்கு இல்லை. அதனால்தான் புலிகள் அங்கிருக்கிறார்கள், இங்கிருக்கிறார்கள் என்று காட்டிச் சிங்கள மக்களுக்கு நிலாச்சோறு ஊட்டுகின்றது அரசு.

புலிகள் உருவானதற்கான காரணத்துக்குத் தீர்வு கண்டுவிட்டால் புலியைக் காட்டி மக்களுக்குக் கிலியை ஏற்படுத்த அரசால் முடியாது. சிங்கள மக்கள் இந்த உண்மையை உணரவேண்டும்.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட்டால் புலிகள் எங்கு உயிர் பெற்றால்தான் என்ன? எனவே இந்த அரசை தீர்வு நோக்கிய திசையில் தள்ளுவதற்கு அவர்கள் முன்வரவேண்டும்.

அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக்களை அரசு விரைந்து நடத்தி ஒரு தீர்வை எட்டவேண்டும். ''புலிகள் தமிழகத்தில் இருந்தால் அது பற்றி இந்திய அரசுக்குத் தெரியப்படுத்தியிருக்கலாமே?'' என்று எதிர்க்கேள்வி கேட்டு அரசை மடக்கி இன்பம் காண்பதை விட்டுவிட்டு எதிர்க்கட்சியும் அதற்கு ஒத்துழைக்க வேண்டும். அப்படி இல்லையேல் அரசு எப்போதும் புலியைக் காட்டி தனக்குத் தேவையானவற்றைச் சாதித்துக்கொள்ளும்; இன்று எப்படி அவசரகாலச் சட்டத்தை நிறைவேற்றுகின்றதோ அதுபோலவே சிங்க அரசுத் தலைமைகளின் வரலாறு முழுமைக்கும் இது பொருந்தும். சிங்கள மக்களை ஓரணியில் திரட்டுவதற்கு கொழும்பு அரசுகளுக்கு பயங்கரமான ஒரு பொது எதிரி வேண்டும். அதனால் தான் புலிகள் தனது மண்ணில் இல்லாத போதும் புலிகளை வாழவைத்துக் கொண்டிருக்கின்றன.

இத்தகைய நிலை கொண்டுபோய்விடப் போகும் இடத்தைக் குறிக்கவும் தமிழில் ஒரு சிறந்த கதை உண்டு. ''புலி, புலி! என்றால் ஒருநாள் புலி உண்மையிலேயே வந்துவிடும்.'' அப்போது அரசு செய்வதைக் கேட்க மக்கள் ஆர்வமற்றுப் போகவும் கூடும்.

# இலங்கை ஆசியாவின்...




(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இன்று அபிவிருத்தியின் பெயரால் சுற்றுலா விடுதிகளை அமைப்பது நெடுஞ்சாலைகள் புகையிரதவீதிகளை புனர்நிர்மாணம் செய்வது, புதிய துறைமுகங்கள், விமான நிலையங்களை அமைப்பது நவீன போக்குவரத்து வசதிகளை உருவாக்குவது என்பனவே இடம்பெறுகின்றன. இவற்றில் சுற்றுச்சூழல் மாசடைவது பற்றிய எவ்வித அக்கறையுமின்றி, அனல் மின்நிலையங்களை அமைப்பது மணற்சரிவு வெள்ள அபாயம் போன்றவை கணக்கெடுக்கப்படாமலே நீர் மின்நிலையங்கள் அமைப்பதும் உள்ளடங்கும்.

**அபிவிருத்தி வளங்களைச் சுரண்டும் வெளியார் தரப்புக்கள்**

மேலோட்டமாகப் பார்க்கும் போது இவை மக்களின் தேவைகளுக்கு அமைக்கப்படுவதாகவே தோன்றும். ஆனால் இவற்றில் மக்களுக்குக் கிடைப்பது ஒரு சிறுபகுதி நன்மையே. ஆனால் இவற்றை அனுபவிக்கப் போவது பெரும் அந்நிய நிறுவனங்களும் சுற்றுலாப் பயணிகளுமே.

இன்று கொழும்பின் மையப்பகுதிகளான காலிமுகத்திடலில் கொம்பனித் தெரு போன்றவை பெரும் நிறுவனங்களுக்கு ஒரு வருட குத்தகைக்கு விடப்படவுள்ளன. இங்கு காலம்காலமாகக் குடியிருந்த மக்கள் நடுவீதிக்கு விரட்டப்பட்டனர். சிறுதொழில் நிலையங்களும் அகற்றப்பட்டன. இதேபோன்று குச்சவெளியில் 500 ஏக்கர் குத்தகைக்குக் கொடுக்கப்படுகின்றது.

இங்கெல்லாம் பெரும் சுற்றுலா விடுதிகள் அமைக்கப்படவுள்ளன. கௌரவமாக தொழில்களைச் செய்த எமது மக்கள் இவர்களுக்குப் பணிபுரிந்து வயிறு வளர்க்க வேண்டிய நிலை ஏற்படும். அழகிய இளம் பெண்களை ஆசைகாட்டியும் ஏமாற்றியும் பாலியல் தொழிலில் ஈடுபடுத்த தரகர்கள் தயங்க மாட்டார்கள். இப்போதே நாற்பதினாயிரம் பெண்களும் பதினையாயிரம் சிறுவர் சிறுமியரும் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படுவதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

எமது நல்லொழுக்கம் தொடர்பாக மேடைமேடையாக முழங்கும் ஜனாதிபதியோ, சிங்களக் கலாசாரம் தொடர்பாக பெருமை பேசும் பௌத்த பிக்குகளோ இவற்றைக் கண்டு கொள்வதில்லை. எமது நிலங்கள் மட்டுமின்றி எமது பண்பாடும் அபிவிருத்தியின் பேரால் பறிபோகும் அபாயம் நேர்கிறது.

இவ்வாறே விமானநிலையங்கள் துறை முகங்கள் மின் உற்பத்திநிலையங்கள் போக்குவரத்து வசதிகள் என்பவற்றால் அந்நிய நிறுவனங்களும் முதலீட்டாளர்களும் சுற்றுலாப்பயணிகளும் அவர்களின் பங்காளிகளாக விளங்குபவர்களுமே அனுபவிப்பார்கள். சாதாரண மக்கள் பாலியல் தொழிலாளர்களாகவும் கூலிகளாகவும் மாறவேண்டிய தேவையே ஏற்படும்.

நாட்டின் வருமானம் ஏறுமுகமாக இருந்தாலும் கூட அது அந்நிய நிறுவனங்களின் கைகளுக்கே போய்ச்சேரும். எமது மக்களுக்கு அது எட்டாக்கனியாகவே இருக்கும்.

இப்படியான நிலையில் வடக்கின் வசந்தம் பற்றியும் அபிவிருத்தி பற்றியும் இங்கும் சிலர் அதிகமாகவே பேசி வருகின்றனர். ஆலயங்களுக்கு அண்மையில் சுற்றுலாவிடுதிகளை அமைப்பதும் இடிந்த கோட்டையைப் புனரமைப்பதும் போரின்போது சிதைவுற்ற கட்டிடங்களுக்கு வெள்ளையடித்து விட்டுத் திறப்பு விழா செய்வதுமே அபிவிருத்தி என மக்களை நம்பவைக்க முயல்கின்றனர். வன்னியில் இடம்பெயர்ந்து மீளக்குடியேறிய மக்கள் இப்போதும் கூடாரங்களில் வாழ்வதோ அல்லது நிவாரணம் நிறுத்தப்பட்ட நிலையில் அவர்கள் அடுத்தநேர உணவுக்கு அல்லல்படுவதோ அவர்களின் கண்களில் படுவதில்லை. அங்கு வாழும் சில பெண்களை ஆடைத்தொழிற்சாலைகளில் வேலை பெற்றுத்தருவதாக ஏமாற்றி அழைத்துச் சென்று தென்னிலங்கையில் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு சிலரின் தலையீட்டால் தடுத்து நிறுத்தப்பட்டது. இராணுவக் கெடுபிடிகளால் விவசாய நடவடிக்கைகளையோ மீன் பிடி நடவடிக்கைகளையோ எமது மக்கள் சுதந்திரமாக மேற்கொள்ளமுடியாத நிலையே நிலவுகிறது.



இவர்களின் அபிவிருத்தி இப்படியான ஒரு பாதையில் போகிறது. ஒட்டு மொத்தத்தில் இலங்கையின் பொருளாதாரம் சர்வதேச நாணய நிதியத்தின் பாராட்டைப் பெறுமளவுக்கு அவர்களின் தேவைகளுக்கு அமைவாகவே வகுக்கப்படுகிறது.

இதன் காரணமாக கல்வி சுகாதாரம் அரச செலவீனங்கள் (அரச பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியங்கள் என்பன உட்பட) வெட்டப்படுகின்றன. அதேவேளையில் தனிநபர் துறையை ஊக்குவிப்பது என்ற பெயரில் அந்நிய முதலீடுகள் வருந்தி அழைக்கப்படுகின்றன. சர்வதேசத்திலிருந்து பெறப்படும் கடன்கள் அவைகளின் தேவைகளை நிறைவேற்றவும் வசதிகளைப் பெருக்கவும் பயன்படும்.

தேசிய உற்பத்திகள், தேசிய நிறுவனங்கள் மெல்லத் தேய்ந்து அழிந்துபோவதற்கோ அல்லது பல்தேசிய நிறுவனங்களால் விழுங்கப்படுவதற்கோ வாய்ப்பு உருவாகி வருகிறது.

சாதாரண மக்களும் தொழிலாளர்களும் வறுமையிலும் பஞ்சத்திலும் வாட வேண்டிய நிலையே தோன்றும். இதனால் ஏழைகளுக்கும் செல்வந்தர்களுக்கும் இடையேயுள்ள இடைவெளி மேலும் மேலும் அகலமாகும். இதைச்சிங்கள மக்கள் புரிந்துகொள்ளும் நாள் வெகு தொலைவில் இல்லை. அப்போது போல் பயங்கரவாதம் போன்ற சுலோகங்கள் அவர்களிடம் செல்லுபடியாகாமல் போய் விடும். அப்போது இலங்கை நிச்சயமாக ஆசியாவின் ஆச்சரியமாக மாறும். ★

# திமுக – காங்கிரஸ் இழுபறி: சாதித்துக் காட்டினார் சோனியா காந்தி!



தமிழகத்தில் காங்கிரஸ் - கட்சியைப் பணியவைக்க திமுக எடுத்த தந்திரங்கள் பலிக்காத நிலையில் மீண்டும் சோனியாகாந்தியிடம் சரணாகதியடையும் நிலைக்கு கலைஞர் கருணாநிதி தள்ளப்பட்டமை இவ்வார தமிழக அரசியலின் செய்தித் தலைப்பாக மாறியுள்ளது. ஆரம்பத்தில் கூட்டணியில் 90 இடங்கள் கேட்டு அடம் பிடித்த காங்கிரஸ் தலைமை, பின்பு 63 இடங்களைக் கேட்கப்போக வெகுண்டெழுந்த கலைஞர் காங்கிரஸை வெளிப்படையாகக் கண்டித்து அறிக்கை விட்டார். கோபமடைந்த சோனியாகாந்தியும் கலைஞரின் மிரட்டலுக்குச் சற்றேனும் அசையவில்லை. "இதோ, திங்கள் காலையே பிரதமரிடம் இராஜினாமாவைக் கையளிக்கிறோம்" என வழக்கம்போல் திமுக தலைவர் நாடகமாடினார். ஈழத் தமிழருக்காக இரண்டு மணிநேரம் உண்ணாவிரதம் இருந்த நாடகம் போலவே இதுவும் நடந்தது. அலட்டிக்கொள்ளாத காங்கிரஸ் தலைமை "அப்படியா சங்கதி? பிரதமரைச் சந்தித்து வேண்டியதைப் பேசுங்கள்" என்று மிக அமைதியாகப் பிரதமரைச் சந்திக்கவும் 'அப்பொயின்மென்ட்' எடுத்துக் கொடுத்துவிட்டு வாளாவிருந்துவிட்டது. அலறி அடித்துக் கொண்டு சோனியா சென்னை வந்து தன் காலில் விழுவார் என எதிர்பார்த்த கலைஞருக்கு ஏமாற்றமே மிஞ்சியது. இதற்கிடையில் திமுக விலகினால் ஆட்சி கவிழாது காப்பாற்ற முலாயன் சிங்கின் சமாஜ்வாதிக் கட்சியிடம் தொடர்ந்து காங்கிரஸ் தொடர்பில் இருந்தது. திமுகவின் 17 எம்பிக்களுக்குப் பதிலாக சமாஜ்வாதிக் கட்சியின் (உத்தரப் பிரதேச மாநிலக் கட்சி) 23 எம்பிக்களின் ஆதரவு காங்கிரஸிற்கு உறுதியாகத் தெரிவிக்கப்பட்டது. இக்கட்சி முன்பு அம்மாநிலத்தில் ஆளும் கட்சியாக இருந்த போதும், சமீபகாலமாக நலிவுற்று வருகிறது. அதற்குக் காரணமும் காங்கிரஸ்தான். சோனியா, ராகுல் இருவரும் உத்தரப் பிரதேச மாநிலத்தின் இரு தொகுதிகளின் ஊடாக அரசியல் பிரவேசம் செய்ததிலிருந்து அங்கு வீழ்ந்திருந்த காங்கிரஸ் புது எழுச்சி பெறத் தொடங்கியது. இது முக்கியமாக முலாயன்சிங்கின் சமாஜ்வாதிக் கட்சியைத்தான் பாதித்தது எனலாம். காங்கிரஸ் வெற்றிபெற்று சமாஜ்வாதிக்கட்சி தோல்வியுறத் தோல்வியுற, அக்கட்சிக்குள் பிளவுகள் வெளிக் கிளம்பின. சமாஜ்வாதிக் கட்சிக்குப் பண மழையாகக் கொட்டிய தொழிலதிபரும், அரசியல்வாதியுமான அமர்சிங்கும் முலாயமுடன் முரண்பட்டு வெளியேறினார். இதனால் கட்சிக்குப் பெரும் நிதி நெருக்கடி ஏற்பட்டது. மறுபுறம் ஆளும் முதல்வர் மாயாவதி, முலாமையை வழக்கு மேல் வழக்குப் போட்டுத் துன்புறுத்தி வருகிறார். இதிலிருந்து தப்ப வேண்டிய நிர்ப்பந்தம் முலாயமுக்கு உள்ளது. மேலும் அடுத்த ஆண்டு உத்தரப் பிரதேசத்தில் சட்ட சபைத் தேர்தல் நடக்கவேண்டும். ஐந்து வருடம் எதிர்க்கட்சி வரிசையில் இருந்த முலாயம் அடுத்தவருடம் தேர்தலில் வென்று கட்சிக்கு வராவிட்டால் அவரது கட்சி அழிந்தே போய்விடும். எனவே இந்த நெருக்கடி முழுவதற்கும் முற்றுப்புள்ளி வைக்க ஒரேவழி குறைந்தபட்சம் மத்திய அரசில் அமைச்சுப் பதவிகளைகளையாவது பெறுவதுதான்.

திமுக விலகினால் முலாயமயைச் சேர்த்து அவருக்குத் திமுகவின் அமைச்சர்களின் பதவிகளை வழங்கக் காங்கிரஸ் தயாராகிற்று. எனவே திமுகவின் அமைச்சர்கள் இராஜினாமாச் செய்வது பற்றி காங்கிரஸ் அலட்டிக் கொள்ளவில்லை. அவர்களாக இராஜினாமா செய்வதாயின் செய்யட்டும் என்று சோனியா விட்டுப் பிடித்தார். திமுக ஆதரவின்றி காங்கிரஸ் ஆட்சி தொடர்ந்தால் மத்திய புலனாய்வுப் பணியகம் என்ற சிபிஐ மூலம் திமுக அமைச்சர்கள் சகலரதும் ஊழல்களைத் தோண்டித் துருவ உத்தரவுகள் பறந்தன எனக் கூறப்படுகிறது. இது வேறு திமுகவின் வயிற்றைக் கலக்கியது. ஏற்கனவே ராசா கம்பி எண்ணும் நிலையில் அழகிரி, பழனிமாணிக்கம் எனத் தொடர்ந்து திமுகவினரை சிபிஐ மூலம் குடைந்தெடுக்கக் காங்கிரஸ் தயாரானது. மத்தியில் ஆளும் காங்கிரஸ் ஆனாலும் சரி முன்னர் ஆண்ட பிஜேபி ஆனாலும் சரி தமது கட்டுப்பாட்டில் உள்ள சிபிஐயைக் கொண்டு மாநிலக் கட்சிகளை மிரட்டுவது வழக்கமான ஒன்று தான்.

வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது 1992 இல் பாபர் மசூதி இடிக்கப்பட்ட வழக்கில் குற்றவாளியான அத்வானி கிரிமினல் குற்றமற்றவர் என அப்போதைய சிபிஐ அறிக்கை தயாரித்தது. அதேபோல பிரதமர் வாஜ்பாய், சிபிஐயைத் தவறாகப் பயன்படுத்தி மாயாவதியை "தாஜ்மஹால் அபிவிருத்தி" ஊழலில் மாட்டுவேன் என மிரட்டி உத்தரப் பிரதேச மாநில அரசியலில் சலுகைகளைப் பெற்றார். வேறுவழியின்றி ஊழல் புரியும் மாநிலக் கட்சிகள் அடிபணிவதும் வழக்கமான ஒன்றே. அதேபாணியில் திமுகவும் பழிவாங்கப்படலாமென்றும் கலைஞருக்கு உறைக்க இரண்டு மூன்று நாட்களாகின.

இவற்றின் ஒட்டுமொத்த விளைவாக திமுக முன்வைத்த காலைப் பின் வைத்தது. டில்லி சென்ற அழகிரி உள்ளிட்ட திமுகவின் மத்திய அமைச்சர்கள் காங்கிரஸ் தலைவர்களை ஓடியோடிச் சந்தித்து காலில் விழாத குறையாக கெஞ்சலாகினர். கடைசியில் மன்னிப்புக் கேட்கும் நோக்கில் சோனியாவைச் சந் திக்க நேரமும் கேட்க, உடனடியாகவே அனுமதி கிட்டியது. திமுகவின் காலில் விழுந்து "ஆட்சியைக் கவிழ்க்காதீர்கள்" என்று சென்னை வந்து கலைஞரிடம் கேட்க வேண்டிய சோனியாகாந்தியைத் திமுக தலைவர், மகன் அழகிரியை அனுப்பிச் சந்திக்கச் செய்தார். "இரகசியமாக நடந்த பேச்சுகளின் விவரத்தை ஏன் உங்கள் தலைவர்கள் பகிரங்கப்படுத்தினார்கள்" எனக் கோபமாகக் கேட்டாராம் சோனியா காந்தி. அதற்கு அழகிரி எதிர்ப்பேச்சுப் பேசாது கைகட்டி, வாய் பொத்தி நின்றார் என்று கூறப்படுகிறது. அதன் பிறகு காங்கிரஸ் மூத்த தலைவர் குலாம்நபி ஆசாத்தும் அழகிரியும் டில்லியில் செய்தியாளர் மகாநாடு நடத்தி "காங்கிரஸிற்கு 63 இடங்கள் ஒதுக்கப்பட்டன. கூட்டணி உறுதி" என கூறியதுடன் விடயம் முற்றுப்பெற்றது.

காங்கிரஸைப் பொறுத்தவரை திமுகவுடன் கூட்டணி முறிந்தால் மேற்குவங்க மாநிலத்தில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி குறித்துப் பேரம்பேச சிக்கல் ஏற்படும். அங்கும் மம்தா பானர்ஜியின் திரிணாமுல் காங்கிரஸுடன் காங்கிரஸ் கட்சி கூட்டணியில் உள்ளது. திமுக போலவே மம்தாவின் கட்சி பெரிய கட்சியாகவும் காங்கிரஸ் அதனுடன் ஒட்டிய சிறிய கட்சியாகவும் உள்ளன. மம்தா பானர்ஜியின் செல்வாக்கு வங்கமெல்லாம் பரவியுள்ளது. கடந்த தேர்தல்களில் அவரது கட்சி பெரும் வெற்றி கண்டது. இம்முறையும் அக்கட்சிக்கு வெற்றிவாய்ப்புக் கிட்டக்கூடும். இந்நிலையில் திமுகவுடனான உறவு முறிந்தால் மம்தாவும் காங்கிரஸை மிரட்டிப் பணிய வைக்க முயற்சிக்கலாம். இதைக் காங்கிரஸ் விரும்பவில்லை. எனவே திமுகவுடன் கறாராக நடப்பதைத் தவிர சோனியாவுக்கு வேறு வழியும் இல்லை. அத்துடன் தமிழகத் தேர்தல் முடிந்த பின்பே மேற்கு வங்கத்தில் தேர்தல் நடக்குமாதலால் மம்தாவுடன் இப்போது கூட்டணி குறித்துப் பேச வேண்டிய அவசியம் காங்கிரஸுக்கு இல்லை. தமிழகத்தில் தேர்தல் ஆணையம் முற்கூட்டியே தேர்தலை அறிவித்து விட்டதால் தாமதிப்பது காங்கிரஸுக்கும் திமுகவுக்கும் நஷ்டமாகவே முடியும். எனவேதான் கூட்டணி குறித்து இறுதி வடிவம் கொடுக்க வேண்டிய அவசரம் உண்டாகிற்று. பணப் பட்டுவாடா செய்யும் திமுகவின் முயற்சியை முறியடிக்கத் தேர்தல் ஆணையம் திமுகவை மிகத் தீவிரமாகக் கண்காணிக்கத் தொடங்கியுள்ளது. எனவே இந்த நேரத்தில்போய் காங்கிரஸைப் பகைப்பது திமுகவுக்கு நஷ்டமாக அமையுமாதலால் அது காங்கிரஸுடன் இணங்கிப் போக முடிவெடுத்தது எனக் கூறப்படுகிறது.

> **புதுடில்லி சென்ற அழகிரி உள்ளிட்ட திமுகவின் மத்திய அமைச்சர்கள் காங்கிரஸ் தலைவர்களை ஓடியோடிச் சந்தித்து காலில் விழாத குறையாக கெஞ்சலாகினர்.**

**எஸ்.சுரேந்திரஜித்**

காங்கிரஸ் கேட்டும் அதிக இடங்களைத் தராதிருக்க திமுக, பாமகவுக்கு 31 இடம் ஒதுக்கியது காங்கிரஸுக்குப் பிடிக்கவில்லை. கடைசியில் பாமகவின் ஒரு தொகுதியைப் பிடித்து காங்கிரஸுக்குக் கொடுத்துள்ளார் கலைஞர். பாமகவை மடக்க ராமதாஸ் மகன் அன்புமணி மத்திய அமைச்சராக இருந்தபோது செய்த ஊழல்களை சிபிஐ மூலம் விசாரிக்க காங்கிரஸ் திட்டமிட்டுள்ளதாம். மொத்தத்தில் கூட்டணி என வெளித்தோற்றம் இருந்தாலும் காங்கிரஸுக்கு எதிராகக் கூட்டணிக்குள்ளேயே குழிபறிப்புச் செய்ய திமுகவும் பாமகவும் கறுவிக்கொண்டுள்ளனர்.

இதற்கிடையில் திமுக, காங்கிரஸ் உறவு முறுகுவதை உணர்ந்த ஜெயலலிதா, கம்யூனிஸ்டுக்கள் மற்றும் வைகோவுடன் நடத்த இருந்த பேச்சை ஒத்திப் போட்டுள்ளனர். இது குறித்து அக் கட்சிகள் கடும் கோபமடைந்தாலும் எதையும் செய்யக்கூடிய வலிமை அவற்றுக்குக் கிடையாது.

தலைமைத் தேர்தல் ஆணையர் எஸ்.வை.குரேஷி ஒரு காங்கிரஸ் எதிர்ப்பாளர் என்பதால் காங்கிரஸும் திமுகவும் ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தித் தேர்தல் ஆணையத்தின் கண்ணில் மண்ணைத் தூவ இடமளிக்க மாட்டார் என்பது நிச்சயம். தமிழகத் தேர்தலை மே மாதம் முதல்வாரத்தில் நடத்தச் சட்டப்படி இடமிருந்தாலும், ஏப்ரல் 13 ஆம் திகதியே அதனை நடத்த குரேஷி உத்தரவிட்டுள்ளார். தேர்தலை நடத்தும் முழு அதிகாரம் தேர்தல் ஆணையகத்துக்கே உண்டு என்பதால் தேர்தலைப் பின்போடும்படி சட்டரீதியாக எவராலும் வற்புறுத்த முடியாது. திமுக மற்றும் அதிமுக உட்பட அரசியல் கட்சிகள் எதுவும் தேர்தலுக்குத் தயாரில்லை என்பதைத் தெரிந்து கொண்ட குரேஷி முற்கூட்டியே தேர்தலை அறிவித்து கட்சிகளை வியப்பில் ஆழ்த்தியுள்ளார். கூட்டணிப் பங்கீடு இழுபறியாக இருந்ததால் கட்சிகளின் குட்டித் தலைவர்களும் தொண்டர்களும் தமக்குள் குழம்பிப்போய் இருந்தனர். இந்நிலையில் பிரசாரத்துக்கென 30 நாள் அவகாசமே இருக்கப்போகிறது. அதுவும் கடும் வெய்யில் காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது. விஜயகாந்த், வைகோ கம்யூனிஸ்ட், பாமக என எல்லோருமே பிரசாரத்தில் பின்தங்கியே உள்ளனர். பரபரப்பெல்லாம் ஒருமாதத்தினுள் சப்பென்று அடங்கிவிடும் என்பது சற்று வித்தியாசமான ஒரு நிலைதான். ஆனால் தேர்தல் முடிவுகள் வாக்களிப்பு முடிந்து ஒரு மாதத்தின் பின்பே வெளியிடப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. ★



# சினிமா ஒரு கவர்ச்சி உலகம்!

நயன்தாரா பேட்டி




''சினிமா ஒரு கவர்ச்சி உலகம். இங்கு வென்றால் ஆகாயத்துக்குத் தூக்குவார்கள். தோற்றால் படுபாதாளத்தில் தள்ளி விடுவார்கள்'' என்று நடிகை நயன்தாரா கூறியுள்ளார். சமீபத்தில் அவர் அளித்துள்ள பேட்டியில், 2003ஆம் ஆண்டில் சினிமாவுக்கு வந்தேன். ஒரு படத்தோடு எல்லாம் முடிந்துவிடும் என நினைத்தேன். ஆனால் காலம் என்னை எங்கேயோ கொண்டுவந்து விட்டது. ஏகப்பட்ட பெயர், புகழ் கிடைத்திருக்கிறது. நிறைய வதந்திகளையும் சந்தித்து விட்டேன். என் படம் வெற்றிப்பெற்றால் சந்தோஷப் படுவேன். தோல்வியடைந்தால் மிக வும் வருத்தப்படுவேன். இடைப்பட்ட காலத்தில் அப்படி வருத்தப்பட அவசியம் இல்லாமல் போனது. தமிழில் நடித்த ஆதவன், மலையாளத்தில் நடித்த பொடி கார்ட், தெலுங்கில் அடூர் ஆகிய மூன்று படங்களும் அடுத் தடுத்து வெற்றிப்படமாக அமைந்தன. இதைவிடப் பெரிய சந்தோஷம் என்ன இருக்கு?

திருமணம் பற்றி நயன்தாரா கூறுகையில், ''என்னை சந்திக்கிறவர்கள் பலர் மீனா, நவ்யா நாயருக்கு திருமணம் முடிந்து விட்டது. ரம்பாவுக்கும் திருமணம் முடிந்து விட்டது. உங்கள் திருமணம் எப்போது? என்று கேட்கிறார்கள். இந்த கேள்விக்கு என்னிடம் பதில் இல்லை. திருமணம் முக்கியமானது. அது நடக்கும்போது நடக்கும். எனக்கு ஒரு வேளை காதல் திருமணம் நடந்தால் அது என் அப்பா, அம்மா, துபாயில் வசிக்கும் அண்ணன் ஆகியோரின் சம்மதத்துடன் தான் நடக்கும்'' என்றார்.

''சினிமா நடிகைகள் எது செய்தாலும் அது பரபரப்பான செய்தியாகி விடுகிறது. நான் மூக்கூத்தி அணிந்ததைக் கூட ஏதோ ரகசியம் இருக்கு என்று கிசுகிசுஆக்கிவிட்டார்கள். மூக்குத்தி போட்டால் நல்லா இருக்கும் என்று சொன்னதால்தான் போட்டேன். குறிப்பிட்ட நடிகர்களுடன்தான் நடிப்பேன் என்று நான் சொல்வது இல்லை. கதையும் இயக்குநரும் சிறப்பாக இருந்தால் யாருடன் வேண்டுமானாலும் நடிப்பேன். எனக்கு எந்தவித பேதமும் இல்லை. என்னைப் பற்றி நிறைய வதந்திகள் வருகின்றன. அவற்றுக்குப் பதில் அளிக்க விருப்பம் இல்லை. ஆரம்பத்தில் இந்த வதந்திகள் என் மனதைப் பாதித்தன. இப்போது பழகிவிட்டேன். வருத்தப் படுவது இல்லை. என்னை நம்புபவர்கள் இருக்கிறார்கள். சினிமா ஒரு கவர்ச்சி உலகம் என்பதை நன்றாக புரிந்து வைத்திருக்கிறேன்'' எனவும் கூறியுள்ளார். ✱

## கற்பு நிலை; இரு கட்சிக்கும் அதுவே பொது

மாறிவரும் கால ஓட்டத்திற்கு ஏற்ப சமூக விழிப்புணர்வூட்டும் கருத்துக்களும் செயல்களும் பதிய மாற்றத்தைப் பெறுதல் வேண்டும் எமது சமூகத்தில் ஆங்காங்கே மகளிர் பற்றிய எண்ணங்களும் அவர்களின் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வும் மேம்படவில்லை என்றே கருதப்படுகிறது



அப்பா, அம்மா, கணவன், மனைவி, சகோதரன், சகோதரி என விரியும் இருபாலாரின் உறவு நிலைகளிலும் அவர்தம் வாழ்க்கைக் கோலங்களிலும் சமத்துவம் நிலவுவதாக இன்னமும் உணரப்படவில்லை

ஆண்கள் அனுபவிப்பதை ஒத்ததான அநீதிகளும் துன்பங்களும் பெண்களிடத்தில் காணப்படுகின்ற போதும், விசேடமாகப் பெண்கள் வன்முறைக்கும் பால் நிலைச் சமத்துவமின்மைக்கும் உள்ளாகிப் பெரும் துப்பமுறுகின்றனர் இன்றைய நாள்களில் பெண்களுக்கெதிரான வன்முறைகள் குறைவடையவில்லை. ஆண்களின் மேலாதிக்கம் அவர்களை அடங்கிப்போக அழுத்துகிறது. ஆண்கள் பலம் வாய்ந்தவர்கள் என்றும் அவர்களின் கட்டுப்பாடுகளுக்கு அடங்கிப் போக வேண்டியவர்கள் பெண்கள் என்றும் சொல்லப்பட்டு வந்த பாரம்பரிய நம்பிக்கைகள் எமது சமூகத்தில் இன்றும் காணப்படுகின்றன

பெண்கள் சிறுமிகள் ஆகியோருக்கு எதிரான வன்முறைகள் ஆண்களின் மேலாதிக்கத் தன்மையுடையனவாக உள்ளன. பரம்பரை முதன்மைக்கு ஆண்களே முதன்மைக் காரணர்கள் என முன்னிற்கின்றனர். குடும்ப மட்டத்திலும், அதற்கு அப்பால் சமூகத்திலும் பெண்ணொருத்தி அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய நான்கு குணங்களுக்குள்ளும் தன்னை அமிழ்த்திக் கொண்டு அடங்கிப் போக வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறாள்.

கற்பு, சீதனம் ஆகிய சொற்களும் அவை சார்ந்து எதிர்பார்க்கப்படும் செயற்பாடுகளும் பெண்களின்மீது எய்யப்படும் அம்புகளாகவே பார்க்கப்படுகின்றன. அத்துடன் பண்டைய இலக்கியங்களும் இத்தகைய பெண் அடக்குமுறைக்குத் துணை செய்யும் வகையில் ஆக்கப்பட்ட செய்யுள்களையும் காப்பியங்களையும்

வடித்து ஆண்களின் மேலாதிக்கத்தை வலிமையுறச் செய்துள்ளன. பெண் விடுதலை பற்றிப் பாடிய பாரதியார்,

''கற்பு நிலையென்று சொல்ல வந்தாலிரு
கட்சிக்குமஃது பொதுவில் வைப்போம்
வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்'' என்கிறார்.

இத்தகைய குரலெழுந்த நாள்கள் கடந்து பல வருடங்கள் உருண்டோடி விட்டாலும் எமது சமூகத்தில் ஆண்களிடத்தில் மகளிர் குறித்த சமத்துவ நோக்கு வளர்ந்ததற்கான அறிகுறிகள் மிக மிக அற்பமாகவே உள்ளன. மகளிர் உரிமைகள் பற்றி உரத்துக் கூறும் சபைகளும் அவற்றை மீட்டொலிக்கும் மேடைகளும் தமது குரலைத் தொடர்ந்து ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. ஆயினும் ''பேச்சுப் பல்லக்குத் தம்பி கால்நடை'' என்ற நிகழ்காலமே நம் கண்முன் தெரிகிறது. ஆங்காங்கே இலைமறைகாயாக மகளிர் சமத்துவம் நிலவினாலும், எமது சமூக அடிப்படையில் பரவலாக மகளிர் சமத்துவம் பேணப்பட ஒவ்வொருவரும் கருத்துணர்ந்து செயற்படுதல் அவசியமாகும்.

**- தர்மினி பார்த்திபன்.**

## நீங்கள் சோம்பேறியா? உற்சாகமானவரா? - பலப்பரீட்சை

உற்சாகம் இருந்தால்தான் வாழ்வில் உன்னதங்களை நிகழ்த்த முடியும். வெற்றிபெற முடியும். நீங்கள் உற்சாகமானவர்தான் என்பதை உங்களுக்கு நீங்களே ஒரு பரீட்சை வைத்துக் கண்டு பிடித்துக் கொள்ளலாம்.

அதற்காக இங்கே சில வினாக்கள்...

1. காலையில் எழுந்ததும் எப்படி உணர்கிறீர்கள்?

அ. உற்சாகமாக
ஆ. சோம்பலாக
இ. வெறுமையாக

2. லட்சியத்தை அடைய முடியவில்லை என்றால்....

அ. கடும் வருத்தம் மற்றும் ஏமாற்றத்துடன் காணப்படுவேன்.
ஆ. லட்சியத்தை மாற்றி விடுவேன்.
இ. மீண்டும் அதே லட்சியத்தை அடைய முயற்சிப்பேன்.

3. 'எனக்கு மட்டும் ஏன் இப்படியெல்லாம் மோசமாக நடக்கிறது' என்று நினைப்பீர்களா?

அ. அவ்வப்போது நினைப்பேன்
ஆ. அடிக்கடி நினைப்பேன்
இ. எப்போதாவது நினைப்பேன்

4. மனநல மருத்துவரின் ஆலோசனை உங்களுக்குத் தேவை என்று நினைக்கிறீர்களா?

அ. இல்லை.
ஆ. தேவை தான்.
இ. ஏற்கனவே அவரது உதவியை நாடியிருக்கிறேன்.

5. நீங்கள் உற்சாகமற்று இருப்பதை மற்றவர்களால் கண்டுபிடிக்க முடிகிறதா?

அ. ஆம், அடிக்கடி அதுபற்றி கேட்பார்கள்.
ஆ. சில சமயம் கண்டு பிடிக்கிறார்கள்.
இ. மற்றவர்களால் கண்டுபிடிக்க முடிவதில்லை.

6. உங்கள் உற்சாகம் குறைந்திருக்கிறதா?

அ. ஆம். குறைந்திருக்கிறது.
ஆ. அதிகமாகியிருக்கிறது.
இ. மாறுதல் ஒன்றும் தெரியவில்லை.

7. தூக்கத்தைப் பொறுத்தவரை நீங்கள் எப்படி?

அ. படுத்த உடனேயே தூக்கம் வந்துவிடும்.
ஆ. தூக்கம் சுலபத்தில் வராது. வந்தாலும் இடையிடையே விழித்துக்கொள்வேன்.
இ. படுத்து அரைமணி நேரமான பிறகுதான் தூக்கம் வருகிறது.

8. படிப்பு அல்லது வேலையில் கவனம் செலுத்த முடிகிறதா?

அ. ஓரளவு.
ஆ. முடிவதில்லை.
இ. கவனம் செலுத்தி உற்சாகமாக செயல்படுவேன்.

**கேள்விகளுக்கான பதில்களை குறித்துக் கொள்ளுங்கள்.**

பதில்களுக்கான மதிப்பெண்கள் கீழே தரப்பட்டு உள்ளன. ஒவ்வொரு பதிலுக்குமான மதிப்பெண்களின் கூட்டுத் தொகையை கண்டுபிடியுங்கள். பிறகு நீங்கள் எப்படி என்பதை அறிந்து கொள்ளலாம்

1. அ. - 0, ஆ. - 5, இ. - 10
2. அ. - 10, ஆ. - 5, இ. - 0
3. அ. - 5, ஆ. - 10, இ. - 0
4. அ. - 0, ஆ. - 5, இ. - 10
5. அ. - 10, ஆ. - 5, இ. - 0
6. அ. - 10, ஆ. - 5, இ. - 5
7. அ. - 0, ஆ. - 10, இ. - 5
8. அ. - 5, ஆ - 10, இ. - 0

உங்கள் மதிப்பெண் 25-க்கும் குறைவு என்றால்...

நீங்கள் மிகவும் உற்சாகமானவர்.

25 முதல் 55 வரை என்றால்

உங்கள் மனது அலை பாய்ந்து கொண்டிருக்கிறது. உற்சாகத்தை எப்படியாவது தக்க வைத்துக் கொள்ளவேண்டும்.

**55-க்கு மேல் என்றால்...**

நீங்கள் உற்சாகம் இழந்து காணப் படுகிறீர்கள். ஒரு மனோதத்துவ நிபுணரை சந்தித்து ஆலோசனை பெறுங்கள். ✱

# சிறிதரன் மீதான தாக்குதல்; அரசின் பதில் என்ன?



யாழ்.மாவட்டத்தின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மீது கொலைமுயற்சி இடம்பெற்றுள்ளது.

அவரைத் தீர்த்துக் கட்டும் நோக்குடன் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என சந்தேகம் எழுந்துள்ளது.

யாழ்.மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் பல்வேறு உதவித் திட்டங்களை முன்னெடுத்துக் கொண்டிருந்த சிறிதரன் நாடாளுமன்ற அமர்வில் பங்கு கொள்வதற்காகத் தனது வாகனத்தில் கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த போது 07.03.2011 ஆம் திகதி பிற்பகல் இந்தத் தாக்குதல் முயற்சி நொச்சியாகமவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாக்குதலை மேற்கொண்டோர் சிறிதரனின் வாகனத்தை நோக்கி இரண்டு கைக்குண்டுகளை வீசியுள்ளனர். வாகனம் நிறுத்தப்படாததையடுத்து, வாகனம் நோக்கிப் பிஸ்ரலால் சுட்டுள்ளனர். வாகனத்தை டயரில் சூடுபட்டு காற்றுப் போன நிலையில் சாரதி சாதுரியமாக வாகனத்தை விரைவாக ஓட்டிச் சென்றபோது பின் தொடர்ந்து துரத்தித் துரத்தி சுட்டுள்ளனர்.

வாகனத்தின் ஒரு டயர் காற்றுப் போன நிலையிலும் சாரதியின் சாதுரியத்தால் அரைமைல் தூரம் வாகனத்தை ஓட்டிச் சென்று ஒரு வீட்டுக்குள் சிறிதரன் அடைக்கலம் புகுந்துள்ளார்.

ஆள்கள் நடமாட்டம் அற்ற அந்தக் காடுமண்டிய பகுதியில் இந்த முயற்சியை திட்டமிட்டு கொலைஞர்கள் அரங்கேற்றியுள்ளனர்.

நாடாளுமன்ற அமர்வில் பங்குகொள்ள இவர் கொழும்புக்குப் பயணம் செய்வார் என அறிந்து, போகும் வழியில் அவரைத் தீர்த்துக்கட்ட திட்டம் வகுக்கப்பட்டுள்ளதா என ஊகிக்க முடிகின்றது.

''தமிழ் அரசியல் எதிரிகளே தன்மீது கைக்குண்டுத் தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூடு மேற்கொண்டனர். தமிழரின் தன்னாட்சி உரிமைகள் தொடர்பாக உரத்த குரல் கொடுப்பதால் தம்மை ஒழித்துக் காட்டுவதற்கு, அரசுடன் இணைந்து அமைச்சுப்பதவிகளைப் பெற்று சலுகைகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் தமிழ் அரசியல் எதிரிகளே இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கின்றனர் என நம்புகிறேன்.

இப்படி தாக்குதலின் பின்னர் சிறிதரன் எம்.பி கூறியுள்ளார்.

தான் செய்யும் உதவிகளும் கடவுளும் தான் இத் தாக்குதலில் இருந்து தான் தப்பக் காரணம் என்றும் அவர் கூறினார்.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக மக்கள் தெரிவு செய்த கூட்டமைப்பின் பிரதிநிதிகள் தமது தொகுதி மக்களையே சந்திக்க முடியாத காலம் ஒன்று இருந்தது.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம் மட்டக்களப்பில் நத்தார் ஆராதனையில் கலந்து கொண்ட போது சுட்டுக் கொல்லப்பட்டார். அதன் பின்னர் என். ரவிராஜ் கொழும்பில் தமது வாகனத்தில் செல்லும் போது சுட்டுக் கொல்லப்பட்டார். யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.சிவநேசன் வன்னியில் ஆழ ஊடுருவும் படையினரின் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

இந்தக் கொலைகளுக்குப் பின்னர் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் மட்டும் தங்கி தொலைபேசி மூலம் தமது தொகுதி மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நிலை காணப்பட்டது. அச்சுறுத்தல் காரணமாக பலர் வெளிநாடுகளில் தஞ்சம் பெறவேண்டிய நிலையும் ஏற்பட்டு இருந்தது.

> வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து இந்தச் சிறிய நாடு அமைதியாகப் பயணிக்க வேண்டுமாயின், உருப்படியான நடவடிக்கைகள் அரசுத் தலைமையிடம் இருந்து வரவேண்டும்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மக்கள் முன் செல்ல முடியாத நிலையில், ஏற்பட்ட வெற்றிடத்தை மாற்றுத் தமிழ் கட்சிகள் பயன்படுத்தி மக்களை தம்வசம் இழுக்க முயற்சிகளை மேற்கொண்டனர்.

யுத்தம் முடிந்து இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்ற கூட்டமைப்புப் பிரதிநிதிகள் தமது தொகுதிகளில் தங்கியிருந்து மக்களுடன் மக்களாக நின்று அவர்களுக்குப் பணியாற்றும் வாய்ப்புக் கிட்டியது. மக்களின் தேவைகளைக் கேட்டு அவர்களுக்கு உரிய உதவிகளை அவர்கள் பெற்றுக் கொடுத்து மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு வந்தனர்.

இதன் காரணமாக மக்கள் மத்தியில் கூட்டமைப்பினருக்கு ஆதரவு பெருகி வந்தது.

அண்மையில் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வெளியிட்ட கருத்தில் ''அரசுக்குக் காவடி தூக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் செல்வாக்கு படிப்படியாக வீழ்ச்சியடைந்து வருவதாக புலனாய்வுத்தரப்பினர் அரசுக்குத் தெளிவு படுத்தியுள்ளனர். அதேவேளை ஆயிரம் அடக்குமுறைகள் இருந்தாலும், மக்களின் உள்ளார்ந்தமான ஆதரவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே உண்டு என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

''இனிமேலும் டக்ளஸ் தேவானந்தாவை நம்பி இருப்பதில் நன்மை ஏதும் ஏற்படப் போவதில்லை என்பதை அரச தரப்பினரும் தெரிந்து கொண்டனர்.

யாழவன்

''இதற்கு மாற்று உபாயமாக புதிய கட்சி ஒன்றை வடபகுதியினரைக் கொண்டே உருவாக்கும் சதியில் அரசு இறங்கியுள்ளது'' எனவும் தெரிவித் திருந்தார்.

தமிழ் மக்கள் மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு பெருகி வரும் ஆதரவை, செல்வாக்கை ஜனநாயக வழியில் முறியடிக்க, சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறுவது போன்று புதிய அரசியல் கட்சியை ஆரம்பிக்க அரசு முனைகிறது.

மறுபுறத்தில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை தீர்த்துக் கட்டுவதன் மூலமும் தமது இலக்கை எட்ட அரசு முனைகிறதா என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அச்சுறுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையாகவே நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மீதான தாக்குதலை நோக்க வேண்டும் என்று தெரிவிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, - மேலும்.

''சிறிதரனுக்குப் போதிய பாதுகாப்பு வழங்கவில்லை. இத்தாக்குதலுக்கு அரசுதான் முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும்'' என்றும் கூறியுள்ளார்.

முப்படைகளினது அதிகாரத்தைத் தன்னகத்தே கொண்டுள்ள ஜனாதிபதி, இந்த விடயத்தில் தலையிட்டு, இத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளைப் பாதுகாப்பதன் மூலமே அந்த மக்களிடம் நம்பிக்கையை வளர்க்க முடியும். அந்த மக்களின் பிரதிநிதிகளைத் தீர்த்துக் கட்டும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டால் அது அந்த மக்களை மீண்டும் இருண்ட யுகத்துக்கு கொண்டு செல்லும் நிலையே ஏற்படும். யுத்தம் முடிந்து மக்கள் அமைதியாக வாழும் சூழலைக் குழப்ப எந்தச் சக்திக்கும் இடமளிக்காத வகையில் அரசு தனது பாதுகாப்பு நடவடிக்கைகளை இறுக்க வேண்டும்.

அப்போது தான் நாடு அமைதியாக, அபிவிருத் தியை நோக்கிய வழியில் செல்ல முடியும். வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து இந்தச் சிறிய நாடு அமைதியாகப் பயணிக்க வேண்டுமாயின், உருப்படியான நடவடிக்கைகள் அரசுத் தலைமையிடம் இருந்து வரவேண்டும். அத்தகைய சமிக்ஞை அரசிடம் இருந்து வருமா? * * *

# சாக்குப் போக்குச் சொல்லி பிற்போடப்படும் பேச்சு



நாட்டின் தேசிய பிரச்சினையாகியுள்ள இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஒன்றைக்காண அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நேரடிப் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளன. இருகட்டப் பேச்சுக்கள் முடிவடைந்த நிலையில் மூன்றாம் கட்டப் பேச்சு வேண்டுமென்றே இழுத்தடிக்கப்படுகிறதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இரண்டு கட்டப் பேச்சுக்களிலும் மக்களின் இயல்பு வாழ்க்கை, சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டோர் உட்பட அன்றாடப் பிரச்சினைகள் பேசப்பட்டன.

மூன்றாம் கட்டப் பேச்சில்தான் அதிகாரப் பகிர்வு குறித்துப் பேச இணக்கம் காணப்பட்டது. அந்தப் பேச்சுக்கான திகதியைச் சாக்குப் போக்குச் சொல்லி பிற்போட்டு வருகிறது அரச தரப்பு. இனப்பிரச்சினைக்கு தீர்வுக்காண்பதற்கான யோசனையை முன் வைக்க அரசு விரும்பாத காரணத்தால் பேச்சுத் திகதியை பிற்போட்டு வருகிறதா என்ற கேள்வியைக் கூட்டமைப்பு எழுப்புகிறது.

விடுதலைப் புலிகள் ஆயுத பலத்துடன் இருந்த போது சமஷ்டி வரை வழங்கத் தயாரான சிங்களத் தலைமைகள் இன்று ஆயுதம் இன்றியுள்ள தமிழர் தரப்புடன் பேசவே பின்னடிக்கிறது. ஆயுதம் இல்லாத தரப்புடன் பேசி என்ன தீர்வைக் காண்பது. தீர்வு பற்றிப் பேசுவதை விடுத்து அபிவிருத்தியை முன்னெடுப்போம் என்ற சிந்தனை அரசு தரப்புக்கு ஏற்பட்டு விட்டதோ என்ற சந்தேகம் எழுகிறது என்று கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறுகிறார்.

கக்கூசு கட்டும், அனுமதியை வழங்கும் அபிவிருத்தியை முன்னெடுக்க எம்முடன் பேசவேண்டும் என்று அரசு விரும்புகிறது என்கிறார் சுரேஷ்.

கடந்த 60 வருட காலமாக நாடு அபிவிருத்தி காணாத நிலை ஏற்பட்டதற்கான காரணம் என்ன என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்த்து செயற்படுவதை விடுத்து மீண்டும் அபிவிருத்தியை நோக்கிச் செல்வோம் என்று அரசு கருதுமானால் அது சாத்தியப்படும் நிலை ஏற்படாது என்கிறார் அவர்.

முதலில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வழிமுறைகள் குறித்த சிந்தனை அரசுக்கு ஏற்பட வேண்டும். அதன் மூலம் நிரந்தரத் தீர்வு ஒன்றை எட்டிய பின்னர், நாட்டில் உள்ள சகல இன மக்களும் இணைந்து நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லலாம்.

அதைவிடுத்து, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதைப் பிற்போட்டுவிட்டு அபிவிருத்தியை நோக்கிப் பயணிப்பது என்பது சாத்தியமான வழி அல்ல.

தெற்குத் தலைமைகள் இதை மனதில் வைத்துச் செயற்படுவதன் மூலமே நாட்டை அபிவிருத்திப் பாதையில் நோக்கி கொண்டு செல்லலாம்.

இந்த யதார்த்த நிலையைப் புரிந்து தெற்குத் தலைமைகள் பயணித்தால் பிரச்சினைகள் அற்ற நாடாக இலங்கையை மிளிரச் செய்ய முடியும் என்பதே சகலரின் எதிர்பார்ப்பாகும். *

# தங்கத் தாத்தா தந்த பவளக்கொடி

மைதிலி.தேவராஜா

எமது துன்பங்கள் அனைத்துக்கும் ஆசையே காரணமென்பார்கள். ஆசையை ஒழித்தால் இன்பமாக வாழலாம். ஆனால் நாம் வாழும் சுழல் நமக்கு ஆசையைத் தூண்டுகின்றது. பொன், பொருள் என்றும் காதல், காமம் என்றும் ஆசைகள் பெருகி நிற்கின்றன. ஆசைகள் கட்டுப் படுத்தப்பட வேண்டுமெனின் 'போதும் என்ற மனமே பொன்செய்யும் மருந்து' என்ற மனநிலை வேண்டும். ஆனால் கிடைப்பவையும் - கிடைத்தவையும் போதும் என்று ஆறுதலடையும் மனம் எம்மிடத்தில் உறுதியுடன் நிலை கொள்வதில்லை. அது நேரத்துக்கு நேரம், வினாடிக்கு வினாடி மாறி எம்மைப் பாடாய்ப் படுத்துகிறது.

வேலையொன்று கிடைக்க வேண்டுமே என்று ஆசைப்படும் ஒருவர், அது கிடைத்து விட்டால் வேலை செய்யும் இடம் வீட்டுக்கு அருகில் அமைந்தால் நல்லதென ஆசைப்படுகிறார். அது சைக்கிளில் போகும் தூரமாக இருக்கையில், திருப்தியுறாமல் அதிலும் இலகுவாக நடந்து போகும் தூரத்தில் அந்த வேலைத்தலம் அமைந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று ஆசைப்படுகிறார். இவ்வாறு வாழ் நாள் முழுவதுமே மனிதன் ஆசையின் பிடிக்குள் அவதிப்படுகிறான்.

இந்த வகை ஆசைகளோடு பால் விற்கப் போகும் பவளக்கொடி என்னும் ஒருத்தியின் கதையை, தங்கத் தாத்தா எனப் போற்றப்படும் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் கவிதையில் தந்துள்ளார்.

**பருத்தித்துறையூராம்**
**பவளக்கொடி பேராம்**
**பாவைதனை ஒப்பாள்**
**பாலெடுத்து விற்பாள்**
**அங்கவற்கோர் நாளில்**
**அடுத்த துயர் கேளீர்**

என்று கதையைத் தொடங்குகிறார்.

பாற்குடம் சுமந்து செல்லும் அந்தப் பாவை. சந்தையில் பாலை விற்றுக் காசைப் பையிலே போடுவாள். அந்தக் காசிலிருந்து முருகரப்பா வீட்டுப் பாட்டி விற்கும் முட்டைகளை வாங்குவேன் என்கிறாள். வாங்கிய முட்டைகளை அடைகாக்க வைத்துப் பொரிக்கும்போது குஞ்சுகள் சில நாளில் கோழிகளாகும் அவைகளும் முட்டைகளை இடும். அவற்றை விற்றுக் காசாக்குவேன் என்கிறாள். அந்தக் காசில் தன்னை அலங்கரிக்க ஆசைப்படும் பவளக்கொடியைக் கவிதையில் காட்டுகிறார் புலவர்.

அழகான சட்டை தொப்பி வாங்கும் கற்பனையில் அவள் ஆடி நடக்கிறாள். அவள் தன்னை அலங்கரிப்பதன் மூலம் அயலவர்களின் பார்வையைத் தன் பால் ஈர்க்கும் செயல் அவளது கற்பனையில் விரிகிறது.

**வெள்ளைப் பட்டுடுத்து**
**மினுங்கு தொப்பி தொடுத்து**
**கையிரண்டும் வீசிக்**
**கதைகள் பல பேசி**
**சுந்தரி போல் நானே**
**சந்தைக்குப் போவேனே**

என்கிறாள்.

அந்த ஆசையின் உச்சத்தில் தன்னை இப்பொழுது அலட்சியமாகப் பார்ப்பவர்கள் எல்லோருமே தனது அலங்கார ஒப்பனையால் கவரப்பட்டு தனது அழகை இரசிக்க வேண்டும் என விரும்புகிருள்

**அரியமலர் பார்ப்பாள்**
**அம்புஜமும் பார்ப்பாள்**
**பூமணியும் பார்ப்பாள்**
**பொற்கொடியும் பார்ப்பாள்**
**சரிகைச் சேலை பாரீர்**
**தாவணியைப் பாரீர்**
**வண்ணச் சட்டை பாரீர்**
**வடிவழகு பாரீர்**
**என்று யாரும் புகழ்வர்**
**என்னை யாரே இகழ்வர்**
**பாரும் பாரும் என்று**
**பவளக்கொடி நின்று**
**சற்றுத் தலை நிமிர்ந்தாள்**
**தையல் என்ன செய்வாள்**

என்கின்ற புலவர் பவளக்கொடியின் ஆசையின் எல்லையில் எல்லாம் தொலைந்தழிந்து போய்விடுவதைக் கூறுகிறார்.

**பாலுமெல்லாம் போச்சு**
**பாற்குடமும் போச்சு**
**மிக்க துயரோடு**
**வீடு சென்றாள் மாது**
**கைக்கு வருமுன்னே**
**நெய்க்கு விலை**
**பேசேல்**

என்கிறது கவிதை.

கற்பனையில் நாம் ஆசைகளை வளர்க்கும்போது இருந்தவையும் இல்லாமல் போன சந்தர்ப்பம் ஒன்றைப் பவளக் கொடியின் ஆசையின் வழி கவிதையாய் எமக்குப் படிக்கத் தந்ததன் மூலம் தங்கத்தாத்தா எமக்கும் படிப்பினையைத் தந்துள்ளார்.



தங்கத் தாத்தா எனும் புகழ்நாமம் கொண்ட நவாலியூர் சோமசுந்தரப் புலவர் 1878 ஆம் ஆண்டு யாழ்ப் பாணத்து நவாலி எனும் ஊரில் பிறந் தவர். 1899 ஆம் ஆண்டு பங் குனி மாதம் 24 ஆம் நாள் வட்டுக்கோட்டை, கலட்டி எனும் இடத்தில் சின்னத்துரை ஆசிரியரும் புலவரும் சேர்ந்து ஒரு சைவ ஆங்கில ஆரம்பப் பாடசாலையை ஆரம்பித்து நடத்தினார்கள். அதுவே இன்று வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரியாக விளங்குகிறது. இவரால் இயற்றப்பட்ட 'ஆடிப்பிறப்பு', 'கத்தரித் தோட்டத்து வெருளி' ஆகிய பாடல்கள் பிர சித்தி பெற்றவை. இவர் 1953 ஆம் ஆண்டில் இறைபதமெய்தினார். புகழோடு தோன்றி புகழோடு மறைந்த தங்கத்தாத்தாவின் புகழ் தமிழ் உலகில் என்றும் நிலைத் திருக்கும். ✱

# பூமியைச் சூறையாடும் வேற்றுக்கிரகவாசிகள்

அ.ரஜி

இலங்கையில் பறக்கும் தட்டுக்கள் பற்றிய அவதானிப்புக்கள் அதிகமாக இடம் பெறுகிறது. அண்மையில் கூட முல் லேரியா வான்பரப்பில் தொடர்ச்சியாக அடுத்தடுத்து இரண்டு தினங்கள் பறக் கும் தட்டுக்கள் தென்பட்டதாக பிரதேச வாசிகள் தெரிவித்திருந்தனர். இது போல் 2002 ஆம் ஆண்டளவில் இலங் கையின் புராதன இடங்களான திம்பு லாகல, பொல நறுவை, அநு ராதபுரம் பகுதிகளில் விசித் திரமான நீல ஒளியை அவதானித்திருந் தனர். 2004 ஆம் ஆண்டு அதிகளவில் பறக்கும் தட்டுக்கள் இலங் கைக்கு வந்து சென்றதாக விமானப்படையில் கடமை யாற்றிய இங்கிலாந்து விமானி ஒருவர் உரிய சான்றாதாரங்களுடன் கருத்து வெளியிட்டிருந்தார். இவ்வாறு பிரதேச வாசிகளும், பிறநாட்டவரும் தொடர்ச்சி யாக அவதானித்து வரும் இவ் வான் பொருள் பற்றிய ஐயங்களும் ஆராய்ச்சிகளும் புரளி களும் இன்று உலகளவில் சூடுபிடித்திருக் கும் ஒருவிடயம்.



இவ்வகையிலேயே அமெரிக்கவின் நாசா விஞ்ஞானிகள் தற்போது கையிலெடுத்திருக்கும் விநோதமான ஆய்வுப் பொருள், "பறக்கும் தட்டுக்கள்" தொடர் பானது. அந்த ஆய்வுப்படி வேற்றுக்கிரக வாசிகளும், பறக்கும் தட்டுக்களும் உண் மையானவை எனவும் வேற்றுக்கிரகங் களில் விநோத மனிதர்கள் வாழ்ந்து வருகின் றனர் எனவும் தெரிவிக்கப்படுகின் றது.

பிரமிப்பிக்களும், ரகசி யங்களும், பிரமாண்டங் களும் மிகுந்த அண்ட வெளியில் இருப்ப வைகள் பற்றிய ஆய் வுகளை ஆரம்பம் முதலே வெற்றி கரமாக மேற்கொண்டு வந்த பெருமை நாசா விற்கே உரியது. அவ்வப்போது சாதாரண மனிதர்களால் நம்ப முடியாத, கற்பனைகளுக்கு அப்பாலான அரிய கண்டுபிடிப்புக் களையும் நாசா நிகழ்த்தி விடும். அவ்வா றான ஒன்றே "அடையாளம் காணப்படாத பறக்கும் பொருட்கள்'' பற்றியது.

அமெரிக்காவில் 1950 தொடங்கி 1970 வரையிலான காலப்பகுதியிலும் இவ்வா றானதொரு அறிவியல் புரளி நிலவியது. அப்போது ஏற்பட்டு வந்த ஒற்றைமைய அரசியலுக்கான போட்டி நிலமைகள், எந்த நாடு அதிகளவான அறிவியல் நுட்பங் களைக் கொண்டிருக்கிறதோ அந்த நாடு உலகின் தலைவனாகும் வாய்ப்பை அளித் திருந்தது. சோவியத்தினது பின்வாங்கலும் அமெரிக்காவின் வேற்றுக்கிரகம் (சந்திரன்) ஒன்றின் மீதான முதற்காற்பதிப்பும் அமெ ரிக்காவைத் தலைவராக்கியது.

இதே போன்றொரு நிலைமையே தற்போது சர்வதேச அரசியல் பரப்பில் ஏற்பட்டுள்ளது. அதனாலேயே 1975க்குப் பின்னர் சினிமாவில் மட்டுமே காட்டப்பட்டு வந்த வேற்றுக்கிரக வாசிகள் பற்றிய தகவல்கள் தற்போது மீண்டும் அறிவி யலிலும், அரசியலிலும் ஏற்பட்டுள்ளது. படை, பொருளாதாரம், தொழில்நுட்பம் போன்ற வலுக்களில் அமெரிக்காவை விஞ்சிவிடும் அளவிற்கு அடுத்த உலக கதாநாயகன் என எதிர்பார்க் கப்படும் நாடுகள் மல்லுக்கு இறங்கியுள்ள நிலையில் "வேற் றுக்கிரக வாசி" என்ற பொது எதிரியைச் காட்டுகிறது நாசா. இந்தக் கவனக் கலைப்பினூ டாக மறுபடியும் அண்டவெளி மீதான ஆக்கிரமிப்புக்கு ஏனைய நாடு களை இழுத்துப் போக முடியும். இந்த நோக்குடனேயே பூமியில் மனித நிலவு கைக்கு சவால் விடுமளவுக்கு வேற்றுக் கிரக வாசிகள் வளர்ந்து விட்டதாகக் கூறப் படுகிறது. தொழில்நுட்ப ரீதியில் அதிஉச்ச வளர்ச்சியைப் பெற்றுவிட்ட நாடுகளை வேற்றுக்கிரக வாசிகளுக்கு எதிராக உசுப்பிவிடும் கண்டுபிடிப்புக்களை நாசாவு மேற்கொண்டு வருகிறது. இதனையே விண்ணியல் ஆராய்ச்சியாளர் ஸ்ரீபன் ஹாவ்க்கிங் கீழ் வருமாறு கூறிப்பிடுகிறார்.

"அவர்களை தேடுவதைவிட அவர்களிடம் ஒதுங்கி இருக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளுவது மேல். அவர்களால் பூமிக்கு ஆபத்து ஏற்படும் அவர்கள் தங் கள் கிரகத்தில் உள்ள வளங்களெல்லாம் தீர்ந்து போனதால் பிரமாண்டமான கலங் களில் அண்டவெளியில் சுற்றிக் கொண் டிருக்கிறார்கள். எந்தக் கிரகத்திற்கு போகமுடியுமோ அங்கு போய் அதன் வளங்களை அபகரித்துக்கொள்ள முயற் சிப்பார்கள்."

இந்தக் கருத்து மறைமுகப் பொது எதிரிக்கு எதிரான பெரும் போர் ஒன்றுக்கு எல்லா நாடுகளையும் தயாராகும்படி கேட்டுக் கொள்ளப்பட்ட ஒன்றாகவே கருதப்படுகின்றது.

உண்மையில் பறக்கும் தட்டுக்கள் பற்றிய விவாதம் ஒரு அறிவியல். இந்த அறிவியல் வியாதிக்கு பல காரணிகள் உண்டு. சமூக, சமய மற்றும் உளவியல் காரணிகள் அவற்றில் முக்கியமானவை. வளிமண்டல நிகழ்வுகள் தொடங்கி விண்ணூர்திகளால் ஏற்படும் சில காட்சி மயக்கங்கள் விமான ஓட்டிகளுக்கு அண்மைக்கிரகங் களினால் ஏற்படும் காட்சி மயக் கங்கள் ஆகிய பல காரணிகள் உண்டு. இத்துடன் இராணுவ வானூர்திகளும் ஆய்வு பாலுன்களும் கூட பறக்கும் தட் டுக்கள் என அடையாளம் காணப்படுவது உண்டு. ஆயினும் இவ் விடயம் சுவாரஸ் யமான அறிவியல் விவாத்திற்கான கரு என்பதில் மயக்கமில்லை. ★

# வெள்ளை ரோஜா முள்




மு.சிவநேசன்

**பேக்கர் குடும்பத்தின் ஒரே வாரிசான கரோல் பல மில்லியன்களுக்கு அதிபதி. சில சமயங்களில் மனநிலை பாதிக்கப்பட்டவள் போல் நடந்து கொள்வதால் சரணாலயமொன்றில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறாள்.**

'கரோல் டார்லிங்' என அழைத்தபடி அவள் போர்வை மீது கைவைத்தபோது நெஞ்சம் துணுக்கென்றது. அங்கே கரோல் இல்லை. அது தலையணைகளால் பொருத்தப்பட்ட வெறும் செட்அப்.

திரும்பி அறையில் எங்கேயாவது கரோல் நிற்கிறாளோ எனத்தேட முயன்றவளின் கண்களைப் பின்புறமிருந்து பொத்திக்கொண்டாள் கரோல். மூச்சுத் திணறும்படி அவள் தொண்டையை இறுகப்பற்றி தாதி மயங்கிச் சுருளும்வரை பிடித்துக்கொண்டாள்.

அறையைத் திறந்து தாதியின் உடையில் வெளிப்பட்டவள் பின்புற வாயில் பக்கமாகச் சென்று எங்கோ புயலோடும் மழையோடும் மறைந்து கொண்டாள்.

கரோலைக் காணவில்லை என்ற சேதி மெல்ல மெல்ல 9.00 மணிக்கு சரணாலய வட்டாரங்களில் பரவ ஆரம்பித்தது. பல மில்லியன் டொலர்களைத் தொலைத்துவிட்ட உணர்வில் நிலைய அதிகாரிகள் பதறினர். வகை சொல்லியாக வேண்டுமே. அதுவும் 'டிரஸ்டி'க்கு.

செய்தியை அப்பட்டமாக வெளியிட்டால் அவளை யாரும் அடிக்கொண்டு போய்விடுவார்கள். பத்திரிகைகள் விழித்துக் கொண்டால் எல்லாம் போச்சு.

தலைமைப் பொலிஸ் அதிகாரியுடன் வைத்தியர் இரகசியப் பேச்சுக்களை நடத்தினார். சரணாலயச் சூழல் முழுவதும் சல்லடை போடப்பட்டது. எந்தப் பயனும் கிட்டவில்லை. எல்லோருக்கும் தண்ணி காட்டிவிட்டு மாயமாக மறைந்த கரோலைத் தேடி பொலிஸ் மோட்டார் சைக்கிள்கள் விரையத் தொடங்கின. விடிவதற்குள் ஆளைப்பிடித்தாக வேண்டும். இரகசியமாக பொலிஸ் படைக்குள் பல ஆயிரம் தொகை சன்மானம் அறிவிக்கப்பட்டது. என்றாலும் விடிந்தால் செய்தி கசியாமலா போகும்?

பொலிஸையும் சரணாலய ஊழியர்களையும் பத்திரிகைக்காரர்கள் விலைக்கு வாங்கி விடுவார்களே. பிறகு கரோலைத் தேடிப் பிடிக்க முடியுமா?

* * *

கரோல் சாலையில் நின்று கொண்டிருந்தபோது சரணாலயத்தின் எச்சரிக்கை சைரன் ஒலி கேட்டது. அகப்பட்டு விடுவோமோ எனப் பதறினாள் அவள் நல்லவேளையாக அதற்கிடையில் வாகனம் கிடைத்து விட்டது.

பேர்சி மிகவும் அன்பாகக் குழைந்து பேசினான். 'எங்கே போக வேண்டும்' என்று கேட்டான்.

''தொலைவுக்குப் போக வேண்டும். எங்கே என்றாலும் சரி. சாவு வரைக்கும் போகலாம்' என்றெல்லாம் சிலேடையாகப் பதில் சொன்னாள்.

''டிரக்கில் இருந்து கொண்டு பகிடிக்கும் அப்படி நினைக்கக்கூடாது. தினமும் விபத்துக்கள் நடக்கும் சாலை இது. சாவைச் சந்தித்தே பழக்கப்பட்ட சாரதிகள் நாங்கள்'' என்றான் அவன். அவள் கன்னத்தை செல்லமாகக் கிள்ளிவிட்டான். அவள் கலகலவெனச் சிரித்தாள்.

மழையும் காற்றும் தீவிரமாகி இருந்தது. டிரக் கண்ணாடியைப் பிடுங்கி எறிந்து விடுமோ என்ற நிலைமை.

பாதையில் எதுவும் தெரியவில்லை. வலப்புறம் சுவராக உயரும் மலைமேடு. இடப்புறம் பாதாள உலகம் இருளில் விரிகிறது. எங்கு திசை தப்பினாலும் எலும்பும் மிஞ்சாது என்ற நிலைமை.

பழப்பெட்டிகளையும் மரக்கறிப் பெட்டிகளையும் ஏற்றி வந்த அவனது வாகனம் காலநிலையின் உக்கிரத்தைச் சமாளிக்க மாட்டாமல் திணறியது. 3 நாள்கள் சரியான தூக்கம் இல்லாத ஓட்டம் வேறு. பெட்டிகள் ஒவ்வொன்றாக வீதியில் விழுந்து சிதறத் தொடங்கின. இனி விடியும்வரை ஓட முடியாது என்ற எண்ணம் அவனிடம் பிறந்தது. ஒரு ஓரத்தில் நிறுத்திவிட்டு வெளியே இறங்கிப் பின்புறம் பெட்டிகளின் நிலைமை பற்றி இருட்டிலும் ஆராய்ந்தான்.

பத்து நிமிடம் கழித்து நனைந்து தோய்ந்து உள்ளே ஏறியபோது கரோல் இடம் மாறி இருந்தாள். ஸ்டியரிங் மீது தலைவைத்து அவள் உறங்குவதைக் குழப்பாமல் இவன் அவள் முன்பு இருந்த இடத்தில் ஏறித் தூங்கிவிட்டான். இமைகள் இறுக மூடிக்கொண்டன.

உறக்கத்திலும் யாரோ தன்னைத் தாலாட்டுவதாக உணர்ந்தான் அவன். விழித்த போதுதான் நிஜம் புரிந்தது. அசுர வேகத்தில் டிரக் பறந்து கொண்டிருந்தது. இருட்டையும் றோட்டையும் கிழித்தபடி அது ஏறும் வேகம் கரோலின் தீவிரத் தன்மையை அவனுக்கு உணர்த்தியது.

விறுவிறுப்பூட்டும் மர்மத்தொடர் – 4

பெட்டிகள் ஒவ்வொன்றாக விழுந்து சிதறிக் கொண்டிருந்தன. நிறுத்து, நிறுத்து என அவன் கத்தினான். அவள் நிறுத்தவேயில்லை.

மழையில் நனைந்த றப்பர் றோட்டில் ரயர்கள் முட்டாமலே சுழன்று கொண்டிருந்தன.

நிறுத்தும்படி சமிக்ஞை கொடுத்து சைரன் ஒலி எழுப்பத் துரத்தும் இரு மோட்டார் சைக்கிள்களுக்கு இடம் கொடாமல் ஓட்டினாள் அவள்.

''ஐயோ, பொலிஸ். நிறுத்தாவிட்டால் தொலைந்தோம். அவர்களிடம் தப்பிக்க இந்த வாகனம் தாக்குப் பிடிக்காது'' எனக் கத்தினான் அவன்.

அவள் எதையும் கேட்பதாக இல்லை. இதற்கிடையில் இரு மோட்டார் சைக்கிள்களும் துப்பாக்கி ரவைகள் போல இருமருங்கும் பாய்ந்து முந்திக் கொண்டன.

''ஐயோ அவர்கள் என்னைத் தேடித்தான் வருகிறார்கள். நான் தொலைந்தேன்''.

'நீ முதலில் நிறுத்து. மன்னிப்புக் கோரலாம். அவர்களுக்கு உன்னிடம் என்ன தேவை இருக்கிறது?' என்று கெஞ்சினான் பேர்சி.

'வழி' என்ற அடையாளம் பளிச்சிட இரு மோட்டார் சைக்கிள்களும் தமது வேகத்தைத் தணிக்கலாயின. இவள் விழிகளில் குரூரம் தொனித்தது.

தமக்குள் நெருங்கி அவர்கள் வீதியை மறிக்க முற்பட்டவேளை, அசுரவேகம் எடுத்த இவளின் டிரக்கில் அடிபட்டு வானில் கிளம்பின இரண்டும்.

ஒன்று, மலைச்சுவரில் மோதி மீண்டும் இடப்புறம் தெறித்துப் பாதாளத்துள் இருளில் மறைந்து போனது. இரண்டாவது நேரடியாகவே பாதாளத்துள் பறந்து விட்டது. அவ்விடத்தில் பாதாளம் சுமார் ஆயிரத்து இருநூறு அடிகள் வரை இருக்கும் எனக் கணித்தான் பேர்சி.

''என்ன வேலை செய்தாய்? உயிர் குடிக்க வந்த பிசாசு'' எனக் கத்தினான் அவன்.

அவளிடமிருந்து ஸ்டியரிங்கைப் பிடுங்கிவிட அவன் எடுத்த முயற்சி பலன்தரவில்லை. அவளுடன் பேசிப் பார்த்தான். கெஞ்சிப்பார்த்தான். மிரட்டிப் பார்த்தான். ஏசிப்பார்த்தான். முரண்டு பிடித்தான். இறுதியில் அவள் போக்கில் கையாலாகாத்தனமாய் விட்டும் விட்டான்.

கலகலவெனச் சிரித்த அவளின் கணீரென்ற உலோகச் சிரிப்பொலி அவன் இரத்தத்தை உறைய வைத்தது.

'இவள் பெண் அல்ல. பிசாசை ஏற்றி வந்து நான் மாட்டிக் கொண்டேன். பெண்ணுக்கு இரங்கியோ, ஆசைப்பட்டோ வந்தவினை போதும். இனி உயிர் தப்பினாற் போதும்' என்று யேசுவைத் தொழத் தொடங்கினான் அவன். வேறு வழியில்லையே.

இயன்றவரை போராடியும் திட்டித்தீர்த்தும் ஓய்ந்து போய் தியானத்தில் இருப்பவனின் அமைதி அவள் மனத்தில் பயத்தை விதைத்தது.

'இவன் நிச்சயம் திடீரெனத் தாக்குவான். வாகனத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முனைவான். என்னைப் பொலீஸில் ஒப்படைக்க முயற்சித்து தான் தப்பிவிடப் பார்ப்பான்' என்றெல்லாம் அவள் எண்ணம் ஓடிற்று.


எச்சரிக்கையுடன் அவனைத் திரும்பிப் பார்த்தபடி வாகனத்தைச் செலுத்தினாள். மேலும் சுமார் அறுபது மைல்கள் கடந்து வந்த நிலையில் மலைமீதிருந்து உருண்டு வந்து நடுவீதியில் கிடந்த பாறை மீது டிரக் இடறியதுதான் தாமதம் அது சுழன்று பாதாளத்துள் பாய்ந்து விட்டது.

சுழலும்போது பேர்சி இருந்த பக்கம் மலைச்சுவர் மீது இடித்து உடைந்து போனது. அதன் மிச்சம் அற்றுப்போனது. எஞ்சின்கள் அந்தரத்தில் உறுமிய உறுமல் உலகத்தையே உறைய வைத்திருக்கும்.

நினைவிழந்தான் பேர்சி. விமானத்தில் பறக்கும் உணர்வுடன் குதூகலமான மனநிலையில் மகிழ்ச்சிக் கடலில் மிதந்தாள் கரோல்.

விடியலுக்கு இன்னும் சில மணித்தியாலங்கள் இருக்கின்றன. நாளை விடிந்தால் பத்திரிகையாளர்களுக்கோ நிறையத் தீனி கிடைக்கப்போவது நிச்சயம்.

பத்திரிகைகள் செய்தி வெளியிட்டால் எங்கோ தொலைவில் வைரங்களை மடக்கிக் கொண்டு அவளுக்காக காத்திருக்கும் மைக்கும் றொப்பும் விழித்து கொள்வார்கள். எதற்கும் நாளை விடியட்டும். *(இனியும் முள் குத்தும்)*



# பிரிட்டனும் நாய்களும்

பிரித்தானியாவின் பிரபுக்கள் சபையில் கடந்த வாரம் ''நாய்கள் பற்றித் தான் அதிகமாகப் பேசினார்கள். புதியதொரு சட்டத்தையும் பிரபுக்கள் சபை நிறைவேற்றி இருக்கிறது. அதற்கு dog bo என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். பிரிட்டனில் ஒருவாரத்தில் சராசரி நூறுபேர் நாய் கடித்து அல்லது தாக்கி வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்றனர்.

'dog bo' என்ற சட்டத்தின் கீழ் மனிதருக்கு, சமூகத்துக்கு தீங்கு விளைவிக்கும் நாயை வைத்திருக்கும் நபருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கலாம்.

1991 இல் இப்படி ஒரு சட்டம் இருந்தது. இப்போது இன்னும் அதனை இறுக்கி வைத்திருக்கிறார்கள்.

பிரச்சனைக்குரிய நாய்களைக் கண்டுபிடித்து அதன் உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க லோக்கல் கவுன்ஸிலுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

போனவாரம் தான் எங்கள் ஊர் ரவுணுக்குப் போனபோது ஒரு நாயை ஆட்கள் உட்காரும் இரும்பு வாங்கில் கட்டி வைத்திருந்தார்கள். அதன் உரிமையாளரைக் காணவில்லை. பெரிய குதிரை மாதிரிக் கறுத்த நாய்.

வள்... வள் .... என்று ஹவுன்ஸ்லோவின் ஹைஸ்றீட் முழுக்க அதன் இடிக்குரல் சத்தம் தான் ஒலித்தது.

சின்னப்பிள்ளைகள் சிலர் அதற்குக் கிட்டப் போய் வள்... வள்...ளென்று அது மாதிரியே குரைத்தார்கள். பெரியாக்கள் பயந்து பயந்து ஓடிக் கொண்டிருந்தனர். வெள்ளைக்காரர்கள் அதிகமில்லாத எங்கள் ஊரில் ரவுணில் சாமான் வாங்க வந்த வெள்ளைக்காரரும் '' fucking dog'' என்று தங்கள் ஆத்திரத்தை வெளிப்படுத்தினர்.

ஒவ்வொரு கணமும் அது கட்டியிருக்கும் கயிற்றை அறுத்துக் கொண்டு வந்து துரத்தித் துரத்திக் கடிக்கப் போவது மாதிரித்தான் இருந்தது.

லிபரல் டெமாக்கிறட்டிக் கட்சியின் Lord Redesdale, பிரபுக்கள் சபையில் பேசும்போது; ''நாய், பூனையின் சொந்தக்காரர்கள் எப்பொழுதும் தமது பிராணிகளில் பொறுப்பாக இருக்க வேண்டும்'' என்று சொன்னார்.

நாய்கள் மீது பிரிட்டிஸ்காரருக்கு இருக்கிற ஆர்வத்தின் காரணமாக சட்டதிட்டங்களையும் கடுமையாக்க வேண்டியிருக்கிறது. வேறு வளர்ப்புப் பிராணிகளை விட நாய்களைத் தான் வெள்ளைக்காரர் அதிகம் விரும்புகின்றனர்.

1991 ஆம் ஆண்டு நாய்கள் தொடர்பான சட்டத்தின் மூலம் நாலு விதமான அபாயகரமான நாய்கள் வாங்குவது அல்லது விற்பது தடைசெய்யப்பட்டது. இதனைக் கடுமையாகவே பொலிஸார் கண்காணித்தார்கள். ஏனெனில் அந்த நான்கு வகை நாய்களும் தங்கள் குணத்தை ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் காட்டிவிடும். எனவே இவற்றைப் பிரிட்டனில் வளர்ப்பது, வாங்குவது, விற்பது எல்லாவற்றுக்குமே தடை.

**இளைய அப்துல்லாஹ்**

நாய் வளர்க்கிறது மன ஆறுதலுக்கு ஆனால் இந்த நாய்கள் உபத்திரத்தைக் கொண்டு வந்துவிடும். வளர்க்கிறவரையே கம்பி எண்ணும் நிலைக்குக் கொண்டு வந்துவிடும். சும்மா இருக்காமல் ஏதாவது ஒரு சமயத்தில் வாயை வைத்து விடும் என்ற அச்சம் மேற்சொன்ன ரகங்களில் இருக்கிறது.

முந்தி நான் ஒட்டுசுட்டானில் இருக்கும் போது எங்கள் வீட்டிலும் ஒரு ஜிம்மி இருந்தது. எங்கள் கிராமங்களில் இன்னும் நாங்கள் வாங்கி வளர்க்காவிட்டாலும் ஏதோ ஒரு நாய் எங்களோடு இணைந்து அது எங்கள் நாயாகவே பெயரெடுத்து எங்களோடு வாழ்ந்து கொண்டிருக்கும்.

எங்கள் வீட்டில் இருந்த பழைய நாய் செத்துப் போனவுடன் அதனைக் கொண்டு வந்து கிணத்தடியில் இருந்த எலுமிச்சை மரத்தடியில் அம்மா புதைக்கச் சொன்னா.

அதற்கு பிறகு காய்க்காத எலுமிச்சை மரம் கொத்துக் கொத்தாகக் காய்த்தது.

பிறகு வந்தது தான் ஜிம்மி. ஜிம்மி நான் வீட்டை விட்டு வரும் வரைக்கும் வீட்டில் இருந்தது.

அதுக்குத் தயிரும் சோறும் நன்றாகப் பிடிக்கும். காலையில் தயிரும் சோறும் குழைத்து வைத்தால் அவுக் அவுக் கென்று சாப்பிட்டு திருப்பி ஏவறை விடும். ஜிம்மியில் உள்ள கெட்ட குணம் என்ன வென்றால் வீட்டுக்கு வருகின்ற புதியவர்கள் அல்லது அதுக்கு விருப்பமில்லாதவர்களின் கெண்டைக்காலில் யாருக்கும் தெரியாமல் மெதுவாக போய் ஒரு கடி. அவ்வளவு தான். பிறகு ஜிம்மியைத் தேடினாலும் கிடைக்காது. ஒடி ஒளிந்து விடும்.

மற்ற நாய்களைப் போல சத்தம் போட்டு, ஆர்ப்பரித்து, பல்லைக்காட்டி, என்றெல்லாம் கிடையாது. கடித்த தன் பிறகு தான் தெரியும் ஜிம்மி கடித்து விட்டதென்று.

இங்கு லண்டனில் நாய்கள் மீதும் அவற்றின் உரிமையாளர்கள் மீதும் நடவடிக்கை எடுப்பதற்கு மெற்றோபோலிட்டன் பொலிஸூக்கு முழு அதிகாரமும் இருக்கிறது.

மனிதனுக்கான எல்லா உரிமைகள் தொடர்பாகவும், மனிதருக்கான எல்லாப் பாதுகாப்புத் தொடர்பாகவும், சட்டங்களை ஆக்கி வைத்திருக்கிறார்கள். அதனால் தான் இங்கு, பிரிட்டனுக்கு வந்தவர்களுக்கு மனித உரிமைகளைப் பற்றி கொஞ்சமும் கவலைப்படாத இலங்கைக்கு, திரும்பி போக் விருப்பமில்லாமல் இருக்கிறது.

மனிதக் கொலைகள், மனிதக் கடத்தல், மனித அச்சுறுத்தல் என்று இலங்கை, மனிதர்கள் வாழ முடியாத தேசமாக இருப்பதனால் தான் இன்னும் மனிதர்கள் பயந்து பயந்து செத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கடிநாய்கள் தொடர்பான சட்டத்தை இன்னும் இறுக்க வேண்டும் என்று இங்கு பிரபுக்கள் சபையில் விவாதம் நடத்துகின்றார்கள். அது மட்டுமல்ல இங்கு நாய்களுக்கும் இன்சூரன்ஸ் எடுப்பது கட்டாயமானதாகும். ஏனெனில் நாயால் வருகின்ற நன்மைகளுக்கு அப்பால் அதனால் வருகின்ற ஆபத்துக்களுக்கு இன்சூரன்ஸில் இருந்து Claim பண்ணலாம்.

நல்ல நாயாக இருந்தால் அதனுடைய வருத்த துன்பங்களுக்கு மருந்து எடுக்கப் போகும் பொழுது இன்சூரன்ஸ் வேண்டும். தீய நாயாக இருந்து யாரை யாவது கடித்துவிட்டால் கடிவாங்கியவருக்கு நஷ்டஈடு கொடுக்க இன்சூரன்ஸ் வேண்டும்.

> **மனிதக் கொலைகள், மனிதக் கடத்தல், மனித அச்சுறுத்தல் என்று இலங்கை, மனிதர்கள் வாழ முடியாத தேசமாக இருப்பதனால் தான் இன்னும் மனிதர்கள் பயந்து பயந்து செத்துக் கொண்டிருக்கிறார்கள்.**

அது மட்டுமல்ல பஸாருக்கு வருகின்ற நாய்களுக்கு கழுத்தில் கட்டாயம் அதனுடைய உரிமையாளருடைய விபரங்கள் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

ஏதாவது பிரச்சினை, சில சமயம் தொலைந்து போனால் அதனை வைத்துத்தான் அடையாளம் காணமுடியும்.

நாய், பூனைகளைத் தங்களோடு அழைத்துப் போவதற்கு குழந்தைகளுக்கு உள்ளது போல Pet Passport 'ஐக்' கையோடு வைத்திருக்க வேண்டும். நாயோ, பூனையோ, முயலோ என்னவாக இருந்தாலும் அதனைக் கையோடு அழைத்துக் கொண்டு போகிறதா இருந்தால் ''பெற் பாஸ்போட்'' இல்லாமல் போக முடியாது. அதனுடைய போட்டோ ஒட்டிய, பெயர் விபரங்கள் அடங்கிய Pet Passport கையில் வைத்திருக்க வேண்டும். ஏனெனில் Passport இல்லாவிடில் நீங்கள் ஜேர்மனுக்கு போய்விட்டு வரும் பொழுது வேறு ஒருவருடைய நல்ல நாய்க்குட்டியைக் காரில் ஏற்றிக் கொண்டு வந்துவிடலாம் அல்லவா? இலங்கையில் போலவே.

பாஸ்போட் பயணம் என்றவுடன் விமானத்தில் ஏறுவது தான் எங்கள் நினைவுக்கு வரும். ஆனால் ஐரோப்பா முழுக்க காரில் போகலாமே. எனவே ஒரு நாட்டில் இருந்து கொண்டு இன்னொரு நாட்டுக்கு உங்கள் நாயைக் கொண்டு போவதாக இருந்தால் சரியான டொக்கியூமன்ட் தேவை; அவை அவசியம். இல்லாவிடில் கடும் குற்றம்.

மனஅழுத்தத்தைப் போக்கும் என்பதற்காக செல்லப்பிராணிகளை வளர்க்குமாறு இங்குள்ள மன வளக்கலை நிபுணர்கள் சிபார்சு செய்கிறார்கள்.

வெள்ளைக்காரர் வீட்டில் தனிமையை அனுபவிக்கிறார்கள். ஏனெனில் பிள்ளைகளோ, சொந்தக்காரரோ ஒவ்வொருவரையும் ஆதரித்துக் கொண்டிருக்காத உலகம் அது. ஒவ்வொருவரும் காலில் சில்லுப் பூட்டாத குறையாக ஓடிக் கொண்டிருக்கின்றனர்.

அவர்களுக்கு மற்றவரை இருந்து கவனிக்க நேரமில்லை. சொந்தமாகத் தங்களைப் பற்றி யோசிக்கவே 24 மணி நேரம் போதாதிருக்கும் போது பெற்றோரையோ உறவினர்களையோ கவனிக்க எங்கே நேரம். நாயையும், பூனையையும் மட்டும் தான் தஞ்சமடைய வேண்டியுள்ளது வயதான வெள்ளைக்காரர்களுக்கு. சொந்தப் பிள்ளைகளே பெற்றோரை பார்க்கிறார்களில்லை.

18 வயது வந்துவிட்டதா, தங்களைத் தாங்களே பார்த்துக் கொள்கிறோம் என்று விட்டு கோழி குஞ்சைக் கொத்தித் துரத்துவது போல் ஒன்றில் தாய் தகப்பன் கொத்திவிரட்டி விடுகின்றனர். அல்லது பிள்ளைகள் தாமாகவே போய் விடுகின்றனர்.

விடயம் என்னவென்றால் இந்தப் பழக்கம் இப்போது சில தமிழ்ப் பிள்ளைகளிடமும் வருகிறது. அதைத் தமிழ் பெற்றோரினால் தாங்க முடியாமல் இருக்கிறது.

ஊரில் போல பிள்ளைகள் தாய் தகப்பனுக்கு உழைத்துக் கொடுத்து அவர்களைக் கடைசிக் காலத்தில் கண் கலங்காமல் பார்ப்பது என்றொரு விடயம் இல்லாமலே போய்விடுமோ என்ற கவலை இங்கு சில தமிழ்ப் பெற்றோர்களிடமும் இருக்கிறது.

இங்கு தனிமைப்பட்ட தமிழ் ஆக்கள் தங்கள் துணைக்கும் நாய்களைத் தான் வளர்க்கிறார்கள். நாய்கள் மீதான அன்பு எமது சமூகத்துக்குள்ளும் கொஞ்சம் கொஞ்சமாகப் பரவி வருகிறது. பிள்ளைகளைக் கொஞ்சி அவர்கள் மீது பாசமாக இருப்பதை விட நாய்கள் மீது பாசம் வைப்பது நல்லது என்று நினைக்கிறார்கள் போலும்.

ஆண் பிள்ளை என்றால் பெண் தோழியையும், பெண் பிள்ளை என்றால் ஆண் தோழனையும், பிடித்துக் கொண்டு பதினெட்டு வயதென்ன அதற்கு முதலே காதல் கொள்ளத் தொடங்கி விடுகின்றனர். பெற்றோரைக் கொஞ்சமேனும் மதிப்பதில்லை. உழைத்துக் கொடுப்பதில்லை. விதி விலக்கான தமிழ் பிள்ளைகளும் இருக்கிறார்கள் தான். இருந்தாலும் அவர்கள் ஒரு சிலர்தான்.


பிரிட்டனிலோ ஏனைய ஐரோப்பிய நாடுகளிலோ நாய், பூனை போன்ற வளர்ப்புப் பிராணிகள் மீதான சட்டம் மிகவும் வலுவானது.

அவற்றுக்குத் துன்பம் விளைவிப்பதும் பாரதூரமான குற்றம்.

கொழும்பில் போல, யாழ்ப்பாணத்தில் போல நாய் பிடிக்கிற வான் என்ற விசயத்தைக் கேள்விப்பட்டாலே வெள்ளைக்காரர் இலங்கையை வெறுத்து விடுவார்கள். உல்லாசப் பயணிகளாக வருவதையே நிறுத்தி விடுவார்கள்.

''கடி நாய் கவனம்'' என்று ஊர் வீடுகளில் அறிவித்தல் பலகை தொங்குவது போல இங்கு இல்லை. இங்கு நாய் என்றால் பேபி, பப்பி தான்.

இங்கிருக்கிற நாய்களுக்கான உரிமைகள் இலங்கையில் மனிதருக்கே இல்லை என்பதுதான் பெரும் கவலை எனக்கு. ❋



# கவிதைப்புனல்

## எதிர்பார்ப்பு

வருவாயா
நான் போகும் பேருந்தில்
யன்னல் திறந்திருக்கும்
அமர்ந்திருக்க இருக்கை இருக்கும்
எழுந்தெழுந்து வெளியே பார்த்தபடி
என்னவள் வருவாளா?
மெல்லிய தென்றல் தாலாட்ட
நினைத்தபடி நான் இறங்கும்
இடம் வரும் வரை.

—துன்னாலை,
செல்வம்.

## அன்னை

பத்து மாதம் சுமந்து- எனைப்
பாரினில் பெற்றவள் அன்னை
உதிரத்தைப் பாலாகத் தந்து
என்னை ஊட்டி
வளர்த்தவள்அன்னை
பாசத்தின் ஒளிவிளக்காக
அன்பிற்கு ஆழ்கடலாக
பண்பிற்கு இலக்கணமாக
இந்தப் பாரில் திகழ்பவள்
அன்னை.

—வி.அஜந்தன்,
மருக்காரம்பளை, வவுனியா.

## அன்பின் மாதர்



பெண்மையின் இலக்கணத்தை
பெருமையாய்க் கொண்டு நாங்கள்
கண்ணினை ஒப்ப கற்பைக்
காத்துமே ஒளிர நிற்போம்

அன்பினை அளிக்கும் மாதர்
அறிவினை ஊட்டும் வல்லோர்
துன்பினைத் துடைக்கும் பண்பால்
தூய வாழ்வளிக்கும் மாதர்

மகளிரின் மகத்துவத்தை
மனதிலே இருத்திக் கொள்வோம்
அகமெலாம் களித்துத் துள்ள
அவர் புகழ் பாடி நிற்போம்

மண்ணினை மதிக்கும் மாதர்
மாண்பினை வளர்துயர்வோர்
திண்ணமாய் உலக வாழ்வில்
திகழ்ந்து சீர் சிறக்க வைப்போம்

சந்ததம் இன்பம் ஈய
சரித்திரம் படைக்க வேண்டும்
எந்தையர் நாடு போற்ற
ஏற்றமே எய்தல் வேண்டும்.

– கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்.

## ஜனநாயகம்

தேனினும் இனியது தமிழ்
தேடலில் சிறந்தது வாசிப்பு
மானத்தால் உயர்ந்தது
கவரிமான் – அந்த
மான் போல வாழ்தலே
மகத்துவம்
வீரத்தை வளர்ப்பவர்
மறவர்கள் – சுத்த
வீரத்தை விற்பவர்
சுயநலமிகள் – கொண்ட
தாரத்தை இம்சைப்
படுத்துவோர் – சிறந்த
ஆடவர் வரிசையில்
அமைவதில்லை
சட்டத்தைத் தனதாக்கும்
அதிகாரம் – எந்தக் கட்டத்தில்
வந்தாலும் அநியாயம் – நீதி
வளையாது நிமிரனும்
நாட்டில் ஜனநாயகம்

—சேனையூரன்,
மூதூர் கிழக்கு.

## அரோகரா

ஆலயம் தரிசிக்க
ஆவலோடு போனார்
ஆட்டோவுக்கு
எண்பது ரூபாய்
அர்ச்சனைக்கு
ஐம்பது ரூபாய்
அருகிருந்த
உண்டியலில்
ஐந்து ரூபாய்
ஆண்டவனுக்கு
அரோகரா.

—மாவுறையூரான்—

## வேலி இல்லை



வேலியே பயிரை
மேய்ந்த கதை ஆகி எங்கள்
வேலி நகர்ந்து ஊரின்
வீடரித்த கதைகள் உண்டு

கேலிக் கதையல்ல
இந்தக் கேடு நினை வேலிகளால்
காலியாய் எங்கள் மனை
கடைகள் களவானதுண்டு

எத்தனை பேர் நம்பிடுவீர்
எங்கள் வயற் காவலென
நித்தம் எமைச் சுற்றியிட்ட
நீள் வேலி நம்பாதீர்

சத்தமின்றி ஆள்கடத்தல்
சதி பலவும் செய்கிறது
இத்தனை நாள் காவல் என்று
ஏமார்ந்தோம் வேலி இல்லை.

– பொய் பொறுக்கான்.

## காளான்கள்



மின்னலுக்குப் பிறந்த
குழந்தைகள் கூட
என் தெருவில்
அழகாய்க்
குடை விரித்திருந்தன
நீ மட்டும்
குடைசாய்ந்ததேனோ.

- ஜோ.நிலுஜா, திருகோணமலை.




# மலிங்க ஹட்ரிக் பயணம்

மலிங்க தனது ஹட்றிக் சாதனைகளை இருதடவையும்(2007, 2011) ஆபிரிக்க கண்ட நாடுகளுக்கு எதிராகவே நிகழ்த்தியிருந்தார். இரு தடவையும் முதலாவது சந்தர்ப்பத்தில் (First session) ஓட்டங்களை வழங்கி பின்னர் இரண்டாவது சந்தர்ப்பத்திலேயே ஹட்றிக் கைப்பற்றியிருந்தார். ஒரே ஓவரில் தொடர்ச்சியாக மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றவில்லை.

2007ஆம் ஆண்டு இரண்டு விக்கெட்டுகள் போல்ட் மூலமும் இரண்டு விக்கெட்டுக்கள் பிடியெடுப்பு மூலமும் வீழ்த்தியிருந்தார். ஆனால் இந்த முறை ஒரு விக்கெட் 'எல்.பி.டபிள்யூ' மூலமும் மூன்று விக்கெட்டுக்கள் 'போல்ட்' முறையிலும் வீழ்த்தியுள்ளார்.



# இந்தியாவின் மிரட்டலுக்கு பணிந்தது ஐ.சி.சி.

International Cricket Council

இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் இயன் பெல், யுவராஜ் பந்தை எதிர்கொண்டார். பந்து நேராகச் சென்று அவரது கால்காப்பில் பட்டது. இந்திய வீரர்கள் ஆட்டமிழப்புக்குக் கோரினர். ஆனால் கள நடுவராக நின்றிருந்த பில்லி பௌடன் ஆட்டமிழப்பில்லை என்று தீர்ப்பளித்தார். இதை எதிர்த்து இந்திய வீரர்கள் மேன்முறையீடு செய்தனர்.

அப்போது 'ரீப்பிளேயில்' பந்து விக்கெட்டை தகர்ப்பது தெரிந்தது. இருந்தும் மூன்றாம் நடுவர் ஆட்டமிழப்பு என்று தீர்ப்பளிக்க மறுத்துவிட்டார். கால்காப்பில் தாக்கியதற்கும் விக்கெட்டுக்களுக்குமிடையே உள்ள' தூரம் 2.5 மீற்றருக்கும் அதிகமாக இருந்ததால்தான் ஆட்டமிழப்பில்லை என்று தீர்ப்பளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் சர்ச்சை எழுந்தது. டோனி பெல்லிற்கு அவுட் கொடுக்காததை எதிர்த்தார். இதற்கு ஐ.சி.சி டோனியைக் கண்டித்தது. பதிலுக்கு இந்தியன் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையும் ஐ.சி.சியின் கண்டனத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தது.

அயர்லாந்துடன் இந்திய அணி மோதிய ஆட்டத்தில் இதே போன்றதொரு சர்ச்சை மீண்டும் எழுந்தது. இந்த முறையும் பந்தை வீசியவர் யுவராஜ். இவரது பந்தை அயர்லாந்து வீரர் குசாக் எதிர்கொண்டார். குசாக்கின் கால் காப்பில் பந்து நேரடியாகச் சென்று தாக்கியது. கள நடுவர் ஆட்டமிழப்புக் கொடுக்க மறுத்துவிட்டார். இதனை எதிர்த்த இந்திய அணியின் வீரர்கள் மேன் முறையீடு செய்தனர். பந்து இந்த முறையும் நேரடியாக விக்கெட்டை தகர்ப்பது 'ரிப்பிளேயில்' தெரிந்தது. அத்துடன் பந்து அவரது கால்காப்பில் தாக்கிய இடத்திற்கும் விக்கெட்டுக்கும் இடையே 2.5 மீற்றர் தூரம் இடைவெளியிருந்தது. ஆனால் இந்த முறை மூன்றாம் நடுவர் ஆட்டமிழப்புக் கொடுத்தார்.

எனவே இந்திய அணியின் எதிர்ப்பைத் தொடர்ந்து ஐ.சி.சி அந்த அணியிடம் அடிபணிந்துவிட்டதே எனக் கூறப்படுகின்றது.




# இவர்க...
# பயணம்

பத்தாவது உலகக் கிண்ணப் போட்டிகளி... முதல் சுற்று லீக் ஆட்டங்கள் ஒருவாறு முடி...வுக்கு வரத் தொடங்கியுள்ளன.

ஆங்காங்கே கத்துக்குட்டி அணிகள் பலமான அணிகளைச் சரித்துள்ளன. இருந்தும் அந்த அணிகளினால் காலிறுதிச் சுற்றுக்குள் நுழைவது என்பது எளிதானதாக இருக்கப் போவதில்லை.

2007ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளின்போது கத்துக்குட்டி அணிகளான பங்களாதேஷ், அயர்லாந்து என்பன அதிஷ்டவசமாக இரண்டாம் சுற்றுக்குத் தெரிவாகியிருந்தன.

ஆனால் இந்த முறை அவ்வாறு அதிஷ்டத்தில் பலம் குறைந்த அணிகள் தெரிவாவதற்கான வாய்ப்புக்கள் இல்லாமல் போய்விட்டன. இவர்களை இல்லாமல் செய்வதற்கும் இந்தியாவின் விளம்பரங்கள் மற்றும் அனுசரணைகளை இறுதிவரை பேணுவதற்குமாகவே போட்டி அட்டவணைகள் அமைக்கப்பட்டிருந்தன.

அதனடிப்படையில் முன்னணி அணிகள் இரண்டாம் சுற்றில் ஆடும் வாய்ப்பைப் பெற்றுக்... கொள்ளவுள்ளன.

'ஏ' பிரிவைப் பொறுத்த வரையில் பாகிஸ்தான்... இலங்கை, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகி... அணிகள் காலிறுதியில் விளையாடும் வாய்ப்பை... பெற்றுக்கொள்ளும்.

'பி' பிரிவைப் பொறுத்த வரையில் இந்தியா, தெ...னாபிரிக்கா, இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய அணிகள் காலிறுதியில் விளையாடும் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளக்கூடும்.

**பாகிஸ்தான்**

இந்த முறை உலகக் கிண்ணப் போட்டிகளில் கிண்ணம் வெல்லும் நாடுகளில் கணிக்கப்படாத ஒன்று. இருந்தும் ஏனைய அணிகளுக்கு அபாயச் சங்கு ஊதிக்கொண்டிருக்கின்றது.

**இலங்கை**

போட்டிகளை நடாத்தும் நாடு. கிண்ணத்தை வெல்... எதிர்பார்ப்பு. கத்துக்குட்டி அணிகளுக்கு எதிராக அ... குவித்துக் கொண்டு. பலமான அணிகளுக்கு எதிராக சே...



# விலகினார் பீட்...

'ஹெறினியா' அறுவைச் சிகிச்சை மேற்கொள்வதற்காக இங்கிலாந்து வீரர் கெவின் பீட்டர்சன், உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். இவருக்குப் பதிலாக மோர்கன் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் தொடர்ந்து விளையாடுவதற்கு தனது உடல்நிலை ஒத்துழைக்குமா என சந்தேகமாக இருப்பதாக பீட்டர்சன் தெரிவித்துள்ளார்.

தற்போதைய உலகக் கி...ரில் ஆரம்பத் துடுப்பாட்ட...மிறங்கி அசத்தி வரும் பீட்...கல் இங்கிலாந்து அணிக்கு... பின்னடைவை ஏற்படுத்து...கப்படுகின்றது.

# களின் காலிறுதி
# உறுதியாகிவிட்டது

ட்டிகளின்
று முடி

ிகள்
ருந்



ிகள்
று

ஸ்தான்,
து ஆகிய
ாய்ப்பைப்

தியா, தென்
தீவுகள்
ாடும்

ந வெல்லும் என்பது பலரது
ாக அபரா வெற்றிகளைக்
திராக சோர்ந்து விடுகின்றது.

**ஆஸ்திரேலியா**

உலகக் கிண்ணப் போட்டிகள் நெருங்குகையில் மீண்டும் தனது அதீத பலத்தை இங்கிலாந்துக்கு எதிராக நிரூபித்தது. உலகக் கிண்ணப் போட்டிகளிலும் தனது பழைய கர்வத்துடன், தொடர்ச்சியாக நான்காவது கிண்ணத்தை வெல்வதற்காகக் கண் வைத்துள்ளது.

**இங்கிலாந்து**

இந்தியாவை அதன் சொந்த மண்ணில் வைத்து அதிர்ச்சி கொடுத்தது. ஆனால் அயர்லாந்திடம் அதிர்ச்சித் தோல்வி கண்டது. தென்னாபிரிக்காவைப் பரபரப்பாய் வெற்றிகொண்டது. கிண்ணத்தை நெருங்குகின்றது. இருந்தும் களத்தடுப்பின் தவறுகள், அதன் கையில் இருந்து கிண்ணத்தை வீழ்த்தி விடக்கூடும்.

**தென்னாபிரிக்கா**

வழமைபோல் அரையிறுதி வரை தலைகாட்டும். அங்கு அந்த அணியின் அதிஷ்டதேவதை வந்து அரையிறுதியுடனேயே அழைத்துச் சென்றுவிடும். இங்கு அதிஷ்டதேவதை எந்த வடிவில் வரும் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கும்.

**இந்தியா**

பலகோடி ரசிகர்களின் எதிர்பார்ப்பு இவர்களுக்கே கிண்ணம் என்பது. இருந்தும் அதற்கான தகுதிகள் போதுமானதாக இல்லை. துடுப்பாட்டம் என்னும் ஒரு இரும்புப் பலம் வைத்து எதிரணியை வீழ்த்த நினைப்பது இவர்களின் எதிர்பார்ப்பு. இருந்தும் பந்துவீச்சும் களத்தடுப்பும் கோட்டை விடும் வரை எதிரணிகள் இவர்களுக்கு 'கண்ணுக்குள் விரலை விட்டு ஆட்டுவார்கள்'. இருந்தும் அதிஷ்டம் இவர்களின் பக்கம் இருப்பதால் கிண்ணம் சில வேளைகளில் இவர்கள் கைகளில் தஞ்சமடையலாம்.



# மீண்டும் திரும்புகிறார் மைக்கல் ஹஸி

காயம் காரணமாக உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் சேர்க்கப்படாத ஆஸ்திரேலியாவின் மைக்கல் ஹசி மீண்டும் அணிக்கு திரும்பியுள்ளார்.

காயம் காரணமாக டக் பொலிஞ்சர் விலகியதையடுத்து ஹசியை மீண்டும் அழைத்தது ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம். விரைவில் அவர் ஆஸ்திரேலிய அணியினருடன் சேர்ந்து பயிற்சியில் ஈடுபடவுள்ளார்.

பெங்களூரில் நடைபெற்ற கென்யாவுக்கு எதிரான ஆட்டத்தில் அவர் களமிறக்கப்படலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. அவர் அணிக்குத் திரும்புவது ஆஸ்திரேலிய அணியின் துடுப்பாட்டத்திற்கு மட்டுமின்றி சுழற்பந்து வீச்சுக்கும் வலுச் சேர்த்துள்ளது.

அவர் அணியில் இடம்பெறும் பட்சத்தில் டேவிட் ஹசி அல்லது கம ரான் வைட் அணியில் இருந்து நீக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

15 பேர் கொண்ட ஆஸ்திரேலிய அணியில் இடம்பெற்றிருந்த மைக்கல் ஹசி, காயம் ஏற்பட்டதை அடுத்து அறுவைச் சிகிச்சைக்காக அணியிலிருந்து விலகினார்.

அறுவைச் சிகிச்சை முடிந்த பின்னர் அவர் குயின்லாந்து அணிக்காக விளையாடினார். இந்த நிலையில் டக் பொலிஞ்சரின் விலகல், ஹசிக்கு உலகக் கிண்ண ஆட்டங்களில் விளையாடும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.



மழையால் கைவிடப்பட்ட இலங்கை - ஆஸ்திரேலியா இடையிலான ஆட்டத்தினைப் பார்வையிடுவதற்காக பல வர்ணங்களில் நிறப்பூச்சுக்களைப் பூசிக்கொண்டு வந்த இலங்கை ரசிகர்கள்...

# ட்டர்ஸன்

லகக் கிண்ண தொட
ப்பாட்ட. வீரராக கள
நம் பீட்டர்சனின் விலை
ணிக்கு பெரியதொரு
படுத்துமென தெரிவிக்



# ஆணைக் கொல்லும் அழகு



கிளவ்டியா

கிளவ்டியா 20 வயது மாணவி. பிரிட்டன் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்பதற்காக அங்கு தங்கியிருந்தவர். பிரபல பொப்பாடகியாக வரவேண்டும் என்ற இந்த இலட்சியமே இவரது உயிருக்கு எமனாகியது. தனது உடலின் பின் பாகத்தை செயற்கையாக மாற்றியமைக்க முயன்றதன் காரணமாக கிளாவ்டியா மரணத்தைத் தழுவினார். அமெரிக்காவின் பிலதெப்பியாவில் தனது உடலின் பின்பாகத்தை திருத்தியமைக்கும் சத்திரசிகிச்சைக்காக அமெரிக்கா சென்றார்.

உடலின் பின்பகுதி பெரிதாக இருந்தால் இவரது இலட்சியம் இலகுவாக நிறைவேறும் என விளம்பரதாரர்கள் வலியுறுத்தினர். உடையோடு சேர்த்து பின்பக்கத்தைப் பெரிதாகக் காட்டக்கூடிய இறுக்கமான ஆடைகளை அணிந்தே நிகழ்ச்சிகளில் தோன்றியும் சில நல்ல சந்தர்ப்பங்களை இழந்ததன் வலி, சட்டவிரோதமான முறையில் சத்திரசிகிச்சையொன்றைச் செய்து கொள்ளும் நிலைக்குக் தள்ளியது. பிலதெப்பியாவில் உள்ள ஹோட்டல் ஒன்றில் குறைந்த செலவில் அந்தச் சத்திரசிகிச்சையைச் செய்து கொள்ளலாம் என அறிந்து அங்கு சென்றார். சிகிச்சையின் போது கிளாவ்டியாவின் பின் பகுதியில் தான் ஊசி ஏற்றப்பட்டது. ஊசி மருந்து ஏற்றி பன்னிரண்டு மணித்தியாலங்களின் பின் இவருக்குத் தீவிர மார்பு வலி ஏற்பட்டு மரணித்துள்ளார். உடலின் பின் பகுதியைப் பெரிதாக்குவதற்கான 'சிலிக்கொன்' ரக ஊசி மருந்துகள் மிகவும் விலை கூடியவையாதலால் விலை குறைந்த கைத்தொழில்துறை சார்பான 'சிலிக்கொன்' ரக ஊசி மருந்து இவருக்கு ஏற்றப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனை ஒத்த மேலும் ஒரு சம்பவமும் பிரிட்டனில் நிகழ்ந்துள்ளது. முப்பது வயதான 'ஜோ' என்ற பெண், மார்பக சத்திர சிகிச்சைக்காக பெல்ஜியத்தின் பிரஸல்ஸ் நகருக்கு சென்றார். ஆனால் அங்கு சிகிச்சை தவறாக மேற்கொள்ளப்பட்டு அவர் கடுமையான வேதனையை அனுபவிக்க வேண்டியதாயிற்று. இந்தப் பெண் ஒரு குழந்தையைப் பிரசவித்ததுடன் மார்பகம் சிறிதாகிவிட்டது. மார்பகங்களைப் பெரிதாக் கப் பயன்படும் 'சிலிக்கோன்' கசிந்து உடல் முழுவதும் பரவியதால் இவருக்குச் கடுமையான வலி ஏற்பட்டது. இந்த சத்திர சிகிச்சை இடம்பெற்று நீண்ட நாட்களுக்கு பின்தான் வலிக்கான காரணம் கண்டறியப் பட்டது.

இந்த இருசம்பவங்களுக்கு அழகு சார்ந்தது. அதாவது இயற்கையாக கிடைக்கப்பெற்ற அழகைப் மாற்றியமைக்க முயற்சித்த வேளையில் நிகழ்ந்தவை.

இதன்மூலம் அழகு என்பது சிகிச்சைகளாலும், சத்திரசிகிச்சைகளாலும், அலங்காரங்களாலும் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒன்று என்ற நிலைப்பாட்டுக்கு மனித சமூகம் வந்துவிட்டது என்றே எண்ணத் தோன்றுகிறது. அப்படியாயின் இயற்கையான அல்லது உண்மையான அழகென்பது என்ன? யார் அதனைத் தீர்மானிக்கிறார்கள்?

அழகென்பது அவரவர் பார்வைக்குட்பட்டது. ஒருவரது அறிவு, ரசனை, கற்பனை போன்றவையே அழகு பற்றிய எண்ணத்தைத் தீர்மானிப்பவைகளாக அமைந்துவிடுகின்றன. இதனாலேயே ஒருவருக்கு அழகாகத் தோன்றும் காட்சியோ அல்லது பொருளோ மற்றொருவருக்கு அழகற்றதாகத் தோன்றுகின்றது. எனவே அழகைத் தீர்மானிப்பதில் அறிவின் அளவே ஆக்கம் செலுத்தும்.

பெரும்பாலும் இருபாலாரின் அழகைத் தீர்மானிப்பவர்கள் அதிகாரத்திலிருக்கும் ஆண்கள்தான். அழகு சாதனப் பொருட்களுக்கான விளம்பரங்களையும், சினிமாவில் காட்டப்படும் ஆடை அலங்காரங்களையும் வடிவமைப்பதில் பெரும்பங்கு வகிப்பவர்கள் அவர்களே. ஆகவே அழகைத் தீர்மானிப்பதில் பெரும் பங்கு ஆண்களுக்கு உரியது. அவர்களது விளம்பரங்களும், சினிமாக்களும் தாம் விரும்பும் அழகிற்கு இலக்கணம் வகுக்கிறது. அந்த இலக்கணம் கூறும் "அழகின்மைகளாக" பெண் மார்பகத்தின் சிறியளவு, குறையான பின்னழகு அல்லது இல்லாத பின்னழகு, படியாத கூந்தல், சுருண்ட கூந்தல், வளராத கேசம், மாற்ற முடியாத கறுப்பு நிறம், கருமை,

**தம்பி**

கண்ணைச் சூழ்ந்திருக்கும் கருவளையம், இளநரை, விரியாத ஆண் மார்பு, இள வயதில் விழும் வழுக்கை, சீரற்ற பல் வரிசை, கட்டுப்படுத்த முடியாத வியர்வை மணம் என பல்வேறு மனித நடத்தையியல் ஒழுங்கீனம் சார்விடயங்கள் அமைந்துவிடுகின்றன. இவைகள் இயற்கை, வதியும் சூழல், நோய்த்தாக்கம், சுய சுகாதாரப் பழக்க வழக்கம், குடும்பநலம், உணவுப் பழக்க வழக்கங்கள் போன்றவற்றினால் தீர்மானிக்கப்படுபவை அல்லது பரம்பரையலகுகளினால் கடத்தப்படுபவை. உலகளெங்கிலும் வாழும் மனிதர்களிடம் காணப்படும் இவ் "அழகின்மைகளை" பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களும் அதற்கு அத்திவாரமாய்த் திகழும் விளம்பர கைக்கூலிகளும் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். தாம் தயாரிக்கும் அலங்காரப் பொருட்களை இலகுவாக விற்பனை செய்வதற்கு விளம்பரங்கள் படம்பிடித்துக் காட்சிப்படுத்தும் "அழகின்மைகளை" சாதகமாக்கிக் கொள்கின்றன. அமெரிக்காவில் தயாரிக்கப்படும் விலைகூடிய வாசனைப் பொருளை, அபிவிருத்தியின் வாசனையைக் கூட நுகர்ந்திருக்காத ஏழைக் கிராமம் ஒன்றில் பெற்றுக்கொள்ளமுடியும். அங்கிருக்கும் ஓட்டைக் குடிசைகளின் அடுப்பில் பூனைபடுத்திருக்கும் ஆனால் கண்ணாடிக்கு முன்னிலையில் fair and lovely உட்பட்ட அழகுசாதனப் பொருட்கள் இடம்பிடிக்கத் தவறுவதில்லை. 'அழகாக' வேண்டும் என்ற எண்ணம் வேறுபாடு அற்றது. சமூகத்தில் மத்திய தர, உயர்தர வர்க்கத்தின் அழகு தொடர்பான கற்பனைகள் வெவ்வேறு விதமானதாக அமைந்து விடுகின்றது. அந்த அடுக்குகளில் உள்ளவர்களின் பெண்களுக்கு அலங்கார நிலையங்களும் (facial centre), ஆண்களுக்கு உடற்கட்டுமான நிலையங்களும் (jim centre) அழகைத் தரும் தொழிற்சாலைகள். அதற்குள் மூடிக்கட்டியபடி படுத்திருக்கும் எந்தப் பெண்ணும் முகப் பூச்சு விளம்பரங்களில் வரும் திரிஷாவையோ, அசினையோ மறக்கமாட்டார்கள். அலங்காரம் முடிந்ததும் தான் ஒரு திரிஷா அல்லது அசின் என்ற கற்பனை உலகம் அவர்களை மெய்மறந்து படுத்திருக்கச் செய்யும்.

உடற்கட்டுமான நிலையங்களில் நிற்கும் ஆண்களின் எண்ணம் முழுவதும் சூர்யாவிடமோ, கிரித்திக் ரோஷனிடமோ ஒப்படைக்கப்பட்டிருக்கும். ஒரே நாளில் அந்த எண்ண இலக்கை அடைந்து விடலாம் என்ற கனவில் மிதந்தபடியே இருப்பர். மாலைவேளைகளில் சாப்பாட்டுக் கடைகளில் இருக்கும் போது வரும் அவ்வாறான இளைஞர்களைப் பார்த்தால், ஏதோ இப்போது தான் காளை அடக்கும் போட்டிகளில் கலந்து கொண்டுவிட்டு வருபவர்கள் போல இருப்பர். அவர்களின் கதைகளை சாதாரண ஒரு மனிதனால் தாங்கிக்கொள்ள முடிவதில்லை. மனித நிலைகளுக்கு அப்பாலான கற்பனைகள் அவர்களிடம் இருந்து தான் ஊற்றெடுத்துக் கொண்டிருக்கும்.

இந்த இளைஞர்கள் விளம்பரங்களில் தோன்றும் அழகிகளைப் போன்றவர்களை தமது காதலிகளாகக் கற்பனை செய்தலைவதும், பெண்கள் சூர்யா, கிரித்திக்ரோஷன் போன்ற ஆண்களைத் தேடியலைவதும் நாம் கண்களால் காண்பவை. இதற்கு இன்றையவர்கள் பாவிக்கும் கைத்தொலைபேசிகளின் முகப்புப் பக்கங்களில் இருக்கும் காட்சிகளே சாட்சி. இது சாத்தியமா? எல்லோரும் விளம்பர, சினிமா "அழகர்கள்' ஆக முடியுமா?

விளம்பரங்கள் காட்டும் மாய அழகுக்கு விஞ்ஞானமும், அறிவியலும் சாதகமானதாக இருக்காது. குளோனிங்கினால் வேண்டுமானால் உருவாக்கமுடியும். அதனால் என்னபயன்? அதனால் மனிதர்களிடம் இருக்கும் எல்லா உணர்வுகளையும் எதிர்பார்ப்பது முட்டாள்த்தனம். அலங்காரங்களாலும், சிகிச்சைகளாலும் விளம்பரங்கள் கட்டமைக்கும் அழகர்களாக வருவது கொஞ்சமும் சாத்தியமில்லை. அதுவொரு இலகுவான கற்பனை மட்டுமே. அப்படிச் சாத்தியமானாலும் எல்லோரும் ரோஷனாகி என்ன செய்வது? அசினாகி என்ன பயன்?

யாழ்ப்பாணத்தில் Trade fair 2011 நடைபெற்றது. அங்கு சென்றவர்களில் அதிகமானோர் இளம் பெண்கள். கண் காட்சிகளைப் பார்க்கவோ அல்லது கொள் வனவு செய்வதற்காகவோ அல்ல. அங்கு facial இலவசமாகச் செய்யப்பட்டது.

இங்கு குறிப்பிடப்பட்ட "அழகின்மைகள்" பற்றிய முழு அவதானிப்புக்களும் இலங்கையில் மட்டும் அவதானிக்கப்பட்டவை. ஆயினும் அவை முழு உலகிற்கும் பொதுவானவை. இன்று ஆபிரிக்காவில் வாழும் ஒரு கறுப்பினத்தவரின் எண்ணம் முழுவதும் 'தான் வெள்ளையாவது எப்படி? தன் சுருண்ட கேசத்தை நிமிர்த்துவது எப்படி? என்பதிலேயே இருக்கிறது.

இதுபோல் தான் இலங்கையில் வாழும் ஒவ்வொரு இளைஞனும் யுவதியும் நினைக்கின்றனர். இவர்களின் எதிர்கால அழகு சார் இலட்சியங்களாக சினிமாக்காரர்கள் அல்லது கிரிக்கெட் வீரர்கள் அல்லது விளம்பர அழகர்கள் இருக்கின்றனர். இது இவர்களின் எதிர்காலத்தைச் சாத்தியமற்றதாக்கிவிடும்.


இங்கும் கிளாப்டியாக்கள் உருவாகும் நிலை வரலாம். இதற்கு இலங்கையின் நகரப்புறங்களில் புதிது புதிதாய் முளைக்கும் அழகுபடுத்தும் நிலையங்களே எடுத்துக்காட்டு. இதற்காக மேலுமொரு நிகழ்காலச் சம்பவத்தையும் குறிப்பிடமுடியும்.

யாழ்ப்பாணத்தில் Trade fair 2011 நடைபெற்றது. அங்கு சென்றவர்களில் அதிகமானோர் இளம் பெண்கள். கண் காட்சிகளைப் பார்க்கவோ அல்லது கொள் வனவு செய்வதற்காகவோ அல்ல. அங்கு facial இலவசமாகச் செய்யப்பட்டது. ★



யாழ்ப்பாணத்தில் முக அலங்காரத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் பெண்கள்

# மலையக எதிர்காலச் சந்ததியினர் எதிர்நோக்கும் முட்டுக்கட்டைகள்



இரா.புத்திரசிகாமணி

ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியின் கெடுபிடிகளினால் தகுதியும் தராதரமும் உள்ள மலையக மாணவர்கள் பலர் அக்கல்லூரியில் அனுமதி பெறும் வாய்ப்பினை இழந்துள்ளனர். கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித் தலைக்காட்டி கை விரித்து விடுகின்றனர் கல்லூரி நிர்வாகத்தினர். இதனால் இரண்டும் கெட்டான் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் இந்த மலையக இளைஞர் யுவதிகள்.

ஸ்ரீபாத கல்வியற் கல்லூரியில் ஒரு மாணவன் பயிற்சிக்குச் சேர வேண்டுமானால், அந்த மாணவனுடைய பெற்றோர் சுகவீனம் காரணமாகவோ, இயலாமையினாலோ வேலையை விட்டு விலகியிருந்திருக்கக் கூடாது. ஓய்வு பெற்றிருக்கக் கூடாது. விசேடமாக, பிள்ளைகள் ஸ்ரீபாத கல்வியற் கல்லூரியில் அனுமதி பெறும் வரை இயற்கையாகக் கூட இறந்திருக்கக் கூடாது. இதுதான் நிபந்தனை. அதாவது மாணவர் அனுமதிக்கப்படும் போது பெற்றோர் தோட்டங்களில் வேலை செய்து கொண்டிருக்க வேண்டும். இது என்ன கொடுமை?

பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பைத் தொடர முடியாத மாணவர்கள் உயர் கல்வியைப் பெறுவதற்காக உருவாக்கப்பட்டது தான் பத்தனை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி. ஆரம்பத்தில் நூற்றுக்கு நூறு வீதம் மலையகத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு மட்டுமே என ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரியில் பின்னர் 25 வீதமான சிங்கள மாணவர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டது.

பெரும்பான்மைச் சிங்கள மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் போது அவர்கள் மலையகத்தில் நிரந்தரமாக வாழ்பவர்களா? அவர்களுடைய பெற்றோர் தோட்டத்தில் வேலை செய்கின்றனரா? என்று கேட்கப்படுவதில்லை.

ஆனால் இந்திய வம்சாவளி மலையகத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்காகவே ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரியில், தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளை அனுமதிக்கும் போது மட்டும் கடுமையான கெடுபிடிகளை மேற்கொள்கின்றனர்.

*இலங்கைப்பிரஜையா? இந்தியப்பிரஜையா?

*பெற்றோர் தோட்டத் தொழிலாளர்களா?

*தொழில் செய்பவர்களானால் அவர்களுடைய ஊழியர் சேமலாப நிதி அங்கத்துவ இலக்கம்.

*இவர்கள் தோட்டத்தில் தான் தொழில் செய்கின்றனர் என்பதை உறுதிப்படுத்தும் தோட்டத்துரையின் அத்தாட்சிக் கடிதம்.

*தோட்டங்களிலேயே நிரந்தரமாக வசிக்கின்றனர் என்பதும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்பதாரிகளின் வழமையான கல்வித் தராதரச் சான்றிதழ் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை, கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் என்பனவற்றிற்கும் மேலதிகமாக மேலே குறிப்பிட்ட சான்றிதழ்களும் கட்டாயமாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு கிடைக்க வேண்டிய வாய்ப்பு வேறு நபர்களால் தட்டிப்பறிக்கப்படக் கூடாது என்பதற்காகவே இந்த விதிகள் கடைப்பிடிக்கப்படுவதாக நியாயப்படுத்தப்படுகின்றது.

இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

ஆனால் பத்தனை ஸ்ரீ மாத கல்வியியல் கல்லூரிக்கு பயிற்சியாளர்களைச் சேர்த்து கொள்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் பெரும் சிக்கலை ஏற்படுத்தி உள்ளது. இதனால் சகல விதமான கல்வித் தகைமைகளும் உடைய பெரும்பாலான மாணவர்கள் அனுமதி நிராகரிக்கப்பட்டுள்ளனர்.

எந்த வகையில் இம்மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்று பாருங்களேன்.

*விண்ணபித்த மாணவன் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் வேளையில் அந்த மாணவனின் பெற்றோர் தோட்டங்களில் தொழில் செய்து கொண்டிருக்க வேண்டும் என்பது கட்டாயம். இல்லாவிட்டால் அம் மாணவன் பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்.

*பெற்றோர் நிரந்தரமாகத் தொழில் செய்தவர்கள். ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம், சேவைக்கால கொடுப்பனவுகளுக்கும் உரித்துடையவர்களாக இருந்தும்.

(அ) நோய் அல்லது இயலாமை காரணமாக வேலையை விட்டு விலகியவர்களாக,

(ஆ)ஓய்வு பெறும் வயதை அடைந்ததால் ஓய்வூதியம் பெற்றவர்களாக,

(இ)காலம் காலமாகத் தோட்டத்தில் வேலை செய்து இறந்து போனவர்களாக,

இருந்தாலும் நேர்முகப் பரீட்சை நடைபெறும் போது ''பெற்றோர் தொழிலில் இல்லை'' என்று காரணம் காட்டி பெருந்தொகையான மாணவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப் பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் தமது மலையக அரசியல் தலைவர்களிடம் முறையிடும்போது ''என்னப்பா செய்வது? வர்த்தமானியில் உள்ளபடி தானே அவர்கள் செய்கிறார்கள். இதில் ஒன்றும் செய்ய முடியாது'' என்று கைவிரித்து விடுகின்றனராம்.

> **பெரும்பான்மைச் சிங்கள மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் போது அவர்கள் மலையகத்தில் நிரந்தரமாக வாழ்பவர்களா? அவர்களுடைய பெற்றோர் தோட்டத்தில் வேலை செய்கின்றனரா? என்று கேட்கப்படுவதில்லை.**

காரணம், இவர்களுக்குக் கல்வியின் பெருமை புரியாது. பாதிக்கப் பட்ட மாணவர்களின் மனநிலை தெரியாது. இதனால் மலையகத்திற்கு எதிர்காலத்தில் ஏற்படவுள்ள பாதிப்புமே தெரியாது. குறிப்பிட்டுக் கூறவேண்டுமானால், தொழிலாளியின் பிள்ளைகள் படித்து முன்னேறி விடக் கூடாது என்பதே இத்தலைவர்களின் உள்நோக்கம்.

வர்த்தமானி அறிவித்தல் என்ன பெரிய அறிவித்தல். நாம் நினைத்தால் மாற்றி எழுத முடியாதது எதுவும் இல்லை.

*ஸ்ரீ பாத கல்வியற் கல்லூரி தனிப்பட்ட முறையில் இந்திய வம்சாவளி தொழிலாளர்களின் குழந்தைகளுக்காகவே உருவாக்கப் பட்டது என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

*தோட்டங்களில் பணிபுரிந்தவர்கள், தொழில் புரிந்தவர்கள் என்பதைத் தோட்டத்துறைமார் உறுதிப்படுத்தும் கடிதம்.

*தோட்டத்திலேயே நிரந்தரமாக வாழ்பவர்கள் என்பதை உறுதிப்படுத்தும் கடிதம்.

*தோட்டங்களிலேயே இவர்களுடைய வாக்குரிமை பதியப்பட்டுள்ளது என்பதற்கான கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ்.

இவர்கள் மலையகத்தில் நிரந்தரமாக வாழும் இந்திய வம்சாவளியினர் என்பதை உறுதிப்படுத்த இவை எல்லாமே போதுமே. இவை அனைத்தும் இருந்தும் இப்பொழுது வேலை செய்யவில்லை. என்ற ஒரே காரணத்தால் இம்மாணவர்களுக்கு வாய்ப்பளிக்க மறுப்பது அவர்களின் எதிர்பார்ப்புக்களையும் எதிர்காலத்தையுமே சூனியமாக்கிவிடும் செயலாகும். எனவே மலையகத் தலைமைகள் பாதிக் கப்பட்ட இம் மாணவர்களுக்கு விமோசனம் பெற்றுக் கொடுக்க ஒன்றிணைந்து முயற்சிக்க முன்வர வேண்டும். *




## மூளைக்கு வேலை தரும் மாயச் சதுரம்

### கணிதப் புதிர் - 07

| | | | | |
|---|---|---|---|---|
| 17 | 10 | 3 | 26 | 19 |
| 18 | 16 | 13 | 7 | 25 |
| 24 | 22 | 15 | 8 | 5 |
| 6 | 23 | 21 | 14 | 12 |
| 11 | 4 | 27 | 20 | 9 |

இடம் மாறியுள்ள நான்கு எண்களை மாத்திரம் உரிய கூட்டிற்குள் மாற்றியிடுவதன் மூலம் நிரை, நிரல், மூலைக்கு மூலை கூட்டுத்தொகை 75 ஆகும் வண்ணம் எண்களை ஒழுங்கமையுங்கள். உங்கள் முயற்சி வெற்றியளித்ததா? என்பதை அறிய அடுத்த வாரம் இளஞ்சுடரைப் பாருங்கள்.

---

**கணிதப் புதிர் - 06 இன் சரியான விடை**

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | 7 | 26 | 20 | 19 |
| 6 | 25 | 24 | 18 | 12 |
| 29 | 23 | 17 | 11 | 5 |
| 22 | 16 | 10 | 9 | 28 |
| 15 | 14 | 8 | 27 | 21 |

## மகிழ்ச்சி

ஒருவரின் வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பது பிறரை நல்ல முறையில் மகிழ வைப்பதில்தான் தங்கியிருக்கிறது.

- மெஹர் பாபா.

## துலங்கும் புள்ளிகள்

### சார்லி சப்ளின்



சிரிப்பூட்டும் மருந்து - அன்பு
செய்திடும் மனிதர்க்கெல்லாம்
இனித்திடும் கரும்பு - கல்லாய்
இருப்பவர் இதயம் சூழ்ந்து
கனிந்திடும் களிப்பு - துன்பம்
கலைத்திடு விருந்து வீரம்
சொரிந்திடும் கலைத்தீன் - சார்லி
சப்ளின் ஓர் இமயமென்போம்

கறுப்பு வெண்திரையில் - வண்ணம்
காட்டிய சுவைச் சிரிப்பின்
திறப்பெனத் திகழ்ந்தோன் - பேசான்
திரைப்படத் திருந்தே செய்கைத்
தொகுப்பதால் மக்கள் - துன்பம்
தொலைத்தவர் உள்ளம் தொட்டோன்
நகைச்சுவை மகிழ்வு - கொஞ்சும்
நடிப்பினன் சார்லி சப்ளின்

★ 1889 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ஆம் நாள் பிறந்தார்.
★ அவரது தாயார் ஹின்னா ஒரு மேடை நாடகப் பாடகியாவார்.
★ சார்லி சப்ளின் தனது தாயாரால் வளர்க்கப்பட்டவர்.
★ தாயைப் போன்று பாடும் இனிமையான குரலால் மக்களின் பாராட்டைப் பெற்றார்.
★ ஏழையாகப் பிறந்து லட்சாதிபதியாகி 1977 டிசம்பர் மாதம் 25ஆம் நாள் காலமானார்.

- உமாபாரதி.

## முட்டை



வேணியும் மதனும் சாப்பாட்டு மேசையின் முன் அமர்ந்தனர். அவர்களது அம்மா மேசையின் அருகில் இல்லை. 'அம்மா பசிக்கின்றது என்று சொல்லிக் கொண்டே மேசையில் இருந்த இடியப்பம், சம்பல், மீன்கறி எல்லாவற்றையும் பார்த்தனர். 'எடுத்துச் சாப்பிடுங்கள்' என்று அம்மா அறைக்குள் இருந்து கூறினாள் 'வேக வைத்த முட்டை ஒன்றும் வைத்திருக்கிறேன். அதை மதன் அண்ணாவுக்குக் கொடு' என்று அம்மா வேணிக்குச் சொன்னாள். மேசையில் இரண்டு முட்டைகள் இருந்தன. எந்த முட்டை அவித்த முட்டை என்பதை அவளால் உடனேயே அடையாளம் காண முடியவில்லை. ஆனால் மதன் அந்த முட்டைகளில் ஒன்றை எடுத்து மேசையில் சுழல விட்டான். அது சுழன்று கொண்டு இருக்கும்போதே அதனை ஒரு விரலால் மெதுவாகத் தொட்டான். சுழற்சி நின்றது. உடனே விரலை எடுத்ததும் அது மீண்டும் சுழலத் தொடங்கியது. அதைப் பார்த்த மதன் 'இது அவித்த முட்டை அல்ல. மற்றதுதான் அவித்த முட்டை' என்றான். அதற்கு வேணி 'நீ எப்படி அதனைக் கண்டறிந்தாய்' என்று கேட்டாள். 'பச்சை முட்டையின் ஓடு கெட்டியானது. உள்ளிருக்கும் கரு திரவத் தன்மை கொண்டது. அந்த முட்டையைச் சுழற்றினால் அது சுழலும்போது தொட்ட உடன் நின்று, கையை விட்டவுடன் மீண்டும் சுழலும். ஆனால் அவித்த முட்டை அப்படியல்ல. முட்டையை அவித்தால் உள்ளிருக்கும் கருவும் ஓட்டைப்போல் கெட்டியாகிவிடுகிறது. எனவே அவித்த முட்டையின் சுழற்சியை விரலால் தொட்டவுடனே நிறுத்தமுடியும். அது மீண்டும் சுழலாது' என்றான் மதன். அவனது விளக்கத்தைப் புரிந்துகொண்ட வேணி, வேக வைத்த முட்டையின் ஓடும் கருவும் கடினமாகிவிடுகிறது. ஆனால் அவிக்காத முட்டையின் கரு திரவமாக இருப்பதால் சுழலும்போது நிறுத்தினால் சில வினாடிகள் நின்று மீண்டும் சுழலுகிறது என்றாள். ஓர் அறிவியல் உண்மையை அறிந்த இருவரும் மகிழ்ச்சியுடன் சாப்பிடத்தொடங்கினார்கள்.

- ஜோ.நிலு.



## காந்தி அடிகள்

ஒரு சமயம் ஒரு ஆங்கிலப் பத்திரிகையாளர் மகாத்மா காந்தியைச் சந்தித்தார். அவர் காந்தியடிகளைக் கிண்டல் செய்யும் நோக்கத்துடன் 'உங்கள் மக்கள் உங்களை ஏன் பிரதிநிதியாக ஏற்றுக்கொண்டார்கள். வேறு தலைவர்களே அவர்களுக்குக் கிடைக்கவில்லையா?' என்று கேட்டார். காந்தி அடிகள் சிரித்துக்கொண்டே 'உங்களைச் சமாளிக்க நான் ஒருவனே போதும் என்று எங்கள் மக்கள் எண்ணியிருக்கலாம்' என்றார். அதைக் கேட்ட அந்த ஆங்கிலேயர் வெட்கமடைந்தார்.


## பாதை தெரியவில்லை



ஒரு குருவானவர் ஓர் ஊருக்குச் சென்றிருந்தார். அவ்வூரில் இருந்து வேறு இடங்களுக்கு சில கடிதங்களை அனுப்பவேண்டியிருந்தது. அவர் அவ்வூருக்குப் புதியவர் ஆதலால் தெருவில் சென்ற சிறுவனிடம் 'தம்பி அஞ்சல் அலுவலகத்துக்கு எந்தப் பாதையால் போவது' என்று கேட்டார். 'என்னுடன் வாருங்கள் காட்டுகிறேன்' என்றான் சிறுவன். இருவரும் பேசிக்கொண்டே சென்றார்கள். குருவானவர் அன்று மாலை, தான் நிகழ்த்த இருக்கும் சொற்பொழிவுக்கு வரும்படி சிறுவனைக் கேட்டார். சிறுவன் 'ஐயா நீங்கள் எதைப் பற்றிப் பேசப் போகிறீர்கள்' என்றான். அதற்கு அவர் 'சொர்க்கத்துக்குச் செல்லும் வழி பற்றிப் பேசப் போகிறேன்' என்றார். உடனே சிறுவன் விழுந்து விழுந்து சிரித்தான். 'என்ன விளையாடுகிறீர்கள்? அஞ்சல் அலுவலகத்துக்கே போகப் பாதை தெரியாத நீங்கள் எவ்வாறு சொர்க்கத்துக்கு வழி காட்டப் போகிறீர்கள்?' என்று சொல்லி சிறுவன் மீண்டும் சிரிக்கத் தொடங்கினான். ★

தொலையா நினைவுகள்

# பயணம்



மலைநாட்டில் கற்பித்தல் தொழிலை மேற்கொண்ட எனக்கு பாடசாலைத் தவணை விடுமுறை தினங்களை, எனது தீவில் கழிப்பது மிகப் பிடித்தமானதொன்று. ஒரு தவணை விடுமுறை முடித்து பாடசாலை தொடங்க இன்னமும் மூன்று தினங்களே இருந்தன. நான் கற்பித்தலை மேற்கொண்ட அந்த மலைநாட்டுத் தோட்டப்பாடசாலைக்குப் போயாக வேண்டும். எனது தீவிலிருந்து இரண்டு தினங்களுக்கு முன்னதாகப் புறப்பட்டால்தான் தொடக்க நாள் அன்று பாடசாலையில் கடமைக்கு சமூகமளிக்கலாம்.

இராஜேஸ்வரி மோட்டார்ப் படகு ஒவ்வொரு நாளும் காலையில் குறிகாட்டுவான் துறைமுகத்தை நோக்கிப் புறப்பட்டுச் சென்று அது அங்கிருந்து அன்று மாலையிலேயே எங்கள் தீவுக்குத் திரும்பி வரும். காலையில் அந்த லோஞ்ச் பயணத்தைத் தவறவிட்டால் அடுத்த நாள் வரை காத்திருக்க வேண்டும்

தீவின் தெற்குக் கரையிலுள்ள எனது வீட்டிலிருந்து தரைவழிப் பாதையால் துறைமுகத்திற்குப் பயணிக்க இரண்டு மைல் தூரம் நடந்தாக வேண்டும். அல்லது மாட்டு வண்டியிலோ சைக்கிளிலோ தான் பயணிக்க வேண்டும். அன்று நான் பயணம் செய்வதற்காக எனது வீட்டின் அயலிலுள்ள சுப்பையா அண்ணையின் மாட்டு வண்டியை ஒழுங்கு செய்திருந்தேன். பஸ், கார், ஆட்டோ போன்ற மோட்டார் வாகனங்கள் அந்தத் தீவில் பாவனையில் இருக்காத நாள்கள் அவை.

அதிகாலையில் மாட்டு வண்டியை எதிர் பார்த்தேன். சிறிது தாமதமாகவே அது வந்தது. வண்டியை ஓட்டி வந்த சுப்பையரின் மகன், அண்ணை யோசியாதையுங்கோ நேரத்துக்குப் போய் விடலாம், லோஞ்சி நிற்கும்'' என்று கூறிச் சமாளித்து என்னை வண்டியில் ஏற்றிக் கொண்டு புறப்பட்டான்.

வண்டி துறைமுகத்தை வந்தடைந்தது. ஆனால் நாம் தாமதித்து வந்ததால் லோஞ்ச் புறப்பட்டுப் போய்விட்டது. கடலில் எங்கோ தொலை தூரத்தில் ஒரு கரும்புள்ளியாய்த் தெரிவதாக யாரோ சொல்லியது கேட்டது. ஆத்திரத்தில் வண்டி ஓட்டியை ஏசித் தீர்த்தேன். அவன்தான் என்ன செய்வான், மாடுகளும் அப் படியும் இப்படியுந்தான்.

துறைமுக நீர்ப்பரப்பு பெருங்கடலுடன் கலக்கும் இடத்தில் எல்லையிட்டு அமைக்கப்பட்டிருந்த அணை ஒன்றுண்டு. அதன் நடுப் பகுதியூடாகப் படகுகள் பயணிக்கும் வகையில் வாயிலின் இரு ஓரத்திலும் அமைக் கப்பட்டிருக்கும் சீமெந்தினாலான கட்டைகளை ஆற்றுக்கட்டைகள் என் பார்கள். அவற்றை வெறித் துப்பார்த்தேன். இனிப் பயணம் நாளைக்குத்தான். நாளைக்குச் சுப்பையா அண்ணையின் மாட்டு வண்டியில் வருவதில்லை என முடிவெடுத்தேன்.

**அன்றைய அதே நிலையில் தான் இன்றும் நான் அந்தத் துறைமுகத்தில் நிற்கிறேன். பயணம் செய்ய அரச படகுகளென்றும் தனியார் படகுகளென்றும், இரண்டுக்கும் அதிகமான படகுகள் இப்பொழுது சேவையில் ஈடுபட்டுள்ளன. அதில் எந்தப் படகு இன்று புறப்படும் என்று புரியாமல் அங்கலாய்த்தபடி மக்கள் நிற்கின்றனர்.**

அடுத்தநாள் சின்னத் தம்பியின் வண்டியை ஒழுங்கு செய்து துறைமுகம் வரை செல்ல நேரத்துடனேயே வீட்டிலிருந்து புறப்பட்டேன். வண்டி துறைமுகத்தை வந்தடைந்தபோது ராஜேஸ்வரி லோஞ் அதற்குச் சிறிது நேரத்திற்கு முன்னர் தான் புறப்பட்டு அந்த ஆற்றுக் கட்டையைக் கடந்து போய்க் கொண்டிருந்தது. அதிலிருந்தவர்கள் என்னைக் கண்டு படகோட்டிக்குச் சொன்னாலும் படகோட்டி என்னையும் ஏற்றிச் செல்லப் படகைத் திருப்பப் போவதில்லை.

எனது தலைக்குள் ஏதோ ஊர்வது போல் ஓர் உணர்வு. பள்ளிக்கூடத்துக்குத் தவணையின் முதல் நாளே லீவுதான் போட வேண்டி ஏற்பட்டு விட்டது. வண்டியை நேற்றைய வண்டில் காரனின் செய்கையோடு சேர்த்து இன்றைய ஏமாற்றமும் எனக்கு ஆத்திரத்தைக் கூட்டியது, எல்லாம் சேர அவர்களையும் வண்டியையும் மாட்டையும் திட்டித் தீர்த்தேன். என் பேச்சையும் ஏச்சையும் கேட்டுக் கொண்டிருந்த வண்டியோட்டி சிரித்துக் கொண்டே ''அண்ணை கோபிக்காதையுங்கோ. நேற்று நீங்கள் போகவிருந்த லோஞ்சைக் கண்ணாலும் காணவில்லை. ஆனா இண்டைக்கு ஆற்றுக்கட்டையால வெளியில போன அந்த லோஞ்சைப் பார்த்திருக்கிறியள்தானே?'' என்றான்.

அவனது அந்தப் பகிடி என் மனதுக்குள் பொங்கிப் பிரவகித்த ஆத்திரத்தை மறந்து என்னை வாய் விட்டுச் சிரிக்க வைத்துவிட்டது. இனிப் பயணம் நாளைக்குத்தான். முடிவெடுத்து விட்டேன். விதியும் அதுதான். இனி வண்டியை நம்பிப் பயனில்லை.

அன்று மாலையே வீட்டில் கிடந்த அந்தப் பழைய சைக்கிளை எடுத்துத் துடைத்துக் காற்றடித்து வைத்துக்கொண்டேன். காலையிலேயே புறப்பட்டுத் துறைமுகத்துக்கு வந்துவிட்டேன். துறைமுகத்தைப் பார்த்தேன். இன்னமும் லோஞ்ச் புறப்படவில்லை.

துறைமுகத்தில் தேநீர்க்கடை வைத்திருந்த பென டிற் மாமாவிடம் சைக்கிளைப் பாரம் கொடுத்தேன். யாராவது என் வீட்டிலிருந்து வந்தால் அவர் சைக்கிளைக் கொடுப்பார்.

''ஏன் லோஞ்ச் இன்னும் புறப்படவில்லை?'' என்று கேட்டதற்கு, ''லோஞ்சுக்கு டீசல் இல்லையாம். டீசல் வாங்கிவரக் கடைக்குப் போயிருக்கிறாங்களாம்'' என்றார் பசுபதி அண்ணை. அது இனி வந்த பின்புதான் படகு புறப்படும்.

அன்றைக்குப் போல் எனது முதல்நாட்ப் பயணமும் தாமதித்திருந்தால் நான் போக வேண்டிய இடத்திற்கு அன்றே போயிருந்திருக்கலாம். போன நாட்களை இனிக் கொம்பன் யானை கட்டி இழுத்தாலும் வரவா போகிறது? பத்து மணிக்குப் பின்னர் தான் மோட்டார்ப் படகு புறப்பட்டது. அதில் ஏறினேன். அதைத் தொடர்ந்து பஸ்ஸிலும் ரயிலிலும் பயணம் செய்து தெகியோவிற்றைக்குப் போய்ச் சேர்ந்தேன்..

அன்றைய ஆதே நிலையில் தான் இன்றும் நான் அந்தத் துறைமுகத்தில் நிற்கிறேன். பயணம் செய்ய அரச படகுகளென்றும், தனியார் படகுகளென்றும், இரண்டுக்கும் அதிகமான படகுகள் இப்பொழுது சேவையில் ஈடுபட்டுள்ளன. அதில் எந்தப் படகு இன்று புறப்படும் என்று புரியாமல் அங்கலாய்த்தபடி மக்கள் நிற்கின்றனர். நானும் அவர்களோடு நிற்கிறேன்.

வழமைபோல் பயணம் புறப்படும் வரை பயண ஒழுங்குகளில் உள்ள குறைபாடுகளையும், அதைத் தீர்க்கும் வழிவகைகளையும் பயணிகள் பேசிக்கோண்டே நிற்கிறார்கள். பயணத்தைச் சீராக்க வேண்டும் என்ற கருத்துக்களும் முன் வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இதோ, கந்தையா அண்ணையின் வள்ளம் புறப்படப் போகிறது. ஆரவாரம் அடங்கிப் போகிறது. எல்லோரும் தத்தமது மூடை முடிச்சுகளுடன் ஏறிக் கொள்ளுகிறார்கள். நானும் ஏறிக் கொள்ளுகிறேன். எங்கள் படகுப் பயணத்தில்அன்றிலிருந்து இன்று வரை எவ்வித முன்னேற்றமும் ஏற்படாத நிலை கண்டு என்றும் போல் என் மனம் அழுகிறது. புதிதாகக் கொண்டுவரப்பட்ட படகு ஒன்று, மாதத்துக்கு மேலாகி அதோ நிற்கிறது. அது பயணத்தைத் தொடங்கும் நாளை அறியாதபடி பரிதவித்து மிதப்பதாய் எனக்குத் தோன்றுகிறது.★

நெடுந்தீவு மகேஷ்

# இசைக்குப் பிறந்தவன்



இனம், மதம், மொழி, சாதி என்று மனிதர்கள் பல பகுப்புக்களைத் தங்களுக்குள் வைத்தக்கொண்டு பிரிந்து வாழ்ந்தாலும், இசை எல்லா மனங்களையும் ஒன்றிணைய வைக்கிறது. வயது வேறுபாடு பார்க்காது சாதனைகள் புரியவும் வழி சமைக்கிறது. அதற்கொரு எடுத்துக்காட்டாய் விளங்குபவன்தான் பாடகர் ஜஸ்டின் பியெபெர். 16 வயதான இவன் சாதனைக்கு வயதில்லை என்பதை நிரூபித்துக் காட்டியிருப்பவன்.

இன்றைய ஐரோப்பிய இளையவர்களின் பரம ரசிகனாகத் திகழும் பொப் பாடகர் ஜஸ்டின் பியெபெரரின் 'Never say Never' 3D மியூசிக் ஆவண இசைத் தொகுப்பு, அமெரிக்காவில் வெளியாகி ஒரு வாரத்திற்குள் 18.8 மில்லியன் யூரோ சம்பாதித்திருக்கிறது. அடுத்த ஏப்ரல் மாதம் உலகம் முழுவதும் வெளிவரவிருக்கும் இவ் இசைத் தொகுப்புக்கு இப்போதே பலத்த எதிர்பார்ப்பு நிலவுகிறது.

கனேடிய பொப் பாடகரான ஜஸ்டின், சிறிய வயதிலிருந்து, தனக்கு நடந்த அனுபவங்களையும், தான் எப்படி பிரபல்யமானேன் என்பவற்றையும், இந்த இசைத்தொகுப்பில் தொகுத்துள்ளார்.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் இந்த ஆவணங்கள் பற்றிய விளம்பரங்கள் வெளிவந்து, யூடியூப்பில் மிகவும் பிரபல்யம் பெற்றிருந்தது.


முன்னதாகப் பிரபல ஹாலிவூட் நடிகர் வில்ஸ்மித்தின், மகன் ஜேடன் ஸ்மித்துடன் இணைந்து பாடிய Never say Never பாடலும், உலகப் புகழ்பெற்ற 150 பாடகர்களுடனும் மைக்கல் ஜக்சனுடனும் இணைந்து பாடிய We are the world பாடலும் மிகப் பிரபலம்!

இந்த இளவயதிலேயே கோடிக்கணக்கில் ரசிகர்களைச் சம்பாதித்துக்கொண்டுள்ள ஜஸ்டின் பியெபெர், எல்லாருடனும் சாதரணமாகவே சட்டென பழகிவிடுவாராம்!

இந்தக்கால இளவயதினர், இவரிடம் இருந்து கற்றுக்கொள்ள நிறையவே இருக்கிறது.

சிறுகதை

# ஒரு வானில் இரு நிலவுகள்



"மாட்டன், மாட்டன், மாட்டன்" தலையை அசைத்து எனது மறுப்பை எவ்வளவு தான் எடுத்துச் சொன்னாலும் அம்மா தன் பிடிவாதத்தைக் கைவிடுவதாய் இல்லை. "இங்க பாரடி, உன்ர பிடிவாதத்தால உன்ர தலை எழுத்து இப்பிடிப் போச்சு. அப்பவும் இப்படித்தான், அவனைத் தான் கட்டுவன் எண்டு ஒற்றைக் காலில நிண்டாய். கடைசியில என்னாச்சு? உன் னைப் பாக்க என்ரை பெத்தவயிறு பத்தி எரியுது. கடவுள் போல வந்து உன்ரை அத்தான் உன்னைக் கலியாணம் செய்யிறன் எண்டு கேக் கிறான். ஓமெண்டு சொல்லு பிள்ளை. எங்கட வம்சத்தை வாழ வைக்க வேண்டியது உன்ர கையிலதான் கிடக்கு" அம்மாவின் கண்களில் கண்ணீர். எனது மௌனம் அவளுக்கு எரிச்ச லூட்ட உள்ளே போய்விட்டாள்.

முற்றத்து மாமரத்தில் இருந்த தனிக்குயில் ஒன்று இனிமையான குரலெடுத்து தன் இணை யைத் தேடியது. மெல்ல நடந்து சென்று மாமரத் தில் கட்டியிருந்த ஊஞ்சல் பலகையில் அமர்ந்து கொண்டேன். நான் பிடிவாதக்காரி தான். சரியா னதை, நியாயமானதை நிலை நிறுத்தக்கோருவது பிடிவாதம் என்றால் நான் பிடிவாதக்காரி தான். ஊஞ்சலின் மெல்லிய அசைவு என்னை இறந்த காலத்திற்கு இட்டுச் சென்றது.

அப்போது எனக்கு வயது பதினாறு. கவலை என்றால் என்னவென்று தெரியாமல் வளர்ந்தவள். பெற்றோருக்கு ஒரே பிள்ளை என்பதால் அத்தனை வசதிகள். அப்போது நான் என் கனவு கற்பனைகளுக்கெல்லாம் வடிவம் கொடுப்பவ னாய், பக்கத்து வீட்டிற்குப் புதிதாய் குடிவந்தான் அருள். அருளின் தந்தைக்கு தொழில் ரீதியாக இடமாற்றம். குடும்பமாக கொழும்பிலிருந்து வந்திருந்தனர். பெயருக்கு ஏற்றாற்போல் அவன் முகம் எப்போதும் சாந்தமாக இருக் கும். அந்த முகத்தில் நிரந்தரமாய் ஒரு புன்சிரிப்பு குடி கொண்டிருக்கும். கேட்டுக் கேட்டு மற்றவர்களுக்கு உதவி செய்வதில் அவனுக்கு நிகர் அவனே. வந்த சில நாட்க ளிலேயே அவன் ஊரவர் மனதில் இடம் பிடித்து விட் டதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. ஆனால் அவன் என் மனதில் இடம்பிடித்து விட்டது தான் வியப்பு. நின்றாலும், இருந்தாலும், கிடந்தாலும் அவனது முகம் மனத் திரையை விட்டு மறைய மறுத்தது. சீ.... இது காதலா?....

இரண்டு வருடங்களின் பின் என் காதலை அவனிடம் எடுத்துச் சொன்ன போது ஒரேயடியாய் மறுத்து விட்டான். அவனது பேச்சில் தேசம், விடுதலை, சுதந்திரம்.... என்று எவ் வளவோ இருந்தது. ஆனால் நான் பிடிவாதமாய் இருந் தேன். மறுத்தால் உயிரை மாய்ப்பேன் என அழுங்குப்பிடி பிடித்தேன். அருள் எவ்வளவோ எடுத்துச் சொன்னான். அத்தனையும் செவிடன் காதில் ஊதிய சங்காய்ப் போயிற்று. இறுதியில் எனக்குத்தான் வெற்றி. மூன்று வருடங்கள் காதலர்களாய் கவலையின்றிக் களித்திருந்தோம். ஊரில் எங்களைப் பற்றிக் கதை அடிபட வீட்டில் எடுத்துச் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அம்மாவும் அப்பாவும் ஓய்வாக இருந்த நேரம் பார்த்து என் காதலை அவர்களிடம் மெதுவாய் எடுத்துச் சொன் னேன். அப்பா எதுவும் பேச வில்லை. மௌனம்.. ஆனால் அம்மாவோ "உனக்குச் செல்லம் குடுத்துக் குடுத்து நல்லாக் கெடுத்துப் போட் டன். இப்பிடி ஒரு பிள்ளை வந்து பெத்தவளிட்டையே சொல்லுமோ? என்ன தைரி யம்? கொழுப்புத்தானடி உனக்கு" என்று முதுகில் இரண்டு அறை வைத் தாள். எனக்கு வலிக்க வில்லை. ஆரோ வந்து உன்ர பிள்ளை அருளோட காத லாம் என்று சொல்லுவதை விட நான் சொல்லி விட் டதில் திருப்தி எனக்கு. அம்மா கலை வந்தது போல் ஆடினாள். எனக்கு உறைக் கவில்லை. அப்பாவின் மௌனம் என்னைக் கொன் றது. நாட்கள் நகர்ந்தன. வீட்டில் மௌனப் போராட்டம் தொடர்ந்தது. இடையிடையே உண்ணாவிரதங்களும் வந்து போயின. அன்று நான் தனித்து மாமரத்தடியில் இருந்த போது அப்பா வந்து அருகில் அமர்ந்து கொண்டார். மெதுவாய்த் தலையைத் தடவிவிட்டார். எதற்கோ அத்திவாரம் போடுகிறார் எனப் புரிந்து கொண்டேன். "பிள்ளை நான் நல்லாய் விசாரிச்சுப் பார்த் தனான். அருளின் தாயும் தகப்பனும் வேற வேற மதத்தவர்களாம். எங்கட சாதிசனம் அருளை நீ விரும் புறதைக் கேள்விப்பட்டால் எங்களைத் தூர வைச்சுப் பாப்பினம். வேலை இடம் மாற மாற, ஒவ்வொரு இடமாய் மாறுவினமாம். நிரந்தரமாய் சொத்து சுகம் ஒண்டும் இல் லையாம். எங்களின்ர சொத்துக்கு நீ ராசாத்தி போல வாழலாம். அருளைக் கட்டி நீ என்னத்தைக் காணப்போறாய்? அவ னும் ஒரு தொழில் துறை இல்லாதவன். நேற்றும் ஒரு புறோக்கர் உனக்கு ஒரு இன்ஜினியர் மாப்பிளையின்ர குறிப் புக் கொண்டு வந்தவர். நல்ல பொருத்தமாம். நீ ஓமெண்டால்... தயங்கித் தயங்கி மெதுவாகக் கூறினார். "அப்பா நிப்பாட் டுங்கோ" என்ர முடிவில ஒரு மாற்றமும் இல்லை. சாதி மதம் எல்லாம் எங்களைச் சுற்றி நாங்கள் போட்டுக் கொண்ட வட்டங்கள். வெளியே வர நினைச்சால் வெளியேறி விட லாம். உங்களின்ர சொத்தெல்லாம் எனக்கெண்டால், அரு ளைக் கலியாணம் செய்தால் அவ்வளவும் அவருக்கும் சேர்ந்தது தானே. வீண்சாக்குப் போக்கெல்லாம் வேண் டாமப்பா. விருப்பமில்லையெண்டால் விடுங்கோ! நான் இப்பிடியே இருந்திடுறன்." நான் எனது பிடியிலிருந்து சற்றும் மாறவில்லை. பெற்றவர்கள் என்ன செய்வார்கள்?. எனது பிடிவாதம் இறுதியில் வென்றது. ஊஞ்சல் அசைவு நிற்கவே எனது எண்ண ஓட்டமும் தடைப் பட்டது.

> சப்பாத்துக் கால்களின் சத்தம் படலையை அண்மித்தது. இரும்புத் தொப்பிகள் வீட்டினுள் நுழைந்தன. 'அருள் யாரு? எங்கை அருள்? கொழும்பில் இருந்து வந்து ஐஞ்சு வருஷம். கையில் இருந்த படத்தைப் பார்த்து ஒரு வன் 'ஆ... இவன் தான்'. அருளைச் சுட்டிக் காட்டினான்.

"அப்பா! கொழும்பில இருக்கிற சிறைச்சாலை ஒன் றில் போய்த் தேடிப்பார்க்க மாமா ஒழுங்கு பண்ணி இருக் கிறார். நான் நாளைக்குப் போகப் போறன்" எனது குர லைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தார். வேதனையை நிரந் தரமாக்கிக் கொண்ட அவரது முகத்திலிருந்து என்னால் எதனையும் புரிந்து கொள்ள முடியவில்லை. அம்மா மட் டும் பொரிந்து கொட்டினாள். "ஐஞ்சு வருஷமா தேடித் தேடிக் காணாதை அருள் நாளைக்கு மட்டும் வந்திடப் போறானா?. சும்மா காசைக் கரியாக்கினது தான் மிச்சம்". அப்பா இடை மறித்தார். "கமலம், சும்மா தொணதொணக்காதை. அவள் தேடட்டும். தேடிச் சலிச்சால் தான் அவளால் ஒரு முடி வுக்கு வர முடியும். என்ர சொத்தெல்லாம் கரைஞ்சாலும் பரவாயில்லை. அருள் கிடைச்சிட்டால் போதும்" அப்பா நிதானமாய் சொல்லி முடித்தார்.

மாமாவின் உதவியுடன் சிறைச்சாலையின் ஒவ்வொரு அறையாய்த் தேடினேன். எதுவும் தெரிந்த முகங்களாய்த் தெரியவில்லை. வெளியே வேலை செய்து கொண்டிருந்த கைதிகளைப் பார்க்க அழைத்துச் சென்றனர். "அதோ! அந்த மரத்தடியில் நிற்பது அருள்.... அருள் தான். என்னு டைய அருள் தான்" ஓடிச் சென்றேன். அருள், அருள். அவன் திரும்பிப் பார்க்கவில்லை. அருகில் சென்று கைக ளைப் பற்றிக் கொண்டேன். அவன் நிமிர்ந்தான். கையை விட்டுவிட்டேன். அவன் யாரோ......

"பிள்ளை நீங்கள் அவருக்கு இறப்புப் பத்திரம் பதி யுங்கோ. ஐம்பதாயிரம் ரூபா காசு எடுக்கலாம். "அதிகாரி அட்வைஸ் பண்ணினார். ஒரு காதால் கேட்டு மறு காதால் விட்டு விட்டேன். மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் இருந்தும், காணமற் போனோர் சங்கத்திடம் இருந்தும் எதுவித தகவலும் இல்லை. மீண்டும் ஒருமுறை இரு அலு வலகங்களுக்கும் சென்றேன். "தங்கச்சி அந்தக் காலப் பகு தியில் காணாமற் போன எல்லாருக்கும் இறப்புப் பதிஞ் சாச்சு......."

அந்தக் காலம்..... அந்தக்காலம்... அருளுக்கும் எனக் கும் திருமணம் நடந்து ஐந்து நாட்கள் கழிந்திருந்தன. ஐந்து நாட்களும் ஐந்து வருடங்கள் ஒன்றாய் வாழ்ந்தது போல் கழிந்திருந்தன. அதிகாலையில் எழுந்து முழுகி விட்டு கோயிலுக்குப் புறப்பட்டோம். "அருள் நான் ரெடி, கெதியா வாங்கோ! பூசை முடியப் போகுது" அம்மா அர்ச்சனைத் தட்டை ஆயத்தப்படுத்தித் தந்தாள். "நாயள் அமளியாய்க் குலைக்குது. கொஞ்சம் பார்த்துப் போங்கோ" சப்பாத்துக் கால் களின் சத்தம் படலையை அண்மித்தது. இரும்புத்தொப் பிகள் வீட்டினுள் நுழைந்தன. "அருள் யாரு? எங்கை அருள்? கொழும்பில் இருந்து வந்து ஐஞ்சு வருஷம்" கையில இருந்த படத்தைப் பார்த்து, ஒருவன் "ஆ... இவன் தான்" அருளைச் சுட்டிக்காட்டினான். "அக்கா ஒரு விஷயம். இவரை விசாரிச்சுப் போட்டு நாளைக்கு கொண்டு வந்து விடுறம்" நாளைகள் ஐந்து வருடங்களாகிவிட்டன. நாயாய் அலைந்து தேடியது தான் மிச்சம். என்னைக் கலியாணம் கட்டிய பலன் தான் அருள் காணாமற் போய்விட்டார் என்று அருளின் பெற்றோர் என்னைக் கைவிட்டு, மாற்றல் எடுத்துக் கொண்டு திருகோணமலைக்குச் சென்று விட் டனர்." தட்டுங்கள் திறக்கப்படும் தேடுங்கள் கிடைக்கும்" என்பதே எனது வாழ்வு மந்திரமாச்சு.

காணாமற் போனோர் சங்கக் கூட்டத்திற்கு சென்று திரும்பிய நான் அங்கு நடந்தவற்றை எண்ணியவாறு அமர்ந்திருந்தபோது அப்பா அருகில் வந்தார். "மகள், இயலுமான வரை தேடி யாச்சு, எங்களுக்கு உன்னை விட்டால் ஆருமில்லை. அதால இப்பவலிய வந்து உன்ர மச்சான் கேட்கிறான். செய்யிறியே பிள்ளை. நான் அவசரப் படுத் தேல்ல. ஆறுதலாய் யோசி. எங்கட நிலைமையையும் நினைச்சு, ஒரு நல்ல முடிவுக்கு வா...."

என்னை மறுமணம் செய்ய முன் வருவது என்ர சொந்த மச்சான். பழையது எல்லாம் அறிஞ்சவன். என் ஆசாபா சங்களை மூட்டை கட்டி வைத்துவிட்டுச் சம்மதித்தேன். திருமணம் எளிமையாய் நடந்தேறியது. மூன்று நாட்கள் கடந் தன. காலைச் சாப்பாட்டைத் தயாரிப்பதில் அம்மாவுடன் குசினுக்குள் நின்றிருந்தேன். ஓட்டோ சத்தம் கேட்டு வெளியே வந்தேன். ஓட்டோவில் இருந்து அருள் இறங்கி வந்து கொண்டிருந்தார். என் கண்களில் மின்னல் வெட்டியது தலை சுற்றி......

"மூளை நரம்பு பாதிச்சு ஒரு பகுதி முற்றாய்ச் செயழி ழந்திட்டுது. இனி ஒரு சடப்பொருள் போலத்தான் உங் கட மகன் இருப்பா. பழைய நினைவு வர நோ சான்ஸ்!" நரம்பியல் நிபுணர் சொல்லியது துரைராசரின் காதுகளில் விழுந்ததாய்த் தெரியவில்லை. ✱ ✱ ✱

மாலாதேவி மதிவதனன்

## அசத்தல்

## பல்சுவை





## குளோனிங் கழுதை

உயிரிகளைப் பிரதியெடுக்கும் குளோனிங் முறைக்கு உலகெங்கும் எதிர்ப்புகள் எழுந்தாலும் இன்றும் உலகின் பல பாகங்களிலும் அதன் முயற்சிகளும், தொடர்ச்சிகளும் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன.

டோலி எனும் ஆட்டுக்குட்டி குளோனிங் முறையைத் துவக்கி வைத்தது. இப்போது உலகிலேயே முதன் முதலாக ஒட்டகம் ஒன்று குளோனிங் முறையில் உருவாக்கப்பட்டுள்ளது. இன்ஜாஸ் என பெயரிடப்பட்டுள்ள இந்த ஒட்டகம் துபாயிலுள்ள ஒட்டக விருத்தி நிலையத்தில் உலகை வியப்புடன் பார்க்கிறது.

கோடிக்கணக்கான ஒட்டகங்கள் வாழ்ந்த இந்த பூமியில் இந்த ஒட்டகம் ஒரு புதிக சகாப்தத்தின் முதல் சுவடாய் வந்திருக்கும் உண்மையை அறியாமலேயே தாயுடன் விளையாடுவதை விஞ்ஞானிகள் பெருமிதத்துடன் குறிப்பிடுகின்றனர். ஒரு பெண் ஒட்டகத்தின் செல்லில் இருந்து பிறவி எடுத்துள்ள இந்த ஒட்டகத்துக்குப் பிறந்த நாள் ஏப்பிரல் 8.

## உரோமப் பிள்ளை



உடலில் அதிக உரோமங்களை உடைய சிறுமி என்கிற கின்னஸ் சாதனைக்குரியவர் ஆகின்றார் சுப்ரா சசுப்பான் என்கிற 11 வயது தாய்லாந்துச் சுட்டிப் பெண். இவருக்கு முகம், கைகள், கால்கள், காதுகள் என்று உடல் முழுவதும் உரோமங்கள். இவர் மக்களால் குரங்குப் பெண் என்று அழைக்கப்படுகின்றார்.

இவரின் உரோமங்களை நிரந்தரமாக அகற்ற வைத்திய நிபுணர்கள் மேற்கொண்டு இருந்த பகீரத முயற்சிகள் தோல்வியில் முடிந்து விட்டன. ஆயினும் கின்னஸ் சாதனையை தொடர்ந்து மகிழ்ச்சியில் ஆரவாரிக்கின்றார்.



## வரிக்குழந்தை

பாகிஸ்தானில் உள்ள கஷ்டபிரதேசமான கிலிஜிட்டில் புலியினுடைய முகத்தோற்றத்துடன் குழந்தை ஒன்று பிறந்துள்ளது. மேலும் இந்தக் குழந்தையின் உடம்பில் சிவப்பு வரிகளும் காணப்படுகின்றன. மரபணுவில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே இவ்வாறு பிறந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நோய் காரணமாக குழந்தையின் வாய் மற்றும் கண், காது ஆகியவற்றில் பக்டீரியா பரவியுள்ளது எனவும் 10 வீதம் மாத்திரமே சத்திரசிகிச்சை மூலம் குணப்படுத்தலாம் எனவும் வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.



## புளூடூத் பென்



இந்தியாவைச் சேர்ந்த பினு ஜோன்சன், ஐரின் தம்பதியினர், செல்போன் புளூடூத்தை பயன்படுத்தி டிவி, சீலிங் பேன், ஏசி உள்ளிட்ட பொருட்களை கட்டுப்படுத்தும் வழியை கண்டறிந்து, நொக்கியா நிறுவனத்துக்கு அளித்துள்ளனர். அவர்கள் இது பற்றி விளக்கமளிக்கையில் -

இதற்காக புளூடூத் வசதி கொண்ட நொக்கியா மொபைல் போனில் ஒரு சொப்வெயாரைப் பொருத்தவேண்டும். மேலும், மின் கருவிகளை புளூஹோம் என்று நாங்கள் கண்டுபிடித்துள்ள கருவியுடன் இணைக்க வேண்டும். இதன்மூலம் பேன், டிவி, ஏசி, வாஷிங்மிஷின் உள்ளிட்ட கருவிகளை செல்போன் மூலம் இயக்குவதுடன், வீட்டுக்கு வெளியே ஆள்நடமாட்டத்தை கண்டறிதல், வாசல் திறப்பதை அறிதல் போன்றவற்றையும் செயல்படுத்த முடியும் என்றார்.




## வாய்ப்பு மழையில் ஹன்ஸிகா



நடித்து இன்னும் ஒரு படம் கூட வரவில்லை... ஆனால் எல்லா ஹீரோவும் கேட்கும் நாயகியாக மாறியுள்ளார் ஹன்ஸிகா மோத்வானி.

தமிழில் தனுஷ், ஜெயம் ரவி என முன்னணி நாயகர்களுடன் இவர் நடித்துள்ளார். ஆனால் இந்தப் படங்களில் ஒன்றுகூட இன்னும் வரவில்லை.

ஆனாலும், உதயநிதி ஹீரோவாக அறிமுகமாகும் 'ஒரு கல் ஒரு கண்ணாடி'யில் இவர்தான் ஹீரோயின். 'வேலாயுதம்' படத்தில் விஜய்க்கு ஜோடியும் இவரே.



## புகைப்பிடித்தால் உடம்பு ஸ்லிம்மாகும் - சனாகான்

பெண்கள் புகைப்பிடித்தால் உடம்பு ஸ்லிம்மாகும் என்ற அரிய கண்டுபிடிப்பை சமீபத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் வைத்துத் தெரிவித்த நடிகை சனாகானுக்கு கட்டுக்கட்டாக பீடி மற்றும் சிகரெட்டை பொதியாக அனுப்பிப் போராட்டம் நடத்தப் போகின்றதாம் இந்து மக்கள் கட்சி.

சிம்புவுடன் சிலம்பாட்டம் படத்தில் அறிமுகமானவர் நடிகை சனாகான். சமீபத்தில் வெளியான பிரகாஷ்ராஜின் 'பயணம்' படத்திலும் நடித்துள்ளார்.

இந்தப் படத்தின் பத்திரிகையாளர் சந்திப்பில் பெண்கள் புகைப்பிடிப்பதை நியாயப்படுத்துவது போல் சனாகான் கருத்துத் தெரிவித்திருந்தார். புகைப்பிடிப்பதில் தப்பில்லை. அதுவும் பெண்கள் புகைப்பிடித்தால் அவர்களின் உடல் ஸ்லிம்மாகும். எனவே ஒரு நாளைக்கு ஒன்று அல்லது இரண்டு சிகரெட் பிடிக்கலாம் என அவர் கூறியிருந்தார். இதனை எதிர்த்து இந்து மக்கள் கட்சி, கட்டுக் கட்டாக பீடி மற்றும் சிகரெட் பொதிகளை அனுப்பி வைத்து, பெரிய அளவில் அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட இருக்கின்றது இந்து மக்கள் கட்சி.



## ஹிந்திக்குப் போகும் நடிகை அனன்யா?

அசின், த்ரிஷா, ஜெனிலியா, அனுஷ்கா வரிசையில் இப்போது ஹிந்தியில் அடியெடுத்து வைக்கிறார் நடிகை அனன்யா.

மலையாள நடிகையான இவர், சசிக்குமாரின் நாடோடிகள் படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானவர். சமீபத்தில் தனுசுடன் இவர் நடித்த சீடன் வெளியாகியுள்ளது.

மலையாளத்திலும் ஏராளமான படங்களில் நடித்துள்ளார். தமிழ், மலையாளம் என இரண்டு மொழிகளிலும் கைநிறையப் படங்களை வைத்துள்ள அனன்யா, இப்போது ஹிந்தி திரையுலகிலும் கால்பதிக்கிறார். ஹிந்தியில் மாதவனுடன் சேர்ந்து ஒரு படம் நடிக்கிறார். இதற்காக அவர் ஹிந்தியும் கற்று வருகிறார்.

ஹிந்திப் படத்தில் நடிப்பது குறித்து அனன்யா கூறுகையில், ''ஹிந்தியில் நடிப்பது சந்தோஷமாக இருக்கிறது. அதுவும் மாதவனுடன் இணைந்து நடிப்பது கூடுதல் சந்தோஷத்தைக் கொடுக்கிறது. ஹிந்தியில் நடிப்பதற்காக அந்த மொழியைக் கற்று வருகிறேன்.

ஏற்கனவே ஹிந்தி கொஞ்சம், கொஞ்சம் தெரியும், இப்போது அதனை முழுமையாக கற்று வருகிறேன். ஹிந்தியில் நடித்தாலும் தமிழ் மற்றும் மலையாளம் உள்ளிட்ட தென்னிந்திய மொழிப் படங்களில் தொடர்ந்து நடிப்பேன்'' என்றார்.

## மீண்டும் ஹீரோ



வடிவேலு ஹீரோவாக நடித்த முதல் படம் இம்சை அரசன் 23ஆம் புலிகேசி.

இந்த படத்தில் நடிக்க முதலில் மறுத்த வடிவேலு, சிம்புதேவனின் தொடர் முயற்சிக்கு பின்னர் தான் நடிக்கவே ஒப்புக்கொண்டார்.

அப்படத்தின் மெகா மெகா வெற்றி பெற்றது. அதன் பின்னர் செவன்த் சேனல் நாராயணன் தயாரித்த இந்திரலோகத்தில் நா அழகப்பன் படம் நினைத்த அளவுக்கு வெற்றியளிக்கவில்லை.

இப்போது மீண்டும் ஹீரோவாக நடிக்கவிருக்கும் 'உலகம்' என்ற படத்தின் கதை விவாதத்தில் ஈடுபட்டிருக்கிறார் வடிவேலு.

## சம்பளத்தை உயர்த்தியதால் நீக்கப்பட்டார் அனுஷ்கா

அதிக சம்பளம் கேட்டதால் அனுஷ்காவுக்கு வந்த பெரிய பொலிவூட் வாய்ப்புப் பறிபோனது.

தமிழில் வெளியான சிங்கம் படம் இப்போது ரோஹித் ஷெட்டி இயக்கத்தில் இந்தியில் ரீமேக் ஆகிறது. இதில் அஜய் தேவ்கன் ஹீரோவாக நடிக்கிறார்.

சிங்கம் படத்தில் ஹீரோயினாக நடித்தவர் அனுஷ்கா. இவரே இந்தியிலும் நடித்தால் நன்றாக இருக்கும் என தயாரிப்பாளரும் இயக்குநரும் விரும்பினர்.

ஆனால் இந்திப் படம் என்றதும் தனது சம்பளத்தை ரூ 2 கோடிக்கும் (இந்திய மதிப்பில்) அதிகமாக உயர்த்திக் கேட்டாராம் அனுஷ்கா. இதனால் அவர் வேண்டாம் என முடிவுசெய்து, காஜல் அகர்வாலை ஒப்பந்தம் செய்துள்ளது இயக்குநர் குழு.

# மீண்டும் இணையும் இமயங்கள்



ரஜினி - கமல் சேர்ந்து நடிப்பார்களா என்ற கேள்வியை கிட்டத்தட்ட 30 வருடங்களாய் ரசிகர்கள் சலிக்காமல் கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள். அதற்கு ரஜினி பெரும்பாலும் பதிலே சொல்வதில்லை. கமலும் சரியான பதிலைத் தருவதில்லை.

இந்த மூவரும் இணைந்த கூட்டணியில் உருவான படங்கள் அனைத்தும் மெகா ஹிட் ஆனவை. இன்றும் அனைத்துத் தரப்பு ரசிகர்களாலும் ரசித்துப் பார்க்கப்படுபவையாக உள்ளன.

ஆனால் இப்போது இந்தப் பெரும் நட்சத்திரங்கள் மீண்டும் இணைந்து நடிக்கிறார்களாம். ஆனால் முழு சினிமாவில் அல்ல... ஒரு குறும்படத்தில். இந்தப் படத்தை இயக்கப் போகின்றவர் இருவருக்கும் குரு என்ற ஸ்தானத்தில் உள்ள கே.பாலச்சந்தர்.

## பில்லா 2 இல் அஜித்துக்கு ஜோடியாகிறார் அனுஷ்கா



மங்காத்தாவின் படப்படிப்பு முடிவடையும் நிலையில் உள்ளது. இப்போது அஜீத் ரசிகர்கள் மத்தியில் பில்லா 2 குறித்து அடுத்த பரபரப்பு ஆரம்பமாகியுள்ளது. சக்ரி டோலட்டி இயக்கும் இந்தப் படத்துக்கு இப்போதே அனுஷ்கா தான் ஹீரோயின் என்று செய்திகள் வெளிவர ஆரம்பத்துள்ளன.

பில்லா படம் தெலுங்கில் ரீமேக் செய்யப்பட்டபோது, அதில் நயன்தாரா வேடத்தில் கலக்கியவர் அனுஷ்கா. படத்தின் வெற்றிக்கு அவரது கவர்ச்சி தான் முக்கிய பங்காற்றியது.



## காதல் காட்சிகளில் பிரபு – வித்தியாபாலன்

உருமி படத்தில் வித்யாபாலனும், பிரபுதேவாவும் இணைந்து நடித்துள்ள காதல் காட்சிகள் படு கவர்ச்சிகரமாகவும், சிலிர்க்க வைக்கும் வகையிலும் வந்துள்ளதாம்.

மலையாளத்தைச் சேர்ந்த சந்தோஷ் சிவன் இயக்கியுள்ள படம் உருமி. இப்படத்தை, தமிழ், மலையாளம் மற்றும் ஆங்கிலத்தில் உருவாக்குகிறார் சந்தோஷ் சிவன். இப்படத்தில் மலையாளத்தைச் சேர்ந்த பிருத்விராஜ், தமிழைச் சேர்ந்த பிரபுதேவா, ஹிந்தியைச் சேர்ந்த தபு, ஜெனிலியா, வித்யா பாலன் ஆகியோர் நடித்துள்ளனர். படம் முழுக்க விறுவிறுப்பான விடயங்கள் நிறைய இருந்தாலும் சிலிர்க்க வைக்கும் கவர்ச்சியும், சிரிக்க வைக்கும் கொமெடியும் நிறையவே இருக்கிறதாம்.

போர்த்துகீசிய இளவரசியாக வருகிறாராம் ஜெனிலியா. இதற்காக வாள் சண்டையெல்லாம் போட்டுள்ளாராம். அதேபோல தபுவின் படு கவர்ச்சியான நடனமும் படத்தில் இருக்கிறதாம். ரசிகர்களை இந்த நடனமும், தபுவின் கவர்ச்சியும் வெகுவாக கவரும் என்கிறார் சிவன். இதை விட முக்கியமாக வித்யா பாலன், பிரபுதேவா இருவருக்கும் இடையில் இடம்பெறும் காட்சிகளை அவர் கூறியுள்ளார். இவர்கள் நடித்துள்ள காதல் காட்சிகளைப் பார்த்து நயன்தாராவே டென்ஷனாகக் கூடும் என்று சிரித்தபடி கூறுகிறார் சிவன்.



## பெண்களை முன்னேற விடுங்கள்

மகளிர் தினத்தில் நடிகைகள் ஆவேசம்

உலக மகளிர் தினமான கடந்த செவ்வாய்க்கிழமை பெண்களெல்லாம் கருத்து சொல்லும் நாள்.

அந்த வகையில் நடிகைகள் என்ன சொல்கிறார்கள்?

***இலியானா:*** பெண்கள் மென்மையானவர்கள் என்று சொல்லி ஆண்கள் அடக்கி வைத்துள்ளனர். அதிலிருந்து நாம் வெளியே வரவேண்டும். தேவை வரும்போது பெண்களும் கடுமையானவர்களாக மாற வேண்டும். இன்னொன்று, பயம், நடுக்கத்தையெல்லாம் விட வேண்டும். படிக்காத வர்களுக்குதான் பயம் வரும். எனவே பெண்கள் எல்லோரும் படிக்க வேண்டும். படிப்பு பெரிய ஆயுதம்!

***சினேகா:*** பெண்களால் சாதிக்க முடியாத துறை என்று எதுவும் இல்லை. எல்லாவற்றிலும் அவர்கள் தங்கள் முத்திரையைப் பதித்துள்ளனர். அதே நேரம் முன்பிருந்த நிலை இப்போது இல்லை பெண்கள் விடயத்தில்.

***நீது சந்திரா:*** பெண்களை முன்னேறவிடாமல் தடுக்கிறார்களே என்ற வேதனையை மறைக்க என்னால் முடியவில்லை. நான் தமிழில் இப்போது ஆதிபகவான் படத்தில் நடித்து வருகிறேன். இதன் படப்பிடிப்புக்காக பீகார் மாநிலத்தில் உள்ள ஜெய்சல்மார் கிராமத்துக்கு சென்றேன். ஆண்கள், குழந்தைகள் நிறைய பேர் வந்து ஒட்டோ கிராப் வாங்கினர். ஒரு பெண்ணை கூடக் காணவில்லை.

காரணம் கேட்டேன். எங்கள் ஊரில் பெண்கள் வீட்டு வாசலைத் தாண்டி வெளியே வர மாட்டார்கள். திருவிழா நடக்கும்போது மட்டும் சாமி கும்பிட வருவார்கள் என்றனர். எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. நானும் பீகாரை சேர்ந்தவள்தான்.

***ஹன்சிகா மோட்வானி:*** சினிமாவுக்கு வரும் முன் பெற்றோரைச் சார்ந்து இருந்தேன். சம்பாதிக்க ஆரம்பித்த பின்னர் சொந்தக் காலில் நிற்கிறேன். முடிவுகளையும் நானே எடுக்கிறேன். பெண்கள் சுயமாக சம்பாதித்தால்தான் சுதந்திரமாக வாழ முடியும். ஆண்கள் சம்பாத்தியத்தை நம்பி இருந்தால் அவர்கள் சொல்வதைத்தான் கேட்க வேண்டும்.

திருமணத்துக்கு முன் பெற்றோர் பின்னாலும் திருமணமானதும் கணவர் பின்னாலும் ஒளிகின்ற நிலைமைதான் பெண்களுக்கு இருக்கிறது. அந்த நிலைமை மாறவேண்டும் என்றால் பெண்கள் படிக்க வேண்டும். சம்பாதிக்க வேண்டும்.

***அனுஷ்கா:*** பெண்களை அடக்கி ஒடுக்கி, வீட்டுக்குள் முடக்கி வைக்க வேண்டும் என்ற எண்ணத்தை இந்த சமூகம் முற்றாகவிட வேண்டும். பெண்களை கௌரவமாக நடத்தப்பட வேண்டும்.

***ஸ்ரேயா:*** எங்கோவது பெண்களுக்கு அநியாயம் நடந்தால் அதை பார்த்துக் கொண்டு சும்மா இருக்கமாட்டேன்.

# ராசி-பலன்

**13. 03. 2011 - 19 . 03 . 2011**




**அச்சுனி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

வாக்குறுதி என்பது சத்தியத்திற்கும் மேலானது, என்பதை உணர்ந்த நீங்கள் சொன்ன சொல் தவறமாட்டீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். பிள்ளைகளால் மதிப்புக் கூடும். தாய்வழி உறவினர்களால் ஆதாயம் உண்டு. உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். புது நண்பர்கள் அறிமுகமாவார்கள். நீண்டநாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். அயல்நாடு செல்ல விசா கிடைக்கும். புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். அச்சம் விலகி அதிகாரம் பெருகும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 1, 3 அதிர்ஷ்ட நிறங்கள் : ரோஸ், ஊதா அதிர்ஷ்ட திசை : கிழக்கு.




**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

புத்திசாலிகள் எதையும் உபயோகமில்லாததாக நினைப்பதில்லை, என்ற வார்த்தைக்கேற்ப சிறு துரும்பும் பல் குத்த உதவும் என்பதை அறிந்து வைத்திருப்பீர்கள். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். மனதிலிருந்த குழப்பங்களுக்குத் தீர்வு கிட்டும். உங்களை சந்திக்க பழைய நண்பர்கள் தேடி வருவார்கள். வீண் கவலை, செலவு, செறிமானக் கோளாறு வந்து நீங்கும். புது வீடு கட்டி குடிப்புகுவீர்கள். வேலையாட்கள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டை பெறுவீர்கள். தடைபட்ட வேலைகளை முடித்துக் காட்டும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 2, 7 அதிர்ஷ்ட நிறங்கள் : ஆரஞ்சு, பச்சை அதிர்ஷ்ட திசை : தென்மேற்கு




**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

இனிய வார்த்தைகள் இரும்புக் கதவையும் திறந்துவிடும் என்பதை புரிந்த நீங்கள் சுவையான பேச்சால் சொக்க வைப்பீர்கள். கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். பிள்ளைகளின் வருங்காலம் குறித்து யோசிப்பீர்கள். உறவினர்கள் உதவுவார்கள். சகோதர வகையில் இருந்த பிரச்னைகள் தீரும். மன உளைச்சல், விரக்தி அதிகரிக்கும். வீடு, மனை வாங்குவதற்கான சூழ்நிலை சாதகமாக அமையும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் பொறுப்புகள் கூடும். மேலதிகாரியை விமர்சித்துப் பேச வேண்டாம். முட்டுக்கட்டை களையும் தாண்டி முன்னேறும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 5, 8 அதிர்ஷ்ட நிறங்கள் : மயில்நீலம், பிங்க் அதிர்ஷ்ட திசை : வடக்கு.





**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

உன்மேல் குறை சொன்னால் திருத்திக் கொள் இல்லையென்றால் சிரித்துக் கொள், என்ற பழமொழிக்கேற்ப வாழ்பவர்கள் நீங்கள்தான். பேச்சில் தெளிவு பிறக்கும். உறவினர்கள் தேடி வந்து பேசுவார்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். நீங்கள் எதிர்பார்த்த நல்ல விஷயங்கள் இந்த வாரத்தில் வந்து சேரும். உடன்பிறந்தவர்களால் பிரச்னைகள் வந்து நீங்கும். ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். இரத்த அழுத்தம் அதிகரிக்கும். வேலையாட்களிடம் கனிவாகப் பேசப்பாருங்கள். உத்தியோகத்தில் மற்றவர்களின் வேலையையும் சேர்த்துப் பார்க்க வேண்டி வரும். தன்னைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் அல்லாதவர்கள் யாரென்பதை அறியும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 3, 6 அதிர்ஷ்ட நிறங்கள் : சில்வர்கிரே, மஞ்சள் அதிர்ஷ்ட திசை : தென்மேற்கு.




**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

உன்னுடைய முயற்சி என்பது எண்ணங்களால் திசை திருப்பப்படுவது அன்று. என்பதை நன்கு அறிந்த நீங்கள் கடினமாக உழைக்கத் தெரிந்தவர்கள். காத்திருந்த பணம் கைக்கு வரும். கை, கால் வலி வந்து விலகும். சாலையை கடக்கும் போது நிதானம் அவசியம். பழைய உறவினர்கள், நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். பங்குதாரர்களின் ஆதரவு கிட்டும். நட்பு வட்டம் விரியும். பிள்ளைகள் பொறுப்புணர்ந்து செயல்படுவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகாரிகளின் ஆதரவு பெருகும். சக ஊழியர்கள் உங்களின் நல்ல மனதை புரிந்து கொள்வார்கள். எதிர்நீச்சல் போட்டு வெற்றி பெறும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 7, 9 அதிர்ஷ்ட நிறங்கள் : வெள்ளை, இளம்சிவப்பு அதிர்ஷ்ட திசை : வடகிழக்கு.




**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

உண்மை என்பது நங்கூரம் பாய்ச்சிய கப்பலைப் போல் அமைதியுடன் இருக்க வேண்டும், என்பதை அறிந்த நீங்கள் ஆர்ப்பரிக்க மாட்டீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். திருமணம், சீமந்தம் போன்ற சுப நிகழ்ச்சிகளால் வீடு களைக்கட்டும். புது சொத்து வாங்குவீர்கள். வாகன வசதிப் பெருகும். ஆடை, ஆபரணம் சேரும். மனைவிவழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். புது முதலீடு செய்வீர்கள். உத் தியோகத்தில் தைரியமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். அதிரடி மாற்றங்கள் நிகழும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 2, 4 அதிர்ஷ்ட நிறங்கள் : கிரே, மெரூண் அதிர்ஷ்ட திசை : தெற்கு.




**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

பல விஷயங்களை ஒரே சமயத்தில் தொடங்குபவன் எதையும் முடிக்க மாட்டான், என்பதை அறிந்த நீங்கள் நிதானித்து செயல்படுவீர்கள். குடும்பத்தினரின் ஆதரவு உண்டு. பணப்புழக்கம் சுமார்தான். பிள்ளைகள் எதிர்த்துப் பேசுவார்கள். வேற்றுமொழியினரால் ஆதாயம் உண்டு. உறவினர்கள் சிலர் உதவி கேட்டு தொந்தரவு தருவார்கள். வியாபாரத்தில் சந்தை நிலவரத்தை அறிந்து முதலீடு செய்யுங்கள். பற்று வரவு மந்தமாக இருக்கும். உத்தியோகத்தில் அவசர முடிவுகளை தவிர்க்கப் பாருங்கள். வேலைச் சுமை அதிகரிக்கும். பக்குவமாகப் பேசி சாதிக்கும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 6, 7 அதிர்ஷ்ட நிறங்கள் : நீலம், ப்ரவுன் அதிர்ஷ்ட திசை : வடக்கு.




**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

நேற்று செய்த தவறை ஒப்புக்கொண்டால் இன்று நீ அறிவாளியாவாய், என்பதை அறிந்த நீங்கள் எப்பொழுதும் தன்னடக்கத்துடன் செயல்படுவீர்கள். பணவரவு உண்டு. உடன்பிறந்தவர்களின் விருப்பங்களை பூர்த்தி செய்வீர்கள். பழைய வீட்டை நல்ல விலைக்கு விற்று புது இடம் வாங்குவீர்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். நட்பு வட்டம் விரியும். பிள்ளைகள் பொறுப்புணர்ந்து செயல்படுவார்கள். ஒருவித படபடப்பு வந்துச் செல்லும். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவு கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். புதிய கோணத்தில் யோசித்து வெற்றி பெறும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 3, 8 அதிர்ஷ்ட நிறங்கள் : க்ரீம்வெள்ளை, ஆரஞ்சு அதிர்ஷ்ட திசை : வடமேற்கு.




**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

உன்னதமான ஒவ்வொரு வேலையும் முடியாததாகவே முதலில் தோன்றும், என்பதை உணர்வுப் பூர்வமாக அறிந்த நீங்கள் தடைகற்களையும் தாண்டி சாதிப்பீர்கள். பணம் வரும். குடும்பத்தில் அமைதியுண்டு. தைரியம் பிறக்கும். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள்-. பிரச்சனைகளை எளிதில் சமாளித்துவிடுவீர்கள். உறவினர்களின் திருமணத்தை முன்னின்று நடத்துவீர்கள். வேற்று மொழி பேசுபவர்களால் ஆதாயமுண்டு. வெளிவட்டாரத்தல் புது அனுபவம் உண்டாகும். உத்தியோகத்தில் நேரங்காலம் பார்க்காமல் நீங்கள் உழைப்பதைக் கண்டு மூத்த அதிகாரி மதிப்பார். விஸ்வரூபம் எடுக்கும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 5, 9 அதிர்ஷ்ட நிறங்கள் : பிஸ்தாபச்சை, கிரே அதிர்ஷ்ட திசை : தெற்கு.





**உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

அனைவர் சொல்வதையும் கேள்;எது சரி என்று படுகிறதோ அதைச்செய். என்ற பழமொழியை உணர்ந்த நீங்கள் மனதில் பட்டதையே செய்து முடிப்பவர்கள். உடல் நலத்தில் அலட்சியப் போக்கு வேண்டாம். சொத்து சம்பந்தப்பட்ட விஷயங்கள் சுமுகமாக முடியும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். எதிர்பார்த்த வங்கிக் கடன் உதவி கிடைக்கும். வாகனத்தால் வீண் செலவுகள் வரக்கூடும். வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காண்பீர்கள். வேலையாட்களின் ஆதரவு உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்களின் தொந்தரவு விலகும். கடின உழைப்பால் கரையேறும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 2, 4 அதிர்ஷ்ட நிறங்கள் : ப்ரவுன், ஆலிவ்பச்சை அதிர்ஷ்ட திசை : கிழக்கு.




**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

யாரும் பாராட்டாத இடத்தில் சாதனை நிகழ்த்துவதில் பயனில்லை, என்பதை உணர்ந்த நீங்கள் இடம் பொருள் தெரிந்து திறமையை வெளிப்படுத்துவீர்கள். வரவேண்டிய பணத்தை கேட்டு வாங்குவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். பிள்ளைகளின் பாசம் அதிகரிக்கும். உறவினர்கள், நண்பர்கள் உங்களிடம் முக்கிய விஷயங்களை பகிர்ந்துக் கொள்வார். நெஞ்சுவலி, கண் எரிச்சல், உஷ்ணக்கட்டி வரக்கூடும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். ஒப்பந்தங்கள் தள்ளிப் போகும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் அளவாக பழகுங்கள். சிக்கனம் தேவைப்படும் வாரமிது: அதிர்ஷ்ட எண்கள் : 1, 6 அதிர்ஷ்ட நிறங்கள் : சாம்பல் நிறம், பச்சை அதிர்ஷ்ட திசை : தென்மேற்கு.




**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

தன்னடக்கமே வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய தலையாய நெறியாகும். என்பதை உணர்ந்த நீங்கள் அதற்கு புத்துயிர் தருபவர்கள். குடும்பத்தினருடன் மனம் விட்டுப் பேசுங்கள். பிள்ளைகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். சோர்வு, அலைச்சல், கை-கால் வலி, தாழ்வு மனப்பான்மை வரக்கூடும். உறவினர், நண்பர்கள் பகைமை வந்து நீங்கும். சில காரியங்களை அலைந்து திரிந்து தான் முடிக்க வேண்டி வரும். வெளி உணவுகளை தவிர்க்கவும். குலதெய்வப் பிராத்தனைகளை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரித்தாலும் விரைந்து முடிப்பீர்கள். உடல் நலனில் அக்கறை செலுத்த வேண்டிய வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 5, 8 அதிர்ஷ்ட நிறங்கள் : மெரூண், மஞ்சள் அதி ர்ஷ்ட திசை : வடகிழக்கு.

## விளையாட்டுத் துறையில் சாதிப்பார்



அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த பல்கலைக் கழகம் ஒன்று நடத்திய ஆய்வில் ஆண்டின் தொடக்கத்தில் அல்லது இறுதியில் பிறக்கும் குழந்தைகள் விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்குகின்றனர் என்று ஜோதிட ரீதியாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருவர் விளையாட்டு வீரராக வேண்டுமென்றால் அவரது ஜாதகத்தில் சந்திரனும், புதனும் நன்றாக இருக்க வேண்டும். பல முன்னணி விளையாட்டு வீரர்களின் ஜாதகத்தைப் பார்த்ததில் இதில் உண்மை இருப்பதைக் கண்டறிந்தோம்.

டிசம்பர் இறுதியில் குருவின் வீடான தனுசு ராசியில் புதன் வருவார். அதேபோல் மகரம், கும்பம் [குருவின் நட்பு வீடுகள்] ஆகிய ராசிகளிலும் புதன் இருக்க வாய்ப்புள்ளது. பொதுவாகப் பார்த்தால் டிசம்பர், ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் மகரம், கும்பம், தனுசு ஆகிய ராசிகளில் புதன் சஞ்சாரம் செய்வார்.

மகரம், கும்பத்தில் புதன் சஞ்சரிக்கும் போது பிறப்பவர்களுக்கு இயற்கையிலேயே விளையாட்டுத் திறன் இருக்கும். ஜனவரி, பிப்ரவரியில் புதனின் அம்சம் மேலோங்கி இருக்கும். இந்தக் காலகட்டத்தில் பிறப்பவர்களின் ஜாதகத்தில் ராகு, கேது, செவ்வாய் ஆகிய கிரகங்களுடன் புதன் சேராமல் தனித்து அல்லது பிற கிரகங்களுடன் சேர்ந்திருந்தால் அவர்களால் முன்னணி விளையாட்டு வீரராக உருவெடுக்க முடியும்.

ஆவணி மாதம் [ஆகஸ்ட் 17 முதல் செப்டம்பர் 17 வரை] புதன் தனது சொந்த வீடான கன்னியில் உச்சமாக இருப்பார். இந்தக் காலகட்டத்தில் புதன் சிறப்பாக இருக்கப் பிறந்தவர்கள் மாநில, தேசிய அளவில் முதலிடம் பெறும் விளையாட்டு வீரர்களாக உருவாக வாய்ப்புள்ளது.

புதன் உச்சம் பெற்றவருக்கு புதன் திசை நடக்கும் காலகட்டத்தில் பதக்கம் பெறுவது, பெரிய பதவிக்கு தேர்வு செய்யப்படுவது, அதன் மூலம் அரசு மரியாதை பெறுவது, அரசுப் பணியில் அமர்வது போன்ற வாய்ப்புகள் அவருக்கு கிடைக்கும்.


ஒருவரது ஜாதகத்தில் புதன், குரு சிறப்பாக இருந்தால் அவர் விளையாட்டு வீரர் ஆக உருவெடுப்பார் என்று பொதுப்படையாகக் கூறினேன். ஆனால் விளையாட்டின் நுணுக்கங்களை ஒருவர் பெறுவதற்கு மனோகாரகன் சந்திரன் சிறப்பாக இருக்க வேண்டும். ஒருவர் எந்த விளையாட்டுத் துறையில் சாதிப்பார் என்பதையும் ஜாதகத்தைக் கொண்டு அறிய முடியும்.

உதாரணமாக சுக்கிரன் நன்றாக இருந்தால் கார் பந்தயங்களில் அவர் புகழ்பெற வாய்ப்புள்ளது. விபத்து ஏற்படாமல் கார் பந்தயத்தில் வெற்றி பெறவும் சுக்கிரன் உதவுகிறார். கால்பந்து விளையாட்டில் சிறப்பு பெற சனியின் ஆசி வேண்டும். குத்துச்சண்டையில் வெற்றி பெற செவ்வாய் ஆதிக்கம் தேவை. துப்பாக்கி சுடுதலில் சிறப்பு பெற குருவின் அருள் இருக்க வேண்டும்.

எனவே, ஒருவரின் ஜாதகத்தில் எந்த கிரகம் சிறப்பு பெற்றுள்ளது என்பதை கணிப்பதுடன், அவர்களுக்கு இளம் வயதில் எந்த தசாபுக்தி நடக்கும் என்பதையும் கணித்து அவர்களை விளையாட்டுத் துறையில் ஊக்கப்படுத்த வேண்டும்.

விளையாட்டுகளில் மதிநுட்பமானது எனக் கருதப்படுவது சதுரங்கம் [செஸ்]. இது உள்ளரங்க விளையாட்டுகளில் ஒன்றாக வருகிறது. உள்ளரங்க விளையாட்டுகளுக்கு புதன் அதிபதி. உலகப் புகழ் பெற்ற முன்னணி தமிழக செஸ் வீரரின் ஜாதகம் என்னிடம் உள்ளது. அதில் சுக்கிரன், புதன், சனி, சந்திரன் ஆகிய 4 கிரகங்களும் கூட்டாக இருக்கின்றன. அதிலும் புதன் சுக்கிரன் வீட்டில் அமர்ந்துள்ளார். சுக்கிரன் ஆட்சி பெற்றுள்ளார். இதன் காரணமாக தொடர்ந்து பல ஆண்டுகளாக சதுரங்கத்தில் அவரது வெற்றிக் கொடி பறக்கிறது.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 460



அனுப்புபவர் பெயர்:...............................................

விலாசம்:...............................................

...............................................

கையொப்பம்:...............................................

## மேலிருந்து கீழ்

1.செய்தி/ புதினம்/ விடயம்
2. எரியும் செயல்
3.நாள்
4.மகிழ்வைத் தருவது.
5.சிரசில் எழுதப்பட்டது.
8.ஒரு திசை.
10. தங்களுக்கு/ தனக்கு
12. தடிமல் வந்தால் வரும்.
13. ஊர்வன வகையைச் சேர்ந்தது. பிடித்தால் விடாது.
14. கமுகு மரத்திலிருந்து கிடைப்பது.
15.பகுதி/ பங்கு
16.பலதைச் சுட்டுவது.

## இடமிருந்து வலம்

1. வம்சம்/ தலைமுறை தலைமுறையாகத் தொடர்வது.
4.ஓர் இடைச்சொல்
6.மதிப்புடையவன்
7.எச்சரிக்கைச் சொல்
9.அதிகார/ அந்தஸ்து- நிலை
11.உறுதி
12.இணக்கம் தெரிவி
13.தச்சனும் கொல்லனும் பயன்படுத்துவது
14.வேறுபாடு காட்டும் தன்மை.
16.பிரிவு/ பங்கு/ பாகம்
18.கவிச்சக்கரவர்த்தி
19.பொல்லாத் தனத்தில் ஒன்று/ நக்கல், நளினம் பண்ணும் செயல்.
20.மோகம்/ உன்மத்தம்

## சொற்சிலம்பம் போட்டி இல. 460

*சொற்சிலம்பம் 460 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2011 ஆண்டு மார்ச் 27 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஆகியன ஏப்ரல் 03 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.*

*முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.*

*அனுப்பவேண்டிய முகவரிகள்:*

**சுடர் ஒளி,**
**85, ஜெயந்த மல்லி மராச்சி மாவத்தை,**
**கொழும்பு-14.**

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### போட்டி இல. 457 இல் பரிசு பெற்றோர்

**1 ஆம் பரிசு** — **ம.ஜெனார்த்தனன்,** 2ஆம் ஒழுங்கை, முல்லை வீதி, பரந்தன்

**2 ஆம் பரிசு** — **அ.அரசரெத்தினம்,** சேனையூர் 06, மூதூர்

**3 ஆம் பரிசு** — **சி.கஜந்தினி,** சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.

## சொற்சிலம்பம் போட்டி இல.457 விடைகள்

### மேலிருந்து கீழ்

01.சுவாசம் 02.தகுதி 03.திகதி 04.ரவி 05.பண்டிதன் 08.தர 10.பட்டணம் 11.கரி 12.மான் 13.முருகன் 14.வன் 15.உடும்பு 16.அநாதி 17.காலம் 19.சில 20.புரி

### இடமிருந்து வலம்

01.சுதந்திரம் 06.வாகு 07.கவி 08.தண் 09.சதிபதி 11.கரடி 12.மாரி 13.முடவன் 15.உன் 16.அருணன் 17.காடு 18.நாகம் 19.சிலம்பு 21.தின் 22.வலம்புரி.

### பாராட்டுப் பெறுவோர்

(1) **இரா.ருபிதன்,**
தென்னிந்திய திருச்சபை, போதகர் இல்லம், உடுவில்.

(2) **திருமதி.ரஞ்சினி சிவஞானம்,**
43/1 புகையிரத நிலையவீதி, மட்டக்களப்பு.

(3) **திருமதி.தி.சிதம்பரநாதன்,**
டச் வீதி,கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

(4) **விஸ்வநாதன்,**
இல.14,பிரதான வீதி, மடுல்சீமை.

(5) **யோ.யோ.யோகராசா,**
வல்லை வீதி, தொட்டிலடி, சங்கானை.

(6) **வே.சத்தியமூர்த்தி,**
உடையார் மனல்,
வல்வெட்டித்துறை.

(7) **யோ.டொ.ஸ்டொக்,**
59/1 லேடி மெனிங் டிறப், மட்டக்களப்பு.

(8) **ஆர்.குழந்தைவேலு,**
காளி கோவில் தெற்கு வீதி, கோண்டாவில் மேற்கு.

(9) **ந.கவிதா,**
1010/21 கே.கே.எஸ்.வீதி, அரசடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(10) **கே.இராஜகோபால்,**
அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை.




**கே.ஆனந்தவேல்,**
**நீர்வேலி.**

கேள்வி: பித்தரே, சமைக்கத் தெரியாத பெண்கள் குறித்து உங்கள் கருத்தென்ன?

பதில்:பிழைக்கத் தெரிந்தவர்கள்.

**அ.அருந்ததி,**
**ஆவரங்கால்.**

கேள்வி: சீதனமாகக் காரொன்றையும் கேட்டு வாங்கிய ஒருத்தர் வெளியில் செல்லும் போது காரில் தனித்தே செல்கிறாரே?

பதில்:கார் மட்டும் தான் வெளியில் கொண்டு செல்லக் கூடியதாக இருக்கிறது போலும்.

**ம.க.மாசிலாமணி,**
**புதுகுடியிருப்பு.**

கேள்வி:பூங்கொடி போன்ற பெண்ணுக்கு பூசணிக்காய் போன்ற கணவன் வாய்த்தால் எப்படியிருக்கும்.

பதில்:பூசணிக்கொடி அந்தப் பெண்ணாம் பெரிய பூசணிக்காயைத் தாங்கவில்லையபா?

**அ.அன்பழகன்,**
**மன்னார்.**

கேள்வி:காதல் கல்யாணம் பெரும்பாலும் கடைசியில் கசப்பதேன்?

பதில்:ஏன், பேசிச் செய்யும் கல்யாணம் எல்லாம் கடைசி வரை நிலைக்கிறதோ?

**கு.திலீப்,**
**இருபாலை.**

கேள்வி :இந்த ஆண்டின் சிறந்த ஜோக் ஒன்று சொல்லுங்களேன்?

பதில்:தற்போதைய அரசியல் சூழ்நிலையில் பொது மக்கள் கொல்லப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துமாறு லிபியத் தலைவரிடம் எமது ஜனாதிபதி வலியுறுத்தியிருப்பதைச் சொல்லலாம்.

**கே. ரட்ணம், யாழ்ப்பாணம்.**

கேள்வி:சாதுரியமாக மற்றவரை மட்டம் தட்டுவதற்கு ஒரு உதாரணம் சொல்லும் பித்தரே.

பதில்:வழக்கொன்றில் சாட்சிக் கூண்டில் நின்ற சாட்சிக்காரரைப் பார்த்து ''உன் முகத்தில் ஒரு கயவனின் தோற்றம் தெளிவாகத் தெரிகிறது'' என்றார் அந்தப் பிரபல வழக்கறிஞர். உடனே அந்தச் சாட்சிக்காரன் ''நன்றி ஐயா, என் முகம், முகம் பார்க்கும் கண்ணாடி போலப் பிரதிபலிக்கிறது என்பது இப்போது தான் எனக்குத் தெரிகிறது'' என்றானாம்.

**பொ.நடராசா,**
**புதுக்குடியிருப்பு.**

கேள்வி:பித்தரே, உலகில் இனிமையான சங்கீதம் எது?

பதில்:வேறென்ன,குழந்தையின் மழலை மொழிதான். இதை வள்ளுவர் சொல்லி வைத்தாலும் யதார்த்தமும் அது தானே.

**ப.பவித்திரா, மட்டக்களப்பு.**

கேள்வி:ஜப்பானில் பல இளம் பெண்கள் தமது கறுப்புத் தலைமயிருக்கு வெள்ளை 'டை' பூசுவது பாஷனாமே?

பதில்:அங்கு இளம் பெண்கள் கறுப்புத் தலைமயிருக்கு வெள்ளையடிக்கிறார்கள். ஆனால் இங்கு கிழவிகள் தங்கள் வெளுத்த தலைமயிரைக் கறுப்பாக்குகிறார்கள். இது தான் உலகமையா!

**வே.உருத்திராபதி,**
**வத்தளை.**

கேள்வி:என்னை எனது தாயார் கஷ்டம் என்பது என்னவென்றே தெரியாமல் இவ்வளவு காலமும் வளர்த்து விட்டார். உண்மையில் கஷ்டம் என்றால் என்ன பித்தரே?

பதில்:உடனே ஒரு கல்யாணத்தைச் செய்து கொள்ளும். தாரத்திடம் மாட்டிக்கொண்டு விழிக்கும் போது உமக்குப் புரியும் கஷ்டம் என்றால் என்னவென்று.

**ஆ.வேல்முருகோன்பிள்ளை,**
**கந்தரோடை.**

கேள்வி:புருஷனை வெருட்டி மிரட்டும் பெண்கள் திருடன் வந்தால் கத்திக் கூப்பாடு போடாமல் அவனையும் மிரட்டலாம் தானே.

பதில்:மிரட்டலாம் தான்; ஆனால் திருடன் பயப்படுவது தனது பெண்டாட்டிக்கு மட்டுமே; அடுத்தவன் பெண்டாட்டிக்கு அல்ல.

### இந்த வார ஜோக்.

பரம்பரைப் பணக்காரரான அவரிடம் பணத்துக்குக் குறைவே இல்லை. ஆனால் புத்தி மட்டும் கிடையாது. அத்தோடு அப்பாவியும் கூட.

ஆண்டு தவறாமல் அவரது மனைவி குழந்தை பெற்றுக் கொண்டே இருந்தது அவருக்குப் பெரும் கவலை தந்தது.

அதைத் தடுக்க அவர் மேற்கொண்ட முயற்சி எதுவுமே பலனளிக்காத நிலையில் பிரபல டாக்டர் ஒருவரிடம் ஆலோசனை பெறச் சென்றார்.

மேற்கொண்ட முயற்சிகள் குறித்த அத்தனை விபரங்களையும் கேட்டறிந்த அந்த டாக்டர் கடைசியில் ''இவ்வளவு முறைகளும் பயனளிக்காவிட்டால் நீங்கள் உங்களது மனைவிக்குக் கிட்ட நெருங்காமல் இருப்பது தான் இதற்கு ஒரே வழி'' என்று ஆலோசனை கூறினார்.

''ஐயோ டாக்டர், கடந்த சில வருடங்களாக நான் அதையும் செய்து பார்த்து விட்டேன்?'' என்றார் அந்த அப்பாவிப் பணக்காரர் பரிதாபமாக.






தொகுப்பு:- எஸ்.ஜெயா



அ.சோபிகன்,
சாவகச்சேரி.



சி.கஜவர்ந்தனன்,
யா/கனகரத்தினம் மகா
வித்தியாலயம்.



ச.மதுமிதா,
யா/ மகாஜனாக் கல்லூரி
தெல்லிப்பளை.




பா.ஆதிரையன்,
யா/ இந்து ஆரம்பப்
பாடசாலை.



ந.தேனுஜா,
யா/ மானிப்பாய் மகளிர்
கல்லூரி.

# பாரதியார்



1882 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதி தமிழில் கார்த்திகை 27 ஆம் திகதி எட்டையபுரத்து ஜமீனில் பிறந்தார். இவர் தந்தை பெயர் சின்னச் சாமி ஐயர். தாய் பெயர் இலட்சுமி அம் மாள். அவரது இளமைப் பெயர் சுப்பிர மணியர். பாரதியாருக்கு ஐந்து வயதாக இருக்கும் போது தாயாரை இழந்தார்.

1889 ஆம் ஆண்டு அவரது தந்தை மறுமணம் செய்தார். அப்போது பாரதி யாருக்கு வயது ஏழு. பதினொரு வயதில் எட்டயபுரம் சமஸ்தானப் புலவர்கள் பெருஞ்சபையில் அவரது கவிப்புல மையை வியந்து "பாரதி" என்ற பட்டத்தை அளித்தனர். மகாகவி சுப்பிரமணிய பாரதியார் காந்தியடிகளுடன் சேர்ந்து சுதந்திரத்துக்காகப் பாடுபட்டார்.

1897 ஜூன் மாதம் 14 ½ வயதான பாரதிக்கும் 7 வயதுச் செல்லம்மாவுக் கும் திருமணம் செய்து வைத்தனர். இல் லறம் நல்லறமாக அமைந்தது. ஸ்வதேச கீதங்கள் எனும் தொகுப்பை வெளியிட் டார். பின் ஜன்மபூமி என்னும் இரண்டா வது நூலை வெளியிட்டார். எட்டைய புரத்திற்குச் சென்று திருவல்லிக்கேணி கோயிலில் யானையால் தாக்குண்டு யானையின் காலடியில் விழுந்தார்.

பின் இவருக்கு வயிற்றுக் கடுப்பு நோய் வந்தது. இந்த நோய் கடுமையா கிச் சென்றது. பாரதியார் மருந்துண்ண மறுத்தார். 1921ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12ம் திகதி நள்ளிரவு தாண்டி அதிகாலை 1.30ற்கு மறைந்தார். 39 வயது நிறையவில்லை. இவர் இவ் வுலகில் 39 வருடம் வாழ்ந்து பல கவி தைகளை எழுதித் தமிழுக்குத் தந்தார்.

சி.ஸபிஷன்,
வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்.

சிறுவர்களே! இது உங்கள் பக்கம். உங்கள் ஆக்கங்களை சிறுவர் சுடருக்கு அனுப்பி வையுங்கள்.
முகவரி: சிறுவர் சுடர்,
சுடர்ஒளி,
361,கஸதூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# சிங்கமும் எலியும்



ஒரு மாலைவேளையில் ஒரு சிங்கம் காட்டில் நித்திரை செய்துகொண் டிருந்தது.அப்பொழுது மகிழ்ச்சியுடன் விளையாட எண்ணிய ஒரு சிறிய எலி அதன் அருகில் வந்தது.



எலி ஒரு சின்னப்பிராணி அது உலகை அறியாதது. எலி சிங்கத்தின் மேல் ஏறி மூக்கின் மேலாக வழுக்கி விளையா டியது. சிங்கம் திடீரென விழித்துக் கொண்டது. தன் மீது ஒரு சிறிய எலி ஏறி ஓடி விளையாடுவதைக் கண்டது.



சிங்கம் கர்ஜித்தது. எலியைப் பிடித்துக் கொண்டது. அதனைக் கொன்று விடுவதைப் போல் கோபத் தோடு பார்த்தது. எலி பயந்து தன்னை விட்டு விடும்படி கெஞ்சியது. தன்மீது கருணை காட்டும்படி மன்றாடியது.




"சின்னப்பிராணியான. உன்னை விடு வதால் எனக்கு எந்த நன்மையும் ஏற்ப டப்போவதில்லை". என்று கூறி சிங்கம் எலியை விடுவித்தது. எலி "நான் சிறி யவன் ஆனாலும் உதவியை மறக்கமாட் டேன்". என்று சொல்லிச் சென்றது.



சிலநாட்களின் பின் சிங்கம் வேடன் ஒருவனின் வலையில் சிக்கியது. கூக் குரலிட்டது. தப்பிச் செல்ல வழிஅறி யாது தவித்தது. யாராவது உதவிசெய்ய வரமாட்டார்களா? என எதிர்பார்த்தது.



சிங்கம் போட்ட சத்தத்தைக் கேட்டு சிறிய எலி அவ்விடத்திற்கு ஓடிவந் த்து.தனது சிறிய பற்களால் வலையை அறுத்து வலையில் சிக்கியிருந்த சிங் கத்தை விடுவித்தது.



சிங்கம் மகிழ்ச்சியுடன் எலியைச் சுமந்து கொண்டு தனது குகைக்குச் சென்றது.

# கருணைக் கொலை எனச் சாதித்த கொலையாளி

உண்மைச் சம்பவம்

ஜெகன்



விவாகரத்துக் கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்த சாள்ஸ் கெலனின் மனைவி தனது முடிவுக்கான காரணத்தைத் தொடர்ந்து முன்வைத்தாள். ''ஒரு நாள் இரவு நாங்கள் கண்காட்சியொன்றிற்குச் சென்றோம். அங்கு சாள்ஸ் என்னைத் தனியே எனது பெற்றோருடன் விட்டுவிட்டுத் தன்பாட்டிலே அங்குமிங்கும் அலைந்து திரிந்தார். இது எனது பெற்றோரின் முன்னிலையில் எனக்குப் பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியது. அத்துடன் குடிக்கவும் தொடங்கிவிட்டார்'' என அவள் நீதிமன்றில் தெரிவித்தாள்.

வீட்டில் மாரிகாலத்தில் குளிரிலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ள வெப்பமூட்டியினை(THERMOSTAT) செயற்படவைத்தால் அதனை நிறுத்திவிடுவார். இதுகுறித்து அதிருப்தி தெரிவித்தால் வெப்பமூட்டியினை 27 டிகிறிக்கு அதிகரிக்கச் செய்துவிடும் விசித்திர பழக்கத்தைக் கொண்டவராக இருந்தார். மனைவியும், பிள்ளைகளும் வெப்பத்தில் சிரமப்பட, அவர் தனது அறையில் யன்னல்களை அகலத் திறந்துவிட்ட நிலையில் குளிரில் நித்திரை கொள்வார்'' எனவும் அவள் குற்றஞ்சுமத்தினாள். விவாகரத்தும் வழங்கப்பட்டது.

1989-1990களில் குடிபோதையில் வீதித் தடைகளை மீறி வேகமாகக் காரைச் செலுத்தியதனால் சாள்ஸ் கெலின் மூன்று தடவைகள் சிறிய விபத்துக்களுக்குக் காரணகர்த்தாவானான். அதேபோன்று அவன் பல தடவைகள் வாகனப் போக்குவரத்துக் காவல்துறையினருக்கு அபராதங்கள் செலுத்தினான்.

1992 தை மாதம் அவர் தாதியாகப் பணிபுரிந்த புனித பர்னபாஸ் வைத்தியசாலையில் இருந்த காரணம் வெளிப்படையாகத் தெரிவிக்காத விதத்தில் வேலையிலிருந்தும் நீக்கப்பட்டான். ஆயினும் ஒரு மாதத்தின் பின்னர் ''பிலிப்ஸ்பேர்க்கில்'' உள்ள வொரன் வைத்தியசாலையில் தாதியாக பதவியில் இணைந்தான்.

சாள்ஸ்சின் மனைவி அட்றியன் விவாகரத்துக்கு வழக்குத் தொடுத்த சிறிது காலத்திற்குள் மைக்கலி ரொம்லின்சன் எனும் தாதி சாள்ஸ்சின் மனதில் இடம் பிடித்துக்கொண்டாள். ஆனால் அவளுக்கு ஏற்கனவே ஓர் காதலன் இருந்தது மட்டுமன்றி, அவள் சாள்ஸ் மீது வெறுப்பை வெளிப்படுத்தி வந்தாள். அவள் தனது காதலனுடன் தனது வீட்டில் ஓர் இரவு உல்லாசமாக இருக்கையில் வீட்டின் பின்புறமாக உட்பிரவேசித்த சாள்ஸ் அங்குள்ள யன்னல் கண்ணாடிகளையெல்லாம் நொருக்கி விட்டுச்சென்றுவிட்டான். அடுத்தநாள் மாலையில் கலென் அவளைத் தொலைபேசிமூலம் அழைத்து வீட்டினுள் பிரவேசித்து அடித்து நொருக்கியது தானே என்பதை ஒத்துக்கொண்டான். ரொம்லின்சன் பொலிஸில் முறைப்பாடு செய்தமையைத் தொடர்ந்து நீதிமன்றில் வழக்கு நடைபெற்றது. சாள்ஸ் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டு மன்னிப்புக்கோரியதன் நிமிர்த்தம் நீதிமன்று அவனை ஒருவருட நன்னடத்தைப் பிணையில் விடுவித்தது.

விவாகரத்தின் பிரதிபலனாக சாள்ஸ் முதல்தாரப் பிள்ளைகளுக்கு ஜீவனாம்சமாக மாதாந்தம் 1460 டொலர்களைச் செலுத்தவேண்டியிருந்தது. அவனுக்குக் கடன்பளு ஏராளமாக இருந்தது. உரிய கடன்களைத் தீர்ப்பதற்கு வகையற்ற நிலையில் கடன் கொடுத்தவர்களால் அவன் மீது 1998இல் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது. அடுத்து வந்த ஒன்பதரை வருடங்களில் அவன் எட்டிற்கும் அதிகமான வைத்தியசாலையில் பணி புரிந்தான்.

இரவு நேரக் கடமை நேரங்களையே அவன் தனது வேலைக்கான நேரமாகத் தேர்ந்தெடுத்தான். அவனது தனிப்பட்ட வாழ்க்கை ஒரு சுற்றுவட்டத்திற்குள் தொடர்ந்தது.

1997இல் நியூஜேர்சி வைத்தியசாலையில் கடமையை உரிய வகையில் புரியாததன் காரணமாக வேலையில் இருந்து நீக்கப்பட்டான். தொழில் ஏதுமின்றி இருந்த காலப்பகுதியிலும் சாள்ஸ் வைத்தியசாலையின் அவசரசிகிச்சைப் பிரிவில் இரத்த அழுத்த நோய்க்கான சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டிருந்தான்.

1998 வைகாசி முதல் வாரஇறுதியில் ஓர் இரவு பென்சில் வேனியாவில் உள்ள நலன்பேணும் மற்றும் புனர்வாழ்வு மையத்தில் சாள்ஸ் இரவு நேரக்கடமையில் இருந்தவேளையில் ஓர் வயதான நோயாளி அதிகாரபூர்வமற்ற வகையில் இன்சுலின் மருந்து ஏற்றப்பட்டமையால் மரணமானார். பிரான்சீஸ் கென்றி என்ற பெயர் கொண்ட இம் முதியவர் கார் விபத்தொன்றில் சிக்கிச் சகிக்கமுடியாத வலியுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இச்சம்பவத்தின் பேரில் தாதியர்களின் பொறுப்பாளரான கென்றிகிம் பெலிபீப் என்பவர் பணி நீக்கம் செய்யப்பட்டார்.

அவ் வேளையில் அத்தாதி தன்னைச் சந்தேகப்பட்டதற்குப் பதிலாக நோயாளியை அதே அறையில் வைத்திருந்த கலென் மீது சந்தேகப்பட்டிருக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தார். அதன் பேரில் வைத்தியசாலை கலென் மீது விசாரணைகளை நடத்தி மருந்து விநியோகங்களுக்குரிய வழிமுறைகளைப் பின்பற்றத் தவறிவிட்டதாக பணி நீக்கம் செய்தது. அதன் பின்னர் ஒரு வாரத்திற்குள்ளாகவே கலென் பென்சில்வேனியாவின் ஈஸ்ரன் வைத்தியசாலையில் ஓர் வேலையைத் தேடிக்கொண்டான்.

**தாதியாகத் தொழில் புரிந்த காலப்பகுதியில் 40 நோயாளிகளை 'டையொக்சின்' மருந்து ஏற்றித் தான் கொலை செய்ததாக கலென் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தான்.**

ஈஸ்ரன்' வைத்தியசாலையின் அவசர சிகிச்சையறையில் இருந்து 78 வயதான ஓட்ரொமர் செரம் என்ற தனது தந்தையாரை சக்கரத்தள்ளுவண்டியில் வைத்து வெளியே தள்ளிக்கொண்டு வந்த ஒல்லியான தோற்றத்தைக் கொண்ட ஆண் தாதியைப் பார்த்த நோயாளியின் மகளான கிறிஸ்ரினாவுக்கு ஏதோ ஒரு சந்தேக உணர்வு தோன்றியது. ''அத்தாதி ஓர் சிரத்தையற்ற ஜடம் என நினைத்தேன். அத்துடன் அவன் எவ்வித உணர்ச்சியையும் காட்டவில்லை. அன்றியும் அவன் கையில் ஓர் மயக்கமூட்டும் ஊசியும் இருந்தது.'' எனக் கிறிஸ்ரினா நினைவு கூர்ந்தாள். அவனை அவ்வூசி எதற்காக என வினாவியபோது சில சமயங்களில் அவரது இதயத்துடிப்பு நிற்குமாயின் தேவைப்படும் என அத்தாதி கூறியதாகவும் கிறிஸ்ரினா தெரிவித்தாள்.

நிஜமாகவே ஓட்ரோமர் செரத்தின் இதையத்துடிப்பு மூன்று நாட்களின் பின்பு நின்றுவிட்டது. பிரேத பரிசோதனையின்போது உண்மை வெளிவந்தது. அவருக்கு ''டையொக்சின்'' மருந்து அதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை நிரூபணமாகியது. இறந்தவர் இருதயத்தில் ஓர் இறுக்கப் பிடிப்பு இருப்பதாகக்கூறி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இந்நோயாளிக்கு 'டையொக் சின்' செலுத்தப்படுவதற்கு மருத்துவக் காரணங்கள் ஏதுமில்லை.

கலென் அவன் வசிக்கும் வீட்டில் வைத்துத் தற்கொலை முயற்சியினை மேற்கொண்டான். எனினும் அயலவர்களின் முயற்சியால் அவன் காப்பாற்றப்பட்டான். இத் தற்கொலை முயற்சிக்கு சில மாதங்களின் பின்னர் கலென் எட்டாவது தடவையாகத் தாதி வேலையை பெத்லேகம் புனித லூக்ஸ் வைத்தியசாலையில் ஏற்றுக்கொண்டான். அவன் அங்கு இரண்டு வருடங்கள் பணியாற்றினான். ஆனால் 2002 ஆனியில் அவ் வேலையிலிருந்தும் விலகிவிட்டான்.

வைத்தியசாலை நிர்வாகம் இவனது கடமை நேரங்களில் அதிக மரணங்கள் நேரிடுவது குறித்துக் கவனம் செலுத்திக் காலம் தாழ்த்தாது இவன் மீது விசாரணைகளை மேற்கொண்டதே அதற்குக் காரணம். எனினும் குற்றவியல் ஆய்வு நிபுணர்களால் கூட அதற்கான உறுதியான ஆதாரம் எதனையும் கண்டு கொள்ள முடியவில்லை. எனவே கலென் அங்கு வேலையைத் தானாகவே விட்டுவிலகினான்.

அடுத்ததாக கலென் அலென்ரவுண் என்னும் இடத்திற்கு அருகேயுள்ள வைத்தியசாலையில் சேர்ந்தான். எனினும் அவனது முன்னைய நடத்தைகள் குறித்து அறிந்த வைத்தியசாலை நிர்வாகம் அவனை 18 நாட்களில் வேலையைவிட்டு நீக்கிவிட்டது.

2002 புரட்டாசியில் கலென் மீண்டும் பத்தாவது தடவையாக சம்மாவில்லயில் உள்ள வைத்தியசாலையில் வேலைக்குச் சேர்ந்தான். ஆனால் அதுவே அவனது கடைசியும் முடிவுமான வேலையாக இருக்கப் போகின்றதென்பதை அவன் அப்போது அறிந்திருக்கவில்லை.

இங்குதான் கலெனுக்கு கஷ்டகாலம் தொடங்கியது. முன்னர் பணிபுரிந்த வைத்தியசாலைகள் போலல்லாது இவ் வைத்தியசாலை நிர்வாகம் மருந்துகள் ஊசிகள் சம்பந்தப்பட்ட விநியோகங்கள் பாவனை ஆகிய சகலதையும் உயர் தொழில்நுட்ப முறையினூடாக கணினியில் பதிவுசெய்து அதன் மூலம் கண்காணிப்பை மேற்கொண்டு வந்தது. களஞ்சியத்திலிருந்து மருந்துகள், ஊசிவகைகள் சம்பந்தப்பட்ட எதையும் பெறும்போது அங்கு பெறுபவர் பெயர், மருந்து பயன்படுத்தப்போகும் நோயாளியின் பெயர் எனப் பலவகை விபரங்களும் கணினியில் பதிவாகும். இவ்வாறான பல இறுக்கமான நடைமுறைகள் இருந்தபோதிலும் 2003 ஆனி 15ஆம் திகதியன்று இரவுக் கடமையின்போது கலென் புற்றுநோய் காரணமாக அனுமதிக்கப்பட்டிருந்த ஜின் யுஸ்கான் என்ற பெண்மணி மீது தனது கைவரிசையைக் காட்டிவிட்டான். மறுநாள் காலை அவளது நிலை மோசமடைந்தது. அவளது உடலில் ''டையொக்சின்'' மேலதிகமாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. மருத்துவர்களின் அயராத முயற்சியால் அவள் காப்பாற்றப்பட்ட போதிலும் அப் பெண்மணி மூன்று மாதங்களின் பின்னர் இறந்துவிட்டாள்.

மீண்டும் அதே ஆண்டு ஆனி 27அம் திகதியன்று கலென் ''புளோறியன் ஷோல்'' என்ற பெயருடைய நோயாளி மீது குறி வைத்தான். அவர் மறுநாட்காலையில் இறந்தார். பரிசோதனையின்போது அவரின் உடலிலும் ''டை யொக்சின்'' செலுத்தப்பட்டிருந்தமை தெரியவந்தது.

தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் இவ்வாறான மரணங்களை அரச சுகாதாரத் திணைக்களத்தால் வெறுமனே புறக்கணிக்க இயலவில்லை. தீவிர விசாரணைகள், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் காரணமாக 2002 ஐப்பசி மாதத்தில் கலென் வேலையிலிருந்து நீக்கப்பட்டான். அவன் தனது வேலைக்கான விண்ணப்பப் படிவத்தில் வழங்கிய விபரங்களில் முன்னர் வேலை பார்த்த இடங்கள் பற்றி தவறான விவரங்கள் வழங்கியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதால் அவன் மீது சந்தேகம் வலுத்தது.

2002 மார்கழி 12ஆம் திகதி உணவகம் ஒன்றைவிட்டு வெளியேறும்போது கலென் இரகசியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டான். விசாரணையை அடுத்து அவன் குற்றங்களை ஒப்புக்கொண்டான். தாதியாகத் தொழில் புரிந்த காலப்பகுதியில் 40 நோயாளிகளைத் தான் இவ்விதம் கொலை செய்ததாக அவன் ஒப்புதல் வாக்குமூலமளித்தான். இக்கொலைகளையெல்லாம் கருணைக் கொலையாகவே தான் கருதியதாக அவன் கூறினாலும், அவனால் பலியானவர்களில் பலர் கடுமையான நோயாளிகள் அல்லர்.

கலென் விடயத்தில் புலன்விசாரணையாளர்களும், துப்பறிவாளர்களும் தலையைப்போட்டுப் பிய்த்துக்கொண்டிருக்கையில், பலியானவர்களின் உறவினர்கள் அடுத்து என்ன செய்வது எனக் குழம்பிய நிலையில் இருந்தனர். அதே நேரத்தில் சம்பந்தப்பட்ட வைத்திசாலைகளுக்கு எதிராகப் பலர் வழக்குகள் தொடுத்தனர். இதன் காரணமாக நீண்டகாலத்துக்கு முன்பு புதைக்கப்பட்ட சம்பந்தப்பட்ட நோயாளிகளின் சடலங்கள் யாவும் தோண்டியெடுக்கப்பட்டு பலவித பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டன.

வழக்கின் இறுதியில் அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. எனினும் அவனது மனோநிலைப் பாதிப்புப் பற்றிய ஆய்வறிக்கைகளி[illegible] கருத்திற்கொண்டு அவனுக்[illegible] கப்பட்ட மரண தண்டனை[illegible] டனையாகக் குறைக்கப்[illegible]

# உலகக் கிண்ண பரிசுப் போட்டி

**சுடர் ஒளி நாளிதழை வாங்கிப் படித்து ரூபா 2 லட்சத்துக்கு மேல் ரொக்கப் பரிசை வெல்லுங்கள்**

சுடர் ஒளி

**'சுடர் ஒளி'யின் 10ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 10ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் பரிசுப் போட்டி**

## வெல்லப்போகும் அணி எது?

WHICH TEAM WILL WIN?

★ உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி சம்பந்தமான ஒவ்வொரு சுற்றிலும் கேட்கப்படும் வினாவுக்கான சரியான விடையை இப்பக்கத்தில் தரப்பட்டுள்ள கூப்பனில் தெளிவாக எழுதி எமது முகவர்களிடம் உள்ள சேகரிப்புப் பெட்டிகளில் இட்டு அல்லது எமக்கு தபால் அட்டையில் (போஸ்ட் காட்) அனுப்பி

| | |
|---|---|
| சுற்று 1 — காலிறுதிப் போட்டி<br>1ஆம் பரிசு — 15,000<br>2ஆம் பரிசு—10,000<br>3ஆம் பரிசு—5,000 | சுற்று 2 — அரையிறுதிப் போட்டி<br>1ஆம் பரிசு — 20,000<br>2ஆம் பரிசு—15,000<br>3ஆம் பரிசு—10,000 |
| சுற்று 3 — இறுதிப் போட்டி<br>1ஆம் பரிசு — 25,000<br>2ஆம் பரிசு—20,000<br>3ஆம் பரிசு—15,000 | சுற்று 4 — இறுதிப் போட்டி முடிவு<br>1ஆம் பரிசு — 30,000<br>2ஆம் பரிசு—25,000<br>3ஆம் பரிசு—20,000 |

இறுதிப் போட்டியின் நாயகன் மற்றும் தொடரின் நாயகன் பரிசு - 10,000

★ மேலும் 20 அதிஷ்டசாலிகள் தெரிவுசெய்யப்பட்டு 10 பேருக்கு ஒரு வருடத்துக்கான கம்ப்யூட்டர் ருடே பிரதிகளும், ஏனைய 10 பேருக்கும் புலமைச் சுடர் பிரதிகளும் இலவசமாக வழங்கப்படும்.

200,000 ரூபாவுக்கு மேல் வெகுமதியை வெல்லுங்கள்

சரியான எதிர்வு கூறலுக்கு மகத்தான ரொக்கப் பரிசுகள்

## அனுசரணையாளர்கள்

SONY BRAVIA — LCD TV — SIEDLES

Colombo International Nautical& Engineering College — Gen. Hotline 0114486486,

THAMPA HOTEL & INN — Thampa Star Hotel — இல. 10, 1ஆவது ஒழுங்கை, சின்னப்புதுக்குளம், வவுனியா. T.P- 0247388010/5670262

சினஸ்சன்

சம்மாந்துறை ஹசனலி — UNP பிரதம அமைப்பாளர் — சம்மாந்துறைத் தொகுதி —

கம்ப்யூட்டர் ருடே — கணினிப் பிரியர்களின் களஞ்சஞ்சிகை — மாதாந்த இதழ்

தரம்-4, 5 மாணவர்களின் ஒரே தெரிவு — புலமைச் சுடர்

THAMAIHAN SECRETARIAL SERVICES


Johnson's baby

COLOGNE சலுகை



125 மி.லீ. ரூ. ~~225/=~~ ரூ. 199/=

50 மி.லீ. ரூ. ~~125/=~~ ரூ. 110/=

125 மி.லீ. வகைகள்: பவுடர் மிஸ்ட், மோர்னிங் டியூவ், ஹெவன், பவுன்ஸ்
50 மி.லீ. வகைகள்: பவுடர் மிஸ்ட், மோர்னிங் டியூவ், ஹெவன்

100 CELEBRATING OVER A 100 YEARS OF THE LANGUAGE OF LOVE — Johnson's baby

இச்சலுகை 2011 மார்ச் 31 வரை

# NEU EINGETROFFEN

Möbel Ferrari



CHILL OUT

1995.-

Wasserstrasse 28
8340 Hinwil
Tel. 044 931 20 40
Fax. 044 931 20 49
info@moebel-ferrari.ch
moebel-ferrari.ch

Öffnungszeiten
Montag bis Freitag
09.00 bis 20.00
Samstag
09.00 bis 18.00

0.0% Direkt Finanzierung